கல்கி

ஸ்வீட்டா...ஸ்லைட்டா...ஸ்மார்ட்டா...

KALKI • 05.09.2010 • ரூ.10.00 • 96 பக்கங்கள்



"பாடுங்கோ... ஆடுங்கோ..!"



"ஜாதி வாரி கணக்கெடுப்பு கூடாது!"

ஆரம்பம் :
தீராத விளையாட்டு விட்டலன்-II

செப்டம்பர் மாதப் பட்டுப்புடவைப் ...சுப் போட்டி ஆரம்பம்!

வழங்குவோர்:





அழகான அம்பாஸிடர்!



சிறுநீர் கசிவா ?

அடி இறக்கமா ?

இலவச தொலைபேசி ஆலோசனை : 0422 2323456

GAURI - UROGYNECOLOGIST

பெண்களுக்கு ஏற்படும் சிறுநீர் கசிவு, அடிஇறக்கம் பிரச்சனைகளுக்கு தீர்வு!

இருமினாலோ, தும்மினாலோ சிறுநீர் கசிகிறதா ?

"சிலிங் சிகிச்சை"

அமெரிக்கா/இங்கிலாந்தில் பயிற்சி பெற்ற மருத்துவர்கள்! சிறந்த மருத்துவ முறைகள்!

GAURI UROLOG

(Chennai only)

ஆண்களுக்கு ஏற்படும் பிராஸ்டேட் பிரச்சனைகள்

சிறுநீர்ப்பை, சிறுநீரகத்தி ஏற்படும் கற்கள்

அவசரமாக அடக்கமுடியாமல் சிறுநீர் கழிக்கும் பிரச்சனைகள்

புற்றுநோய்

GAURI THE CONTINENCE CENTER

GAURI

Chennai
No1. Crescent Park St
T.Nagar
Chennai -17
Ph:044-24341055
044-24322591

Coimbatore
Bala Medical Center
Ramanathapuram
Coimbatore - 45
Ph:0422-2323456
0422-2323333

Bangalore
(விரைவில்)
Motherhood Hospital
IndraNagar

www.urogynecology.in

கல்கி

05.09.2010



76 ஆரம்பம்: தீராத விளையாட்டு விட்டலன் பாகம்-2



07 மனைவி பேச்சைக் கேட்கும் ஸ்டாலின்!



70 ஓ பக்கங்கள்



செப்டம்பர் மாதப் பட்டுப் புடவைப் பரிசுப்போட்டி ஆரம்பம்



10 ஜாதி வாரி கணக்கெடுப்பு கூடாது!





கோகுலாஷ்டமி ஸ்பெஷல்


42 ஜெயகிருஷ்ண தீட்சிதர் பேட்டி!



அழகான

'ஓம் சாந்தி ஓம்' படம் மூலம் இந்தி திரைப்பட உலகில் பிரபலமான தீபிகா படுகோனைச் சுற்றிலும் எப்போதும் பரபரப்புக்குப் பஞ்சம் இருக்காது. டோனியோடு காதல் என்ற 'கிசுகிசு' வெளியானபோது யார் இந்தத் தீபிகா என்று இந்தியாவே முணுமுணுக்க ஆரம்பித்தது. இதற்கிடையே இந்தி நடிகர் ரன்பீருக்கும் எனக்கும் இடையே இருப்பது காதல்தான் என்று மீடியாவிடம் பொட்டென்று போட்டு உடைத்தார் தீபிகா. பிறகு இருவரும் பிரிந்தபோது ரன்பீர் காதலை வெளிப்படையாக ஒப்புக்கொண்டது தவறு என்றும் கூறினார். எது எப்படி இருந்தாலும் அடுத்தடுத்த பட வாய்ப்புகளில் கவனமாக இருந்தார். விளம்பரத் துறையில் அழகான அம்பாஸிடர் என்ற முத்திரை வேறு. இதற்கிடையில் சல்மான் கானுடன் சேர்ந்து நடிக்கவிருந்த படத்திலிருந்து திடீர் என்று தீபிகா நீக்கப்பட்டு, அந்த இடத்துக்கு அஸின் தேர்வாகியிருக்கிறார். பத்திரிகையாளரிடம் பேசிய தீபிகா, ''பொறுத்திருங்கள், அந்தப் படத்தில் நான்தான் நடிப்பேன்'' என்று அதிரடி வெடி போட்டிருக்கிறார்.

'பூமணி' படத்தை இயக்கி, சிறந்த இயக்குநருக்கான மாநில விருதைப் பெற்ற மு.களஞ்சியம் நீண்ட இடைவெளிக்குப் பிறகு இயக்கும் படம் கருங்காலி. அதுமட்டுமல்ல இதில் நடிகராகவும் அறிமுகமாகிறார். அவரது கேரக்டர் பெயர் 'பொட்டலம் ரவி!'. ''படித்துப் பெரிய உத்தியோகத்தில் இருக்கும் இன்றைய இளம் தம்பதியரிடையே முளைக்கும் முக்கியமான பிரச்னையே ஈகோதான். அதை உளவியல் ரீதியாக அணுகும் படம் மட்டுமல்ல; அதற்கு என்னால் இயன்ற தீர்வையும் முன்வைத்திருக்கிறேன்'' என்கிறார் மு. களஞ்சியம். 'பூமணி' படத்தைத் தயாரித்த ஸ்ரீகுருஜோதி பிலிம்ஸ் ஜி. விவேகானந்தன்தான் 'கருங்காலி' படத்தையும் தயாரித்திருக்கிறார். பத்து லட்சம் ரூபாய் செலவில் சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு அருகே சேரி மாதிரி செட் போட்டுப் படப்பிடிப்பு நடத்தியிருக்கிறார்களாம்.



பயாஸ்கோப்



எந்தப் பாத்திரத்துக்கும் பொருந்திப் போகக்கூடிய கோலிவுட் நடிகர்களில் கரன் ராசியானவர். - இப்படித்தான் பேசுகின்றது கோலிவுட் வட்டாரம். கரனைப் பற்றி. 'இரண்டு முகம்' 'கந்தா',' வெட்டோத்தி சுந்தரம்', 'சூரன்'... என கரனின் கால்ஷீட் நிரம்பி வழிகிறது.

''எந்த வாய்ப்பும் எனக்கு இலகுவாகக் கிடைத்துவிடவில்லை. தட்டித் திறக்க வேண்டிய கதவுகளைக்கூட நான் முட்டிய பிறகுதான் திறந்தன. எனக்கான காலம் கனிய ஆரம்பித்திருக்கிறது. நான் எப்போதும் தயாரிப்பாளர்களின் நடிகன். இயக்குநர்களின் கையில் என்னை ஒப்படைத்து விடுவேன். அவர்கள் என்னைச் செதுக்குகிறார்கள்'' என்கிறார் கரன்.

அம்பாஸிடர்!





கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : சீதா ரவி
பொறுப்பாசிரியர்:
ஆர்.வெங்கடேஷ்
உதவி ஆசிரியர்கள்:
கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா
வடிவமைப்பு:
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், பா.கோபால்
தொலைபேசி : 044 - 4343 8888
தொலைநகல் : 044 - 4343 8899
ஆசிரியர் குழு:
044 - 4343 8822
kalki@kalkiweekly.com
விளம்பரப் பிரிவு:
044 - 4343 8811
marketing@kalkiweekly.com
சந்தா பிரிவு:
044 - 4343 8833
subscription@kalkiweekly.com
விற்பனை பிரிவு:
044 - 4343 8844
sales@kalkiweekly.com
இன்டர்நெட் முகவரி:
www.kalkionline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்):
உள்நாடு : ரூ.500/-
வெளிநாடு : ரூ.3,800/-

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

3

நீங்கள் கேட்டவை—தராசு

● கு.அருணாசலம், தென்காசி

? நிர்வாகிகள் ஒவ்வொருவரும் பத்து மரக்கன்றுகள் நடும் திட்டம் பா.ம.க.வில் முளைத்துள்ளது பற்றி...?

! வரவேற்கத்தக்க பிராயச்சித்தம்தான். போட்டி இல்லை எனினும் இலட்சக்கணக்கில் மரங்களை நட்டு ஜக்கி வாசுதேவ் வெகுதூரம் முன்னணியில் இருக்கிறார்.

● எம்.சம்பத், வேலாயுதம்பாளையம்

? துணை முதல்வர் அலுவலகத்துக்கு ஆங்கிலத்தில் கோப்புகள் வந்தால் ஏற்கமாட்டோம் என்ற அறிக்கை பற்றி...?

! தமிழில்தான் கோப்புகள் தரவேண்டும் என அரசாணை பிறப்பிக்கப்பட்டாலும் நடைமுறையில் அவகாசம் அளித்து, அதைத் தளர்த்துவதுதான் அறிவுடைமை. அவசரப் பிடிவாதத்தால் நிர்வாகச் சீர்கேடு அதிகமாகும்.

● ஜி.ஹரிபாலாஜி, வேம்படிதாளம்

? இந்தக் கம்ப்யூட்டர் காலத்தில்கூட கிளி ஜோசியம் இருக்கிறதே...?

! சராசரி மனித மனத்தின் பலவீனம் அத்தகையது. கிளியும் ஆக்டோபஸும் இன்றியே, கிளி ஜோசியத்தையும் ஆக்டோபஸ் ஜோசியத்தையும் கம்ப்யூட்டர் வழியே பார்க்கும் காலம்கூட விரைவில் வரும்.

● க.கவிதா, செம்மங்குடி

? நடிகர் சூர்யாவின் வளர்ச்சி சீராக இருப்பதால்தானே திரையுலகில் அவரால் நிலைத்து நிற்க முடிகிறது?

! படங்களின் எண்ணிக்கைக்கு முக்கியத்துவம் தராமல் அவற்றின் ஒட்டுமொத்த தாக்கம், வெற்றிக்கான சாத்தியக்கூறுகள் என எடைபோட்டு முடிவெடுப்பதுடன் உடல் எடையையும் கட்டுக்குள் வைப்பது சீரான வளர்ச்சிக்கான காரணங்கள்.

● ஜி.மாரியப்பன், சின்னமனூர்

? அறிவியல் சம்



* உற்சாக உத்தமர்!


பிரதமருக்குப் புகழ் இல்லையா?



* பழகிய தலைவர்!

பந்தமான கேள்விகள் உங்களுக்கு வருவதே இல்லையா? பெரும்பாலும் அரசியல் சம்பந்தமான கேள்விகளுக்கே பதில் சொல்கிறீர்களே?

! வாசகர்கள் அதிகம் பேச விரும்புவது அரசியல் பற்றியும் சமூக நடப்புகள் பற்றியுமே. இந்தக் கேள்விகள் பொதுமக்களின் அடிமனத்திலிருந்து எழுபவை. சமூக அக்கறையும் தேச நலனும் இதன் இரு தூண்கள். அறிவியல் கேள்விகள் வேண்டாம் என்றில்லை. கேளுங்களேன். எனக்குத் தெரியாவிட்டாலும் கேட்டறிந்து பதில் கூற



✱ ஆயிரம் சொன்னாலும்...

முயற்சி செய்கிறேன்.

● இரா.வேதவல்லி, சென்னை-33

? இளையராஜா இசையில் தாம் கிட்டத்தட்ட நான்காயிரம் பாடல்கள் எழுதியிருப்பதாகவும் அவை நாலாயிர திவ்யப்பிரபந்தப் பாடல்களுக்கு இணையானவை என்றும் கவிஞர் வாலி கூறுகிறாரே?

! எண்ணிக்கை அளவில் இணையானவையாக இருக்கலாம். ஆனால், ஆழ்வார்கள் அளவுக்கு, தாம் உயர்ந்தவர் என வாலி கருதினால், அதுவும் திவ்யப்பிரபந்த நாயகனின் திருவிளையாடல் என்று எடுத்துக் கொள்ள வேண்டியதுதான்!

● எஸ்.ஜெயலட்சுமி, கும்பகோணம் ☐

? "ரணதேவின் நோ பால் விவகாரத்தைப் பெரிதுபடுத்தவில்லை; அவர் என்னைச் சந்தித்து மன்னிப்புக் கேட்டுவிட்டார்" என்று ஷேவாக் சொல்கிறார். இருந்தாலும் அந்த ஒரு ரன் எடுக்காதது வருத்தமாக இருந்திருக்குமல்லவா?

! நூறு ரன்கள் எடுக்க ஷேவாகுக்கு நிறைய எதிர்கால வாய்ப்புகள் உண்டு. மன்னித்து மறக்க, இந்த வாய்ப்பை விட்டால் வேறு கிடைப்பது அரிது. அதனால் அவருடைய பெருந்தன்மையைப் போற்றுவோம்.

● சாத்தூர் சபாபதி, திருச்சி-18

? "கருணாநிதியை இனி தீயசக்தி என்றுதான் அழைக்கவேண்டும்" என்று ஜெயலிதா பேசியது, இன்றும்கூட அவர் திருந்தவில்லை என்றுதானே காட்டுகிறது?



✱ போற்றும் வாய்ப்பு

! இனி 'தீய சக்தி' என்று அழைப்பதென்ன...? வெகு காலமாகவே அப்படித்தான் கூறி வந்திருக்கிறார். தனிப்பட்ட முறையில் அவருக்குக் கலைஞர் பேரில் விரோதம் வளர்ந்துவிட்டிருக்கிறது. அதனால் தனிநபர் தாக்குதலும் பழகிப் போனது.

● ஜி.ஜெயராமன், கூந்தலூர்

? பிரதமருக்கு வரும் புகழ் அனைத்தும் சோனியாவையே சேரும் என்று தங்கபாலு



✱ சீரான காரணங்கள்

☐ ரூ.150/- பரிசு பெறுபவர்:
எஸ்.ஜெயலட்சுமி, கும்பகோணம்

✱ ரூ.75/- பரிசு பெறுபவர்:
ஜி.ஹரிபாலாஜி, வேம்படிதாளம்

கூறுகிறாரே?

! சில கோயில்களில் உத்ஸவருக் கென்று தனிப் பெருமை உண்டு! (திருவாரூர் தியாகராஜர், சிதம்பரம் நடராஜர்). மன்மோகன் சிங் அந்த வரிசையில் இடம்பெறத் தகுதி படைத்தவர்தான் என்று தராசு கூறுகிறார்!





● முழுசா வந்தாச்சு!



● ஓரவஞ்சனை உத்தரவு!

● லெ.நா.சிவகுமார், சென்னை - 33

? "சென்னையில் புதிய விமான நிலையத்தைக் கைவிட்டால், இழப்பு தமிழகத்துக்குத்தான்" என்கிறாரே முதல்வர்?

! உண்மைதான். சென்னை அருகே அசுர வேகத்தில் வளரும் தொழில் நிறுவனங்களுக்கு இன்று இருக்கும் விமான நிலையம் போதவே போதாது. இன்னொரு பெரிய விமான நிலையம் தேவை. அதேசமயம், சுற்றுச்சூழல் பாதிக் கப்படாமல் பொதுமக்கள் வீடுகளை இழக்காமல் புதிய விமான நிலையம் அமைக்கப்பட வேண்டும்.

● அ.சுஹைல் ரஹ்மான், திருச்சி-21

? 'காதல் திருமணம் செய்துகொண்ட வர்களுக்கு உடனடியாக குடும்ப அட்டை வழங்கவேண்டும்' என்று அதிகாரிகளுக்கு அமைச்சர் எ.வ.வேலு உத்தரவிட்டுள்ளாரே?

! காதல் திருமணம் புரிந்தோருக்கு மட்டு மின்றி நியாயமாக விண்ணப்பிக்கும் அனை வருக்கும் வழங்கப்படவேண்டும். பல்லா யிரக்கணக்கான போலி அட்டைகள் களையப் படவும் வேண்டும். குறுக்கே நிற்பது எங்கும் எதிலும் பரவியுள்ள லஞ்ச - ஊழல் நோய்தான்.

● ஜி.கே.எஸ்.மூர்த்தி, கோபி

? பிளாக்பெர்ரி செல்போன் களுக்கு இந்தியாவில் தொடர்ந்து அனுமதி அளிக்கும்பட்சத்தில், நாட்டின் பாதுகாப்புக்குக் குந்தகம் விளையும் என்ற மத்திய அரசின் அச்சம் சரியானதுதானே?

! நியாயமானது என்பதால்தான் பிளாக்பெர்ரியும் கண்காணிப்பு நிபந்தனைகளுக்கு ஒப்புக் கொண்டிருக்கிறது.

● அ.ராஜா ரஹ்மான், கம்பம்

? இந்திய உணவுக் கழக கிடங்கு களில் வைக்கப்பட்டுள்ள உணவுப் பொருட்கள் அதிக அளவில் கெட்டுப் போனதாக மிகைப் படுத்தப்பட்ட தகவல்கள் வெளி யாகியுள்ளன என்கிறாரே ஷரத் பவார்?

! மிகைப்படுத்தப்படுவதாக அவர் கூறுவதே பல ஆயிரம் டன் விரயமாவது குறித்த ஒப்புதல் வாக்குமூலம் ஆகிறது. அதைத் தடுக்க அல்லது தவிர்க்க, என்ன வழி என்றல்லவா அவர் யோசித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்!

● ரேவதிப்ரியன், ஈரோடு

? ஜெ.,முதல்வராக இருந்தபோது ஏன் காவிரிப் பிரச்னையைத் தீர்க்கவில்லை? அவர் கன்னடத்துக்காரர் என்பதால்தான் என்கிறாரே கனிமொழி?

! சபாஷ்! கனிமொழி இப்போதான் கழக அரசியலுக்கு முழுசா வந்திருக்கார்!

உங்கள் கேள்விகளை 'தராசு' என்று குறிப்பிட்டு kalki@kalkiweekly.comக்கும் அனுப்பலாம். உங்கள் செல்போனில், **KAGQA** என்று டைப் செய்து ஒரு ஸ்பேஸ் விட்டு, உங்கள் கேள்வி,பெயர், ஊர் ஆகியவற்றுடன் 562632 என்ற எண்ணுக்கும் எஸ்.எம்.எஸ். செய்யலாம்.

மனைவி பேச்சைக் கேட்கும் ஸ்டாலின்!

கருணாநிதி, ஜெயலலிதா மட்டும்தான் மேடையில் பேசும் போது குட்டிக்கதை சொல்ல வேண்டுமா? இதோ அண்மையில் துணை முதல்வர் மு.க. ஸ்டாலின் சொன்ன குட்டிக்கதை இது…



✱ மு.க.ஸ்டாலின்

ஒரு மன்னன், எந்த விஷயமானாலும் தம் மனைவியைக் கலந்து ஆலோசனை செய்யாமல் முடிவு எடுக்கமாட்டான். திடீரென்று ஒரு நாள் அந்த மன்னனுக்கு, தாம் மட்டும்தான் முடிவுகள் எடுப்பதற்கு முன்னால் மனைவியைக் கலந்து ஆலோசனை கேட்கிறோமா? இல்லை அரண்மனையில் அனைவருமே அப்படித்தானா என்ற சந்தேகம் வந்தது. தம் தர்பார் மண்டபத்தில் அமைச்சர்கள் முதல் ஊழியர்கள் வரை அனைவரையும் வரவழைத்து, தம் சந்தேகத்தைக் கேட்டான். எல்லோரும் தங்கள் மனைவி சொல்படித்தான் நடப்பதாகச் சொன்னார்கள்.

ஆனாலும் மன்னனின் சந்தேகம் முழுமையாகத் தீரவில்லை. தம் நாட்டுப் பிரஜைகள் எல்லோருமே தம்மைப் போலத்தான் முடிவு எடுக்கிறார்களா என்று அறிய விரும்பினான். தண்டோரா போட்டு எல்லா ஆண்களையும் அரண்மனையின் மைதானத்துக்கு வரவழைத்தான். மைதானத்தை இடது, வலது என இரண்டு பாதியாக்கி, வலது பாதியில் எல்லோரையும் நிற்கவைத்து, 'மனைவி பேச்சைக் கேட்டு நடப்பவர்கள் எல்லோரும் மைதானத்தின் இடது பக்கத்துக்குச் செல்லுங்கள்' என்று அறிவித்தான். அடுத்த சில நிமிடங்களில் ஒட்டு மொத்தமாக அத்தனை பேரும் மைதானத்தின் இடது பக்கத்துக்குச் சென்றுவிட்டார்கள். ஒரே ஒருவர் மட்டும் வலது பக்கத்திலேயே நின்று கொண்டிருந்தார். நம் நாட்டில் ஒரே ஒருவரைத் தவிர மற்ற அனைவருமே மனைவியின் பேச்சைக் கேட்பவர்கள்தான் என்று அறிந்து மன்னருக்கு ஒரே ஆச்சரியம். ஆனாலும், மனைவி பேச்சைக் கேட்காத அந்த ஒருவரைக் கௌரவிக்க விரும்பினார். அவரை அழைத்துப் பாராட்டிப் பரிசளித்துவிட்டு, நீங்கள் ஏன் உங்கள் மனைவியின் பேச்சைக் கேட்பதில்லை? என்று கேட்டவுடன், அவர், இல்லை மன்னா! நான் எந்தப் பக்கம் நிற்க வேண்டும் என்று என் மனைவியிடம் கேட்டபோது, 'யார் எங்கே நின்றாலும் சரி, நீங்கள் ஆட்டுமந்தை போல கூட்டத்தோடு கூட்டமாக இல்லாமல், தனியாக நில்லுங்கள்' என்று சொன்னாள். அதனால்தான் நான் தனியாக நின்றேன்' என்றான்.



✱ துர்கா ஸ்டாலின்

தாம் படித்து ரசித்த இந்தக் குட்டிக் கதையை ராணி மைந்தன் எழுதிய, 'எம்.பி. நிர்மல்: ஒரு தனிமரத் தோப்பு' புத்தகத்தை வெளியிட்டுப் பேசும்போது சொன்னார் ஸ்டாலின். 'மனைவி பேச்சைக் கேட்டு நடப்பதில் தவறில்லை. என் மனைவி எனக்கு எப்போதும் உறுதுணையாக இருந்து ஊக்கமளிப்பார். தாம் முதலில் உடல் உறுப்பு தானம் செய்து, அதன் மூலம் நானும் அந்த நற்பணியைச் செய்ய முன்னுதாரணமாக இருந்தவர் என் மனைவிதான்' என்று குறிப்பிட்டார்.

-மௌலி

மூலதன மந்திரம்

எம்.கே.இராதாகிருஷ்ணன்,
குரோம்பேட்டை

நான் மாநில அரசுத் துறையில் வேலை செய்து ஓய்வுபெற்றவன். பென்ஷனர். மாத ஓய்வூதியம் ரூ. 9430 வருகிறது. என் வங்கியில் பான் கார்டு நம்பர் கேட்கிறார்கள். நான் பான்கார்டு வைத்துக்கொள்ள வேண்டுமா?

உங்களுடைய பென்ஷன் தொகையை மட்டுமே வைத்துப் பார்க்கும்போது உங்களுக்கு பான் கார்டு தேவையில்லை. நீங்கள் வங்கியில் வேறு டெப்பாசிட்டுகள் வைத்திருந்து அதற்கு வங்கி தரும் வட்டித் தொகை, வருமான வரி கட்டும் அளவுக்கு இருந்தால் நீங்கள் கட்டாயம் பான் கார்டு வைத்துக்கொள்ளவேண்டும். எப்படியும் பான் கார்டு வாங்கி வைத்துக்கொள்வதே சிறந்தது.

எம். மாலதி,
தென்திருப்பேரை

பல தனியார் பெரும் தொழில் நிறுவனங்கள் பிக்சட் டெபாசிட் வாங்குகிறார்கள். வங்கி வட்டியை விட தனியார் நிறுவனங்களின் வட்டி அதிகமாகவும் இருக்கிறது. இதுபோன்ற நிறுவனங்களில் முதலீடு செய்வது நம்பிக்கையானதா?

தனியார் தொழில் நிறுவனங்கள் வாங்கும் பிக்செட் டெப்பாசிட்டில் முதலீடு செய்வது ஓரளவுக்கு ரிஸ்க் உள்ள விஷயமாகும். அந்த அளவு ரிஸ்க்கிற்குத்தான் வட்டியும் ஓரளவுக்கு அதிகமாகத் தரப்படுகின்றது. எந்த நிறுவனத்தின் டெப்பாசிட் ஸ்கீமில் பணம் போட விரும்புகின்றீர்களோ அந்த நிறுவனத்தின் நிதி நிலை மற்றும் பண ரீதியான பண்பாட்டின் வரலாறு (ability and willingness to repay) குறித்து, கொஞ்சம் தெளிவாகத் தெரிந்து கொண்டு பின்னர் முடிவெடுக்கவும்.


இரா. வேல்முருகன், தேனி

தேசிய வங்கி ஒன்றில் என் மனைவி பேரிலும் என் பெயரிலும் பிக்சட் டெப்பாசிட் செய்துள்ளேன். அதில் இருந்து வரும் வட்டிக்கு வரி உண்டு என்கிறார்கள் சிலர். இல்லை என்று இன்னும் கொஞ்சம்



உங்கள் கேள்விகளை 'மூலதன மந்திரம்' என்று குறிப்பிட்டு அனுப்பல
KAFIN என்று டைப் செய்து, ஒரு ஸ்பேஸ் விட்டு, கேள்வி, பெயர், உ

பேர் சொல்கிறார்கள். ஐந்தாண்டுகளுக்கு மேல் போட்டு வைத்தால் வரி இல்லை என்றும் சொல்கிறார்கள். நான் ஒவ்வொரு ஆண்டும் டெப்பாசிட்டை ரெனியூ செய்து வருகிறேன். என் கேள்விகள் இதுதான்: 1. வட்டிக்கு வரி உண்டா? அதை நான் என் ஆண்டு வருவாயில் காண்பித்து வரி கட்ட வேண்டுமா? 2. ஒவ்வொரு ஆண்டும் டெப்பாசிட்டை ரெனியூ செய்வது சரியானது தானே?



டி.பாலசுந்தரம்

ஒரு நபருக்கு வருமானமாக வரும் வட்டியை (வங்கியிலிருந்தோ வேறு வழியாகவோ) அவருடைய வருமான ஆண்டு வரிக்கணக்குச் செலுத்தவேண்டிய வருமானத்துடன் சேர்த்து அதற்குண்டான வருமான வரியைச் செலுத்தவேண்டும். குறைந்த

பான் கார்டு வைத்துக் கொள்வது நல்லதா?

கால டெப்பாசிட்டை விட நீண்டகால டெப்பாசிட்டுகளுக்குத்தான் வட்டி அதிகம். சில அசாதாரணமான சூழ்நிலைகளில் வட்டி விகிதம் ஏறும்போது நீங்கள் நீண்ட நாள் டெப்பாசிட் போட்டிருந்தால், உங்களுக்குக் கிடைக்கும் வட்டி மாறிய வட்டியை விட குறைவாகிவிடும். இந்தச் சூழ்நிலையைத் தவிர்க்க நினைத்தால் மத்திம காலமாக 2 -3 ஆண்டுகளுக்கான டெப்பாசிட்டில் பணத்தைப் போடலாம்.

எஸ்.சம்பத்ராஜன், ஆரணி

பள்ளி மாணவர்களுக்கான புத்தகங்கள் எழுதிய வகையில் எனக்கு ஒவ்வொரு ஆண்டும் ராயல்டி வருகிறது. இருபதாயிரம் ரூபாய்க்கு மேல் போனால், பதிப்பகத்தில், டி.டி.எஸ் (TDS) பிடித்துவிடுகிறார்கள். எதற்கு இந்த டி.டி.எஸ்?

டி.டி.எஸ் (TDS) என்றால் வருமான வரி பிடித்தம் என்று பொருள். வருமானத்தை உங்களுக்குத் தருபவர் அதில் இந்தப் பிடித்தத்தை செய்து, அதை வருமான வரித்துறைக்குச் செலுத்தி விடுவார். இது வருமான வரி சட்டத்தின்படி கட்டாயம் செய்யப்பட வேண்டிய ஒன்று. இவ்வாறு பிடித்தம் செய்து செலுத்தப்பட்ட தொகையை வருமான வரித்துறை உங்கள் கணக்கில் (பான் கார்டு எண்ணில்) வரவு வைத்துக்கொள்ளும். வருமான வரித்துறை உங்கள் டி.டி.எஸ். தொகையை, நீங்கள் வரியைச் செலுத்தியது போலவே கணக்கில் எடுத்துக்கொள்ளும். நிதியாண்டின் இறுதியில் நீங்கள் வருமான வரி செலுத்த வேண்டியிருந்தால் டி.டி.எஸ். தொகையைக் கழித்துவிட்டு மீதியைச் செலுத்துங்கள். நீங்கள் வருமான வரி செலுத்த வேண்டியதில்லை என்றால் (உங்கள் ஆண்டு வருமானம், வரி விலக்கு அளிக்கப்பட்ட தொகைக்குள் இருந்தால்), இந்தத் தொகையை ஆண்டு இறுதியில் வருமான வரித்துறையிலிருந்து திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். அதற்கான வழிவகைக்கு உங்கள் வருமான வரி ஆலோசகரை அணுகுங்கள். ●

i@kalkiweekly.comக்கும் அனுப்பலாம். செல்ஃபோனில்
பவற்றுடன் 562632 என்ற எண்ணுக்கு எஸ்.எம்.எஸ்.செய்யலாம்.

ஜாதி வாரி கணக்கெடுப்

கார்த்தி சிதம்பரம்

காங்கிரஸ் மேடைகளைத் தமது அதிரடிக் கருத்துக்கள் மூலம் கலக்கி வருகிறார் கார்த்தி சிதம்பரம். சர்ச்சையான விஷயங்களைத் துணிச்சலாகப் பேசும் கார்த்தியைச் சந்தித்தோம்.

உங்களின் மேடைப் பேச்சு கூட்டணி கட்சியான தி.மு.க.வைத் தர்மசங்கடத்தில் ஆழ்த்தும் என்று காங்கிரஸ்காரர்கள் சிலர் சொல்கிறார்களே?

''கூட்டணிக் கட்சிகளைச் சங்கடமாக்கும் அளவுக்கு நான் எந்தக் கருத்துகளையும் பேசுவதில்லை. தமிழ்நாட்டில் காங்கிரஸ் தனித்து ஆட்சியைப் பிடிக்க எப்படிப்பட்ட செயல் திட்டம் தீட்ட வேண்டும். காங்கிரஸ்காரன் தன்மானத்துடன் தலைநிமிர்ந்து நடமாட கட்சி எத்தகைய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்பதுபோன்ற கருத்துகள்தான் என் பேச்சின் மையக் கருத்து. விமர்சனம் இல்லாமல் முன்னேற முடியாது. மக்கள் பிரச்னைகளையும், காங்கிரஸ் சாதனைகளையும் குறித்து மேடைகளில் பேசத் தயங்கக் கூடாது. காங்கிரஸ் தலைவர்கள் சிலர் பொதுக்கூட்டங்களில் பேசுவதில்லை. காது குத்து, கல்யாணம் போன்ற நிகழ்ச்சிகளில் மட்டும் கலந்துகொண்டாலே கட்சி வளர்ந்து விடும் என்று செயல்படுகிறார்கள். காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசின் நேரடி சாதனைகள், மாநில அரசு மூலமாக நிதி கொடுக்கப்பட்டு நிகழ்த்தப்படும் சாதனைகள் ஆகியவற்றைப் பேசினால்தானே கட்சி வளரும்? இதைப் பேசினால் கூட்டணிக் கட்சிக்குப் பிடிக்காது என்றால் நான் என்ன செய்ய முடியும்?''

காங்கிரஸுக்கு 78 சட்டமன்றத் தொகுதிகள் வேண்டும் என்று சொல்கிறீர்களே...?

''தமிழ்நாட்டில் முப்பத்தொன்பது பாராளுமன்றத் தொகுதிகள். ஒரு எம்.பி. தொகுதிக்கு இரண்டு சட்டமன்றத் தொகுதிகள் வேண்டும் என்கிறேன். அப்போதுதான் தமிழகம் முழுமைக்கும் பரந்துபட்ட அளவில் காங்கிரஸுக்குப் பிரதிநிதிகள் இருப்பார்கள். இப்போது பதினைந்து பாராளுமன்றத் தொகுதிகளில் எங்கள் கட்சிக்குப் பிரதிநிதித்துவம் இல்லை. இது என் கருத்து. முடிவெடுக்க வேண்டியது எங்கள் மேலிடம். அவர்கள் எடுக்கும் முடிவுக்குக் கட்டுப்பட வேண்டியது என் கடமை.''

இளைஞர் காங்கிரஸ் விவகாரத்தில் நீங்கள் தலையிடக் கூடாது என்று அதன் தலைவர் யுவராஜ் சொல்கிறாரே?

''இளைஞர் காங்கிரஸ் செயல்பாடுகளிலோ அல்லது நிர்வாகத்திலோ எந்தவிதத்திலும் நான் தலையிடுவதில்லை. அதுகுறித்து கருத்தும் சொல்வதில்லை. ஆனால் என் நண்பர்கள் இளைஞர் காங்கிரஸில் பொறுப்பில் இருக்கிறார்கள். அவர்கள் நடத்தும் கூட்டங்களில் என்னைச் சிறப்பு அழைப்பாளராக அழைக்கிறார்கள். நான் மட்டுமல்லாமல் எம்.எல்.ஏக்கள், உள்ளூர் பிரமுகர்கள் என்று நிறைய பேர் வருகிறார்கள். அப்படிப் பேசக் கிடைக்கும் வாய்ப்பை நான் பயன்படுத்திக்கொண்டு கட்சி செயல்திட்டம், வளர்ச்சி குறித்துப் பேசுகிறேன். இது தவறா?''

ஜாதிரீதியான சென்ஸஸ் குறித்து என்ன சொல்கிறீர்கள்?

''இது என் தனிப்பட்ட கருத்து. கட்சிக்கும் இதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. ஜாதியை என்றுமே நான் ஏற்றுக் கொண்டதில்லை. ஜாதியை, ஜாதி அமைப்பை நிராகரிக்கிறேன். ஏற்றத்தாழ்வற்ற சமூகம் உருவாக ஜாதிகள் தடையாக இருப்பதாக நினைக்கிறேன். இதைச்

சொல்வதற்கான முழுத் தகுதி எனக்கிருக்கிறது. என் மகளைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கும்போது விண்ணப்பத்தில் இந்தியன் என்று குறிப்பிட்டு, ஜாதிகள் குறித்த கேள்விக்கு எதிரில் 'பொருந்தாது' என்று எழுதிக் கொடுத்திருக்கிறேன். அவரவர் ஜாதி எண்ணிக்கைக்கு ஏற்ப இடஒதுக்கீடு கொடுக்கவே ஜாதி ரீதியிலான சென்ஸெஸ் என்கிறார்கள். இடஒதுக்கீட்டில் ஜாதி அடிப்படையிலான அணுகுமுறையே தவறு. ஆனால் இடஒதுக்கீடு தேவை. அது பொருளாதார - சமூகச்சூழலை அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டும். இப்போதிருக்கும் இடஒதுக்கீட்டுக் கொள்கையில் பலனடைந்தவர்களே மீண்டும், மீண்டும் பயனடைகிறார்கள். எனவே பள்ளியில் படிக்கும் சூழலைக் கருத்தில் கொண்டு இடஒதுக்கீட்டை அமல்படுத்தலாம். அரசாங்கப் பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவிகள் பொருளாதாரத்தில் பிற்பட்ட நிலையில் இருப்பது மட்டுமல்லாமல் சமூகச் சூழலிலும் பின்தங்கி இருக்கிறார்கள். எனவே, அரசுப் பள்ளிகளில் படிப்பவர்களுக்கு மட்டுமே இடஒதுக்கீடு என்று சொன்னால் இன்றைய சூழலில் பொருத்தமாக இருக்கும்.''

கூடாது!



கறார் பேட்டி

பள்ளிகள் குறித்துப் பேசியதால் கேட்கிறோம். இந்த வருடம் தமிழகப் பள்ளிகளில் அரசு கல்விக் கட்டணம் நிர்ணயித்த விவகாரத்தில் பெரிய குழப்பம் நிலவுகிறதே?

''நீதிபதி கோவிந்தராஜன் தலைமையிலான கமிட்டி ஆழமாக ஆராயாமல் செயல்பட்டிருக்கிறது. கல்வி வியாபாரமாகக் கூடாது. இரண்டு கருத்துக்கு இடமில்லை. அதேசமயம், ஒரு பள்ளியின் கட்டுமானம், வசதிகள், தரத்தைக் கட்டிக் காக்க செலவழிக்கும் நிலை ஆகிய வற்றையும் கணக்கில் கொண்டு கட்டணம் நிர்ணயிக்க வேண்டும். ப்ளஸ் டு படிப்பவர்களுக்கு 11,000 ரூபாய் வருடத்துக்கு என்று நிர்ணயித்திருக்கிறார்கள். அப்படியென்றால் எல்.கே.ஜிக்கு மிகவும் குறையும். இன்றைய நிலையில் அறக்கட்டளை நடத்தும் பள்ளிகள் உட்பட ஆயிரக்கணக்கான பள்ளிகள் இந்தக் கட்டணத்தை வைத்துக்கொண்டு நடத்த முடியாது. இதில் அரசு பிடிவாதமாக இருந்தால் ஒன்றரை லட்சம் தனியார் பள்ளி ஆசிரியர்கள் வேலையிழக்க வேண்டி வரும். பள்ளிகளின் மேல் மனுவை ஏற்றுக்கொண்டு, இந்த வருடம் பிரச்னையை நன்கு அலசி, அடுத்த வருடம் முதற்கொண்டு கட்டணம் நிர்ணயித்திருக்கலாம். தரமான பள்ளிகளை அரசே நடத்தினால் பிரச்னையில்லை.''

- ப்ரியன்

செஸ் விளையாட்டில் அறிவுப் புரட்சி செய்து வரும் தமிழ்நாட்டில் இன்னொரு புதிய கிராண்ட் மாஸ்டர்! விஸ்வநாதன் ஆனந்தைப் போலவே இளம் வயதில் (17 வயது) கிராண்ட் மாஸ்டர் ஆகித் தலைப்புச் செய்திகளில் இடம் பிடித்திருக்கிறார் சென்னையைச் சேர்ந்த பாஸ்கரன் அதிபன்.

''அப்பா, அம்மாவுக்கு நான் விளையாட்டில் ஈடுபடணும்னு ரொம்ப ஆர்வம். செஸ் அல்லது கால்பந்துனு இந்த ரெண்டுல எதைத் தேர்ந்தெடுக்கலாம்னு யோசிச்சப்ப நிறையபேர் கால்பந்தா வேண்டாம். அந்த விளையாட்டுல நிறைய அடி விழும்னு பயமுறுத்தினாங்க. எங்க வீட்ல எல்லோரும் செஸ் ஆடுவாங்க. அதனால் எனக்கும் இயல்பா செஸ் மேல அதிக ஆர்வம் வந்துச்சு. ஏழு வயசுல கத்துக்க ஆரம்பிச்சு அடுத்தடுத்த வருடங்கள்ல போட்டிகள்ல கலந்துகிட்டு ஜெயிக்க ஆரம்பிச்சேன்'' என்கிற அதிபன் 92ல் பிறந்தவர்.

2008ல் 16 வயதுக்குட்பட்ட உலகச் சாம்பியனுக்கான போட்டியை வென்று அதிக கவனம் பெற்றார். அதிபனின் பயிற்சியாளர், விஸ்வேஸ்வரன். இவரின் தந்தை காமேஸ்வரன், விஸ்வநாதன் ஆனந்துக்குப் பயிற்சியளித்தவர். அதிபனின் முக்கிய ஸ்பான்ஸராக இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் இருப்பதால் கவலையின்றி விளையாட்டில் மட்டும் கவனம் செலுத்தி வருகிறார். ஆனாலும் பள்ளிப் பருவத்தில் அவருக்குப் பெரிய சிக்கலாக இருந்தது கிளாஸ் அட்டென்டன்ஸ்!

''நிறைய போட்டிகள்ல கலந்துக்க வேண்டியிருந்ததால ஒழுங்கா பள்ளிக்குப் போகமுடியல. இதனால பல பள்ளிகள் மாற வேண்டியிருந்தது. ஆனா, வேலம்மாள் பள்ளியில நிலைமையே தலைகீழா இருந்துச்சு. அவங்க ரொம்ப ஊக்கம் கொடுத்ததால கடந்த ரெண்டு வருஷமா நான் வகுப்பறைப் பக்கமே போகலை. தேர்வு வரும்போது மட்டும் அந்த ஒரு மாசம் கவனமா படிச்சு பாஸ் ஆயிடுவேன். இப்போ +2 தேர்வுல 88% மதிப்பெண்கள் எடுத்திருக்கேன்.



✽ பாஸ்கரன் அதிபன்

"விருந்து வைத்தார் ஆனந்த்!"

- பாஸ்கரன் அதிபன் பெருமிதம்

■ ச.ந.கண்ணன் ■

அடுத்ததா எந்தக் கல்லூரி என் செஸ்ஸுக்கு ஊக்கம் கொடுக்குதோ அந்தக் கல்லூரியில் சேர்ந்து பி.காம்., படிப்பேன்'' என்கிறார் 'குட்டி ஆனந்த்' அதிபன்.

''13 வயசுல ஜூனியர் நேஷனல் சாம்பியன் ஆனப்போதான் என்னால செஸ்ஸுல பெருசா சாதிக்க முடியும்னு நம்பிக்கை வந்துச்சு. அதுக்குப்பிறகு தொடர்ச்சியா வெற்றிகள் தான். நேஷனல் பி போட்டியில ஜெயிச்சவுடனே என்னைத் தனியா அழைச்சு விருந்து வைச்சார் ஆனந்த். என் எதிர்ல வந்து அவர் அமர்ந்ததும் என்னால் அடுத்த பத்து நிமிஷத்துக்கு ஒண்ணுமே பேசமுடியல. யாரை நான் ஆதர்சமா நினைச்சேனோ அவரே என் எதிர்ல வந்து அமர்ந்து ஊக்கப்படுத்திப் பேசும்போது எனக்கு வேற என்ன வேணும்? இப்பவும் அவர் எனக்கு அடிக்கடி இமெயில் பண்ணிப் பாராட்டுவார். என்னை மட்டுமல்ல, யார் நல்லா செஸ் ஆடினாலும் அவங்களை எப்போதும் உற்சாகப் படுத்துவார். பேட்டிகள்ல தவறாம அவங்களைப் பத்திப் பேசுவார். என்னை மாதிரி சாதிக்க நினைக்கிறவங்களுக்கு இது பெரிய டானிக்.''



இந்தியாவிலேயே அதிக செஸ் கிராண்ட் மாஸ்டர்கள் கொண்ட மாநிலம், தமிழ்நாடு. ''ரஷ்யாவுல நிறைய செஸ் பள்ளிகள் இருக்கும். முன்னாள் உலக சாம்பியன்கள்தான் அந்தப் பள்ளிகளை நடத்துவாங்க. அதுல சேர்ற சிறுவர்கள் பள்ளிக்கே போகாம முழு கவனத்தையும் செஸ்ஸுல காட்டுவாங்க. அந்தக் கலாசாரமும் செஸ் வளர்ச்சியும் இப்போ சென்னையிலயும் வர ஆரம்பிச்சிருக்கு. இங்கே, வாரா வாரம் எங்கேயாவது ஓர் இடத்துல செஸ் போட்டி நடந்துட்டு இருக்கு. இந்தியாவிலேயே இங்கிருக்கிற வசதிகள் வேற எங்கேயும் கிடைக்காது. வடநாட்டிலிருந்து இப்போ நிறைய பேர் சென்னைக்கு வந்து பயிற்சி எடுத்துக்கிறாங்க'' என்று தமிழ்நாடு பற்றி பெருமை பிடிபட பேசுகிறார் அதிபன்.

ஆனந்தின் இந்தியக் குடியுரிமை பற்றிய சர்ச்சைகள் அதிபனையும் அதிர்ச்சியடைய வைத்திருக்கிறது. ''ரொம்பக் கஷ்டமா இருக்குங்க. அவரைப் போய் எப்படிச் சந்தேகப்பட்டாங்க? அவர் நம்ம ஆனந்துங்க.'' ●



கல்கி



2010 செப்டெம்பர் 5
விக்ருதி ஆவணி 20
மலர் : 69
இதழ் : 6


தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - *பாரதியார்*


பாதுகாப்பைப் பணயம் வைக்கும் மசோதா!

அணு ஆலை விபத்துகள் - நஷ்டஈடு தொடர்பான மசோதா நாடாளுமன்ற விவாதத்துக்கு வந்துவிட்டது. அதை நிறைவேற்ற மத்திய அரசு எல்லாவித முயற்சிகளையும் மேற்கொள்ளும். இதற்கிடையில் பா.ஜ.க. ஓரிரு சொல் திருத்தங்களைக் கோருவதும் அவற்றைச் செய்வது போல் செய்துவிட்டு, வேறு திருத்தங்கள் மூலம் மசோதாவின் உள்நோக்கத்தை ஆளுங்கட்சி பத்திரப்படுத்திக் கொள்வதுமாக ஒரு கண்ணாமூச்சி ஆட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

இங்கு நிறுவப்படும் அணு ஆலைகளில் விபத்து நடந்தால், அவற்றில் பங்குதாரராகவோ அல்லது ஆலைக்குரிய உபகரணங்கள், மூலப்பொருள்கள் விற்கும் சப்ளையராகவோ ஈடுபட்டுள்ள அயல்நாட்டு நிறுவனங்களுக்குப் பொருளாதார, தார்மிகப் பொறுப்புகள் இல்லாத வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது இந்த மசோதா! இப்படி ஒரு மசோதாவை இதுவரை எந்த நாடாவது விரும்பி ஏற்றுக் கொண்டிருக்குமா! நமது ஆட்சியாளர்கள் இதை ஏற்று நாட்டைப் பணயம் வைக்கத் துணிந்துவிட்டனர் என்றால் என்ன காரணம்?

அணுமின் உற்பத்திக்கான உபகரணங்கள், மூலப்பொருள்கள் இந்தியாவுக்குத் தரவேண்டுமானால், இத்தகைய மசோதாவை நிறைவேற்ற வேண்டும் என்று அமெரிக்கா வற்புறுத்துகிறது! போபால் விஷ வாயு விபத்திலிருந்து பாடம் கற்று, அமெரிக்கா





தன்னைப் பாதுகாத்துக் கொள்ள இந்தியாவை இப்படி நிர்ப்பந்திக்கிறது; இந்தியாவோ போபால் பயங்கரத்தால் பாடம் கற்று, உரிய தருணத்தில் விழித்துக் கொள்ளாமல் சோப்ளாங்கித்தனமாக அமெரிக்க நிர்ப்பந்தத்துக்கு அடிபணிகிறது!

அணுமின் ஆலைகள் மூலமாக மட்டுமே நம் நாட்டின் மின் பற்றாக்குறையைத் தீர்க்க முடியும் என்கிற தவறான நம்பிக்கையின் காரணமாகவே இந்த இக்கட்டு எழுந்துள்ளது. அமெரிக்க (மற்றும் இதர நாடுகளின்) யுரேனியத்தை நம்பாமல் இந்தியாவில் ஏராளமாக் கிடைக்கும் தோரியத்தைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யலாம். இதற்கான தொழில்நுட்பம் இங்கு ஏறத்தாழ கச்சிதப்படுத்தப்படும் நிலையில் இருக்கிறது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இந்தத் திசையில் கூடுதல் கவனமும் ஆய்வும் அதற்கான நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டால், வேறு எந்த நாட்டிடமும் கையேந்தத் தேவை இராது; நமது பாதுகாப்பையும் உரிமைகளையும் விட்டுக் கொடுக்க அவசியம் ஏற்படாது.

இதைவிடவும் மேலான நிலை, அணுசக்தி சார்ந்த தொழில்நுட்பங்களையே மெள்ள மெள்ள கைவிட்டு, மின்உற்பத்திக்கு மாற்று முறைகளை நாடுவதுதான். சூரிய சக்தி, இயற்கை எரிபொருள் போன்றவைதாம் உண்மையில் 'கிளீன் எனர்ஜி'. ஆனால் நமது அரசோ பேரபாயம் மிக்க கழிவுகளை வெளியேற்றும் அணுமின் சக்தியை 'கிளீன் எனர்ஜி' என்று சொல்லி ஏமாற்றிக் கொண்டிருக்கிறது! இவ்வாலைகளில் விபத்துகள் நேர்ந்தால், தலைமுறைகளைக் கடந்த கடும் பாதிப்பு இருக்கும்! அதனால்தான் அமெரிக்கர்கள் தங்கள் நாட்டில் அணு ஆலைகள் நிறுவப்படுவதை எதிர்க்கின்றனர்.

இந்திய மக்களுள் பெரும்பான்மையினர் இப் பிரச்னை குறித்து விவாதிக்கவோ எதிர்ப்பு தெரிவிக்கவோ அறியாத எளியவர்கள்தான்; அதற்கான நேரம்கூட இல்லாமல் வயிற்றுப் பிழைப்புக்காக உழைக்கும் ஏழைகள்தான். அவர்களைப் பாதுகாக்கும் பொறுப்பில் உள்ள அரசே அவர்களைப் பணயம் வைத்துச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது!





கோலாகல கோலாட்டம்!

விட்டல்தாஸ் ஜெயகிருஷ்ண தீட்சிதரின் நாம சங்கீர்த்தன நிகழ்ச்சிகளின்போது அனைவரையும் கவருவது அவருக்குப் பின்னே அமர்ந்து பாடும் சிறுவர்கள்தாம். குரலும் இணக்கமும் அவர்களுக்குக் கிடைத்திருக்கும் பயிற்சி நேர்த்தியும் மெச்சத் தகுந்தன.

இந்த மாணவர்கள் எல்லோரும் விட்டல்தாஸிடம் நேரடியாகப் பயிற்சி பெறுபவர்கள். பலர் கல்லூரிகளில் படித்துக்கொண்டு இருப்பவர்கள். சிலர் முழு நேரமாக ஆஸ்ரமத்திலேயே விட்டல்தாஸரோடு இருப்பவர்கள். இவர்களுக்கு நாம சங்கீர்த்தனப் பயிற்சி மட்டும் கொடுக்கப்படுவதில்லை.

கூடவே பாகவத பாராயணம், நாம ஜெபம், யோகா பயிற்சி ஆகியவையும் இங்கே சொல்லித் தரப்படுகின்றன. இந்த நேரம்தான் என்றில்லை. எதையும் ஒரு வகுப்பு என்று ஆக்கி, அதைத் திணிப்பதும் இல்லை. எல்லாம் விளையாட்டு போல் சொல்லித் தரப்படுகின்றன.

விட்டல்தாஸரின் நிகழ்ச்சிகளின் இன்னொரு சிறப்பு பின்னல் கோலாட்டம். கோலாகலமாக இருக்கக்கூடிய அழகிய அமைப்பில், ஆடுபவர்கள் ஒரு சிறு பிசிறு கூட இல்லாமல், பார்வையாளர்களைக் கட்டிப் போட்டுவிடுவார்கள். அதன் ரிதம், இசை, நடனம் எல்லாம் அவ்வளவு கவர்ச்சிகரமானது.

மாயவரம் என்.வி. என்றழைக்கப்படும் என்.வெங்கட்ராமன்தான், இந்த மாணவர்களுக்குப் பின்னல் கோலாட்டத்தைச் சொல்லிக்கொடுத்தவர். விட்டல்தாஸரின் பஜனையில், 'ரங்கம்மா', 'சாது லாரா, மீறு ரண்டி, பண்டரிபுரம் போத்தாமா' என்ற ரயில்பாட்டு எல்லாம் பயங்கர பாப்புலர். பல ஊர்களில், மக்கள் பாண்டுரங்க விட்டலனின் அன்பில் நனைய, தம்மை மறந்து இதுபோன்ற பாடல்களில் சொக்கிப் போகிறார்கள்.



- நிதர்சனா

கோவிந்தபுரம் ஸ்ரீ விட்டல் ருக்மிணி சன்ஸ்தான்! உள்ளே போனீர்கள் என்றால், கோவிலுக்குப் பின்புறம் திரும்பின திசையெல்லாம் பசுக்களைப் பார்க்கலாம். நான்கு கொட்டில்களில் நீளவாக்கில் பசுக்கள் வரிசை வரிசையாக நிற்கின்றன. கிருஷ்ண பரமாத்மா விளையாடிய கோகுலம்தான் இந்தக் கோசாலைக்கும் பெயர்.

ஒவ்வொரு கொட்டில்களிலும் வேறு வேறு இன, ஊர் பசுக்கள். முதலில் கிர் பசுக்கள். இவைதான் துவாரகை கிருஷ்ணனின் வழிவந்த பசுக்கள். அகலமான நெற்றி. மீன்போன்ற கண்கள், மீசையென வளைந்த கொம்புகள். நிமிர்ந்த திமில். சரிந்த காதுகள். கிருஷ்ணனின் குழலோசையைக் கேட்டுக் கேட்டு மனம் லயித்துப் போனது போன்றே காதுகளும் லயித்துவிட்டனவோ!

பால் அதிகம் கறக்கும் இப்பசுக்களைத் தொடர்ந்து, பிருந்தாவனப் பசுக்கள் இன்னொரு கொட்டிலில் கட்டப்பட்டிருக்கின்றன. அதேபோல், கோவர்த்தனத்தில் இருந்து அழைத்துவரப்பட்ட பசுக்கள் இன்னொரு இடத்தில் கட்டப்பட்டிருக்கின்றன.

1998ல் பத்து பசுக்களுடன் உருவானது ஸ்ரீ கோகுலம் கோசாலை. அந்தப் பத்தும் கலப்பின நாட்டுப் பசுக்கள். அப்போது மேட்டூர் சுவாமிகள், ''கோசாலையில் ஒரு தேசியப் பசுவையாவது வைத்து வளர்த்து வாயேன்!'' என்று விட்டல்தாஸ் சுவாமிகளிடம் அன்புக் கட்டளை இட்டாராம். ''நமக்கு தேசியம் என்றாலே கிருஷ்ணன்தான். கிருஷ்ணன் மேய்த்த பசுக்கள்தான் நமக்கு தேசியப் பசுக்கள்'' எனத் தோன்றியது விட்டல்தாஸுக்கு.

அதன் தொடர்ச்சிதான், இன்று 350 பசுக்களைக் கொண்ட பெரிய பசு மடமாக, ஸ்ரீ விட்டல் ருக்மிணி சன்ஸ்தான் வளர்ந்திருக்கிறது.

இங்கே பசுக்களுக்கு இருக்கும் சௌகரியங்கள் அலாதியானது!

ஒவ்வொரு கொட்டிலையும் விட்டல்தாஸ் சுவாமிகளும் கால்நடை மருத்துவர் சாலை குணாளனும் இணைந்து திட்டமிட்டிருக்கின்றனர். ஒவ்வொரு பசுவையும் எப்படி நிற்கவைக்கவேண்டும், அதற்குப் போதுமான இடம் எவ்வள□, அது நீர் பருக வாகான தொட்டி வடிவமைப்பு என்ன என்று பார்த்துப் பார்த்துச் செய்திருக்கிறார்கள். அதேபோல்,



பிருந்தாவனப் பசுக்கள்

ஜெர்சி பசுக்களைத் தரையில் நிற்கவைக்காமல், அதற்கென தனியான மேட்களைப் போட்டு நிற்க வைத்திருக்கிறார்கள்.

பசுக்களுக்குப் பின்னாலேயே அதன் கன்றுகள் நின்றுகொண்டு இருக்கின்றன. அதற்கும் போதிய இடவசதி. இந்தக் கொட்டில்களின் வடிவமைப்பே மிகவும் சுகாதாரமான முறையில் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. உயரமான கூரை. இரண்டு பசுக்களுக்கு நடுவே மேலே மின்விசிறி. வெயில் காலத்தில், பசுக்கள் வெப்பத்தில் தவித்துப் போகாமல் இருக்க அதன் தலைமேல் தண்ணீர் ஷவர்.


பசுக்கள் உண்ணும் பசும் புல்லை, அங்கேயே விளைவிக்கிறார்கள். மேலும் ஒவ்வொரு பசுவுக்கும் ஒரு நாளைக்கு எவ்வளவு கிலோ உணவு வழங்கவேண்டும் என்ற கணக்கும் குறித்து வைக்கப்பட்டிருக்கிறது. பசுக்களின் செவி மடல்களில் அதனதன் எண்கள்.

கண்ணும் கருத்துமாக இங்குள்ள பசுக்களைப் பார்த்துக்கொள்ள நியமிக்கப்பட்டுள்ள நபர்கள் எல்லோரும் பீகார் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். ஒவ்வொரு பசுவும் பளபளவென குளித்துவிட்டு வரும் அழகு நங்கை போன்றிருக்கிறது!

முக்கியமான விஷயம், பசுக்களைக் கட்டியிருக்கும் இடங்களில் வீசும் சாணி வாடை இங்கே துளியும் இல்லை.

அதைவிட முக்கியம், பசுக்களின் பாலுக்கு யார் தெரியுமா முதல் உரிமையாளர்? அதனதன் கன்றுகள். கன்றுகள் குடித்தது போகத்தான், மிச்சம் பால் கறக்கப்படுகிறது. ஒவ்வொரு நாள் காலையும் இந்த மடத்தில் இருந்து சுற்றியுள்ள கிராமத்தினர் வந்து சுவையான பசுந்தயிரை இலவசமாகவே வாங்கிப் போகின்றனர்.

எதுவும் வியாபாரமில்லை.



★ கிர் பசு



கோசாலையில் தேசிய பசு!

எல்லாம் சேவை. பசுக்களுக்கான சேவை. நம் வளமான மண்ணைப் பாதுகாப்பதற்கான சேவை.

அடுத்த பிறவி என்று ஒன்று இருந்தால், நிச்சயம் ஸ்ரீ கோகுலத்தில் ஒரு பசுவாகப் பிறக்கலாம்!

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

“ஒரு பொண்ணுக்கும், பையனுக்கும் நடுவுல இருக்கிறது மட்டும் லவ் கிடையாது. அப்பா, அம்மா மேல நாம வைச்சிருக்கறதும் லவ்தான்; அண்ணன், தம்பி மேல நாம காட்டற நேசமும் லவ்தான்'' என்று லவ்வுக்கு எல்லாரும் சொல்லும் காரணங்களையே மேகனா ராஜும் சொன்னாலும், என்னவோ தெரியலை ரசிக்க முடிகிறது. காரணம், மேகனாராஜ் 'காதல் சொல்ல வந்தேன்' படத்தின் நாயகி.

''அப்பா சுந்தர்ராஜ் தஞ்சாவூர்க்காரர், அம்மா பரிமளா ஜோஷாய் கன்னடப் பெண். இரண்டு பேரும் லவ் மேரேஜ்தான் தெரியுமா?'' என்று கண் சிமிட்டுகிறார். ''அப்ப உங்களுக்கும் எதிர்காலத்தில் லவ் மேரேஜ்தானா?'' என்று கேட்டால், ''அதுக்குக் காலம்தான் பதில் சொல்லும்'' என்று எஸ்கேப் ஆகிறார்.

''ஸார் லவ் பண்றதுக்கெல்லாம் எனக்கு இப்ப நேரமில்லை. கன்னடம், தெலுங்கு, தமிழ்ல நான் பிஸியான ஹீரோயின் **(நேசமாவா?)**. தமிழில் அடுத்து 'நந்தா - நந்திதா' பண்றேன். ராம்சிவம் என்ற அறிமுக இயக்குநர் டைரக்ட் பண்றார். இதுல ரொம்ப தைரியமான பொண்ணா நடிக்கறேன். நிஜத்தில் ரொம்ப தைரியமான பொண்ணான்னு கேட்காதீங்க... தேவைப்பட்டா தைரியம் தானா வரும். படிக்கற காலத்துல NCC-ல இருந்திருக்கிறேனாக்கும்'' -சல்யூட் அடிக்காத குறையாய் விறைப்பு காட்டுகிறார்!

''நான் ஸ்கூல் படிக்கும்போது Truth or dare-ன்ற விளையாட்டை விளையாடினோம். அந்த விளையாட்டின்படி ஒரு பொண்ணுக்கோ அல்லது குப்பைத் தொட்டிக்கோ முத்தம் கொடுக்கணும். நான் பொண்ணுக்கு முத்தம் கொடுக்கறதுக்குப் பதிலா குப்பைத் தொட்டிக்கு முத்தம் கொடுத்தேன். **(கொடுத்து வைச்ச குப்பைத் தொட்டி)** இதை எங்க டீச்சர்ஸ் பார்த்து வாங்குவாங்குன்னு வாங்கிட்டாங்க. இன்னைக்கு நடிகையான பிறகும் மறக்க முடியாத சம்பவம் இது'' என்று சம்பந்தமே இல்லாத சம்பவத்தைச் சொல்லிச் சந்தோஷப்படுத்துகிறார்.

'' ரொம்ப த்ரில்லான நாவல்களைப் படிக்கப் பிடிக்கும். **(ராத்திரி நேரம் படிக்காதீங்க... பயந்துட போறீங்க)** ஊர் சுத்திப் பார்க்கறதுன்னா ரொம்ப ஆசை. ஆம்ஸ்ட்ரடாம் பிடிச்ச டூரிஸ்ட் ஸ்பாட். அங்க டிராஃபிக் ரொம்ப கம்மி. டுலிப்ஸ் கார்டனில் இருக்கற வெரைட்டியான பூக்கள் ரொம்ப அழகா இருக்கும் **(நீங்களே அழகான பூதானே?)**. Donbrown நாவலைப் படிச்சதுக்கு அப்புறம் ரோம் நகரத்தைப் பார்க்க ஆசை. அங்க சீசனைப் பத்தின ரகசியமான தகவல்கள் நிறைய இருக்காமே. தெரிஞ்சுக்க ஆசையா இருக்கு'' என்றவர் ஏன் என்று தெரியவில்லை... பிடித்த சாப்பாட்டுக்குத் தாவினார்.

''மோர்க்குழம்பு **(அப்பா தஞ்சாவூர்க்காரராச்சே?)** ரொம்பப் பிடிக்கும். எனக்கு நல்லா சமைக்கத் தெரிஞ்சது லேடிஸ்ஃபிங்கர்ஸ்தான் **(அட நம்ம வெண்டைக்காய்...!)**

நடிக்க வந்ததுக்கு அப்புறமும் படிப்பை நிறுத்தலை. மதுரை காமராஜர் யுனிவர்ஸிட்டியில கரெஸ்பாண்டன்ஸ்ல பி.பி.ஏ. பண்றேன்'' என்கிறார். **ஏன்?**

- ராகவ்குமார்




மேகனா பி.பி.ஏ.

என்னைப் போலவே அன்றைய பொழுதும் தளர்ந்து போயிருந்தது. இந்த வாரம் கண்டிப்பாக வருகிறேன் என்று சொன்ன மகன் வழக்கம்போல வரவில்லை! 'திரும்ப வராத வழக்கம்' எனக்குப் புதிதல்ல! இதோ வருகிறேன் என்று சொல்லிவிட்டுப் போன கணவர், வெறும் உடலாகத்தான் வந்தார்.

இதோ வருகிறோம் என்று சொல்லிவிட்டுப் போன உறவுகளும், போன இடம் தெரியவில்லை. வருகிறேன் என்று சொல்லிவிட்டுப் போன கும்பலில், கடைசியாக மகன். கருவேப்பிலை போலத்தான் என் வாழ்க்கையும்! வாழ்க்கையின் பல 'தட்டு'களில் இருந்தும் தூக்கி

உறவுகள் தொடர்கதை



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் பிரசுரத்துக்குத் தேர்வான சிறுகதைகள் - 3

எறியப்பட்டேன்!

கருவேப்பிலை என்றவுடன், அதன் வாசனை, நாசி தொட்டு அழைத்தது! திரும்பினேன். காய்கறிக் கடை!

அனைத்துக் காய்கறிகளும், கடையிலேயே விளைந்தது போல சுத்தமாகத் தண்ணீர் தெளித்து 'பளபள' வென்று, வைத்திருந்தனர். வேகமாகக் காய்கறிகளைப் பொறுக்க ஆரம்பித்தேன்.

"அம்மா...!"

சின்னப் பையன் போன்ற ஓர் குரலும், அதில் இழைந்த ஏக்கமும் என் அடி வயிற்றில் அதிர்ந்தது! பத்து அல்லது பன்னிரெண்டு வயது இருக்கும். பரட்டைத் தலையும், ஒளி இழந்த கண்களுமாக உலர்ந்த இலை போல, காய்கறிக் குவியலுக்குள் நின்று கொண்டிருந்தான் ஒரு சிறுவன்.

''என்ன தம்பி...! நீயா கூப்பிட்டே...?''

"ஆமாம்...!" என்றவன், "உங்க பணம் கீழே விழுந்திருச்சு!'' என்றான் வெகுளியாக!

கீழே பார்த்தேன். நூறு ரூபாய் நோட்டு! நான் கையில் வைத்திருந்ததுதான்! மடித்திருந்தபடியே கிடந்தது! குனிந்து எடுத்துக் கொண்டு, அவனைப் பார்த்துச் சிரித்தேன்.

"தேங்க்ஸ் தம்பி...!"- அவனுக்குள்ளும் ஒரு சந்தோஷம்.

''டேய்...! அங்க என்னடா பண்ற கடங்காரப் பயலே! அந்தச்

தக்காளிப் பொட்டியை எடுத்துக் கீழே வைடா!'' கடைக்காரரின் ஏவலுக்குச் சங்கடப்பட்டு, முகம் மாறிச் செயல்பட ஆரம்பித்தான்.

'யார் இந்தப் பையன்...! இதுக்கு முன்னால பார்த்ததில்லையே...!' யோசித்தபடியே அவனருகே சென்றேன்.



''தம்பி...! உன் பேர் என்னப்பா...!''

வேலையை நிறுத்திவிட்டு நிமிர்ந்து பார்த்தவன், கல்லா பக்கம் பார்த்துவிட்டுக் குனிந்து வேலையைப் பார்த்தான்.

''தம்பி! புதுசா இருக்கியே...! உன்ன நான் எப்படிக் கூப்பிடுறது...!''

''பால்ராஜ்...!''

குழந்தைத் தனமான தொனியில், ஆனால் சற்றே, உடைந்த குரலில் மெதுவாகச் சொன்னான். அதே சமயம் வேலையையும் நிறுத்தவில்லை. நிமிர்ந்தும் பார்க்கவில்லை.

நிமிர்ந்து பார்த்துப் பேசினால், வேலை நின்றுவிடும்! முதுகு பழுத்துவிடும்!

''எங்க இருந்து வர்றே...!''

''இங்கதான் தங்கி இருக்கேன்.''

''அம்மா..! அப்பா...!''

சற்றே மௌனம் காத்தான்! அந்த மௌனம் ஏதோ உணர்த்தியது...! ''அப்பா

ப. உமாமகேஸ்வரி

இல்லை...! அம்மா மட்டும்தான்...! ஊருல...!'' வார்த்தைகளில் இலேசான தயக்கம் இருந்தது. 'அம்மா' என்று சொல்லும்போது குரல் தொண்டையை அடைத்தது.

''படிச்சிருக்கியா?''

''ம்...! அஞ்சாப்பு!'' என்று வேகமாகச் சொன்னவன்,

''நிறுத்திட்டாங்க...!'' என்று மூச்சை நிறுத்தியதைப் போல சொன்னான். 'பாவிங்க!' என்பது போல இருந்தது அவன் உச்சரித்த தொனி!

''எங்கப்பா... சாப்பிடுற...!'' இப்போது நிமிர்ந்து பார்த்தான்.

''அங்கங்க...!'' என்றவன், சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு, ''அப்பப்ப...! இந்தக் காய்களையும்தான்...!'' என்றான்.

இன்னமும் அவனை விட்டு அகலாத, அந்தக் குழந்தைத்தனமான அசட்டுச் சிரிப்பைப் பார்க்கவே, பாவமாக இருந்தது. இவ்வளவு சின்ன வயதிலேயே வேலைக்கு வந்துவிட்டானே! அவன் 'அப்பா'

இருந்திருந்தால், ஒரு வேளை வந்திருக்க மாட்டானோ!

ஆசிரியையாக இருந்து ஓய்வு பெற்று விட்ட பிறகு, என் மகனை எதிர்பார்த்தே கழியும் என் வாழ்க்கையில், பால்ராசு என் ப்ரியத்துக்குரிய மனத் துணை ஆகிவிட்டான்! அனைவரும் என்னைக் கூப்பிடுவதைப் பார்த்து அவனும் என்னை 'டீச்சர்' என்றே அழைக்க ஆரம்பித்தான்! அவனுக்கு எந்த வகையிலும், எதையும் சொல்லித் தராத ஒரு டீச்சராகவே நான் இருந்தேன்!

ஆனாலும் நாட்கள் செல்லச் செல்ல அவன் வேலையில் ஒரு நெளிவு சுளிவு வந்து விட்டது. கண்களில் நம்பிக்கையின் ஒளி தெரிந்தது. இடமும் வேலையும் பழகப்பழக அவனும் சகஜமாகி விட்டான். பலரும் அவனைப் பெயர் சொல்லி அழைக்கும் அளவுக்குப் பரிச்சயம் ஆகி விட்டான். அவன் மாணவனாக இருந்து படிப்பை நிறுத்தியதாலோ என்னவோ, டீச்சர் என்ற முறையில் என்னிடம் ஒரு பயத்தோடும், பவ்வியத்தோடும் பேசுவான்.



ஆனால் நான் ஒரு போதும் அவனை மாணவனாகப் பார்த்ததில்லை!

அவனோடு பேசும்போதெல்லாம், அவனுக்குள் இருக்கும், படிக்க வேண்டும் என்ற ஆர்வமும், விளையாட வேண்டும் என்ற துடிப்பும் தெரியும்! நம்மால் என்ன முடியும் என்று நினைத்துக் கொள்வேன்! கடைக்கு வந்த ஆறு மாத காலத்துக்குள், காய்கறிகளைச் சுத்தம் செய்யும் இடத்திலிருந்து, எடை போடும் இடத்துக்கு வந்து விட்டான். ஐந்து வரை படித்திருந்ததால், அவசரத்துக்கு பில் போடுவது, பணம் வாங்கிச் சில்லறை மாற்றிக் கொடுப்பது வரை தேறி விட்டான்.

பால்ராசு உணர்ந்தானோ இல்லையோ...! அவனது பதவி உயர்வை, நான் வெகுவாகவே ரசித்து வந்தேன்! பால்ராசைப் பார்க்கும் போதெல்லாம் என் மகனின் நினைவுதான் வரும்!

இதே வயதில் அவன் இருந்த நிலையை யோசித்துப் பார்த்தேன். இங்கு இருக்கிற காய்கறிகளின் பெயர்கூட அவனுக்குத் தெரியாது. கிலோகிராம் கணக்குகளைப் புரிய வைப்பதற்கு, டியூஷன் வைத்தேன். இங்கு இவனுக்கு அதுதான் வாழ்க்கையாகவே உள்ளது. ஆனால், இங்கு இவன் போடும் சரியான கணக்குகளுக்கு யார் மதிப்பெண் போடுவது? போட்டால் மட்டுமென்ன? சரியான கூலியா கிடைத்து விடப் போகிறது!

"**எ**ன்னம்மா நீ...! டீச்சரா வேலை பார்த்திருக்க...! ஒரு செல்ஃபோன், கம்ப்யூட்டர்னு வைச்சுக்கக் கூடாதா! அவசரத்துக்கு ஏதாவது தகவல் சொல்லணும்னா என்ன பண்றது?" அக்கறையாக(!) கேட்டான் என் மகன்!

அப்போதுகூட தகவலுக்குதான் அவை!

ஆசையாய் நாலு வார்த்தை பேசுவதற்குக் கிடையாது!

காத்திருப்பது என்று முடிவான பிறகு, காரணம் என்ன வேண்டிக் கிடக்கிறது! ஆனால், இன்று நான் காத்திருப்பதில் ஒரு காரணம் இருக்கிறது! இன்று அவன் அப்பாவின் இருபத்தைந்தாவது நினைவு நாள். அந்த நாளுக்காகத்தான் வரச் சொல்லி இருக்கிறேன். உயிரோடு உள்ளவளின் நினைப்பே இல்லாதபோது, அப்பாவின் நினைப்பு மகனுக்கு எங்கே இருக்கும்?

அப்பா என்ற ஸ்பரிசத்தின் நேரடி அனுபவம் அவனுக்கு இல்லை என்றாலும், இரண்டு குழந்தைகள் பெற்ற பிறகு, அப்பா என்ற இடத்தின் பொருள் கூடவா புரியாமல் இருக்கும்?

அவனது பெரிய பெண், அதாவது என் பெரிய பேத்தி, அவரை அப்படியே உரித்து வைத்திருக்கிறாள். உறவுகள் தொடர்கதை தான்! ஆனால், உணர்வுகள் சிறுகதையல்ல! விடுகதை! எதிர்பார்த்து ஏமாந்த என் கண்கள் போலவே, இன்று மாலை வானமும் ஏனோ சிவந்திருந்தது! கண்கள் ஈரமாயின!

அவர் படத்துக்கு முன்னால் எரிந்து கொண்டிருக்கும் தீபத்தின் சுடர் கூட, எனக்காக அவர் அழும் அக்னிக் கண்ணீர் போலவே இருக்கிறது. செய்த சாப்பாடுகூட எல்லாம் அவனுக்குப் பிடித்தது!

எதிர்பார்த்து ஏமாறக் கூடாது என்பதில் கவனமாக இருந்தும் ஏமாந்து விட்டேன்! எப்போதுமே, ஏமாற்றங்களே முடிவுகளாக அமைவதற்கு நமது எதிர்பார்ப்புதான் காரணமாக அமைகிறதோ! யாருக்காக வாழ்ந்தேன்! இனி யாருக்காக வாழ வேண்டும்! அன்று ஆரம்பித்து இன்று வரை குழப்பமாகத்தான் இருக்கிறது!

நிலவும் நட்சத்திரங்களும் ஒவ்வொன்றாய்ப் பிரகாசிக்க ஆரம்பித்தன! அது அது, அதனதன் வேலையை ஒழுங்காகச் செய்கின்றன! யாரைப் பற்றியும் கவலைப்படுவதே இல்லை! நேற்று இருந்தவர் இன்று இல்லையே என்று நினைத்து நிலவும், நட்சத்திரமும் வராமலில்லையே! என் உள் மனத்தில் பளீரென்று ஒரு மின்னல் கீற்று...!

'அட...! ஆமாம்...!'

யோசித்துக்கொண்டிருந்த எனக்குச் சட்டென்று ஒன்று புரிந்தது!

'யாரும், எதுவும், எதற்காகவும் காத்திருப்பதில்லை!'

உலகத்தில் எத்தனையோ குழந்தைகள் ஆதரவின்றி, வாழ வழியின்றித் தவிக்

“**நா**ன் நினைத்தால் ரஜினி சாரைக் கூட வரவழைச்சிருக்க முடியும். ஆனா அவர் பிஸியா இருக்குற இந்த நேரத்துல அவரைத் தொந்தரவு பண்ண விரும்பவில்லை. அதேசமயம் தம்பி சூர்யாவுக்கு, 'உங்களை நான் சந்திக்க வேண்டும்' என்று எஸ்.எம்.எஸ்.தான் அனுப்பினேன். 'வாங்க' என்று உடனே எனக்கு எஸ்.எம்.எஸ் அனுப்பினார். அங்கு போன நான், படப்பிடிப்பு தளத்திலேயே, 'நீயே என் காதலி' படத்தின் குறுந்தகடை ஏ.ஆர்.முருகதாஸ் வெளியிட, சூர்யா பெற்றுக்கொள்கிற மாதிரி புகைப்படத்தை எடுத்துக்கொண்டு வந்தேன்”என்கிறார் படத்தை இயக்கி, தயாரித்திருக்கும் சின்னி ஜெயந்த்.

ரஜினிகாந்த் நடித்த 'கை கொடுக்கும் கை' படத்தில் அறிமுகமான இவர், இதுவரை 412 படங்களில் நடித்ததோடு இல்லாமல் படங்களை இயக்கி, தயாரித்தும் வருகிறார். 'சின்னப்பொண்ணு', 'உனக்காக மட்டும்', 'ஒரு தடவ சொன்னா', 'கானல் நீர்' ஆகிய நான்கு படங்கள் இவர் தயாரிப்பு இயக்கத்தில் உருவானவை. தற்பொழுது இவர் 'நீ என் காதலி' என்ற படத்தை இயக்கி, தயாரித்து வருகிறார். சிறிய பட்ஜெட்டில் உருவாகும் இப்படத்தின் பாடல் வெளியீட்டைக்கூட எந்த நட்சத்திரத்தையும் கூப்பிடாமல் நடத்தி முடித்துள்ளார்.

– மகி

கின்றன! அவர்களுக்காக என் வாழ்க்கையை அமைத்துக் கொண்டால்தான் என்ன? நினைவுக்குள் ஒரு வினாடி பால்ராசு முகம் நிழலாடிச் சென்றது! இரவு கவிழக் கவிழ எனக்குள் ஒரு வெளிச்சம் பரவ ஆரம்பித்தது! அந்த இரவு அர்த்தமுள்ளதாக இருந்தது!

காலையில், அன்றைய ஒரு நாளைப் போலவே, ஒரு புது ஆளாகவே விடிந்தேன்! நேராகக் காய்கறிக் கடைக்குச் சென்றேன். அன்றைய பொழுதுக்குக் கடை தயாராகிக் கொண்டிருந்தது! பால்ராசுவைக் காணவில்லை! மெதுவாகக் கடைக்காரரிடம் விசாரித்தேன்! என்னை ஏறிட்டுப் பார்த்தவர், சுரத்தே இல்லாமல் சொன்னார்.

''ஊருக்குப் போயிட்டான்!''

அவர் குரலில் ஒரு எரிச்சல் தெரிந்தது! காலையிலேயே வேலை செய்யவிட்டு விட்டானே என்ற எரிச்சலோ என்னவோ!



"கவலைப்படாதே பால்ராசு! அம்மா நான் இருக்கிறேன்! உன்னை வளர்க்கிறேன்! பெரிய படிப்பு படிக்க வைக்கிறேன்"

''ஏன்! என்ன விஷயம்! எப்ப வருவான்?''

''ரொம்ப நாளா இழுத்துக்கிட்டு கிடந்த அவன் ஆத்தா நேத்து செத்துப்போயிட்டா! முழுசா ரெண்டாயிரம் ரூபாயைத் தின்னுட்டுப் போயிட்டா! பாதகத்தி!''

சில கெட்ட வார்த்தைகளில், அவளை எரித்தார் கடைக்காரர்.

'என்னது? பால்ராசுவின் அம்மா இறந்து போனாளா? அப்படியென்றால், அவன் உழைப்பு வீணாகிப் போனதா?'

எனக்கு மனத்துக்குள் பகீரென்றது! கண்களுக்குள் ஒரு சுழற்சி வந்து போனது! உடல் மெதுவாக நடுங்கியது! 'அவன் சம்பாதித்து நம்மைக் காப்பாற்றுவான் என்ற நம்பிக்கை அவன் அம்மாவுக்கு எப்படி இல்லாமல் போனது!'

'அட ஆண்டவா! வேண்டுபவனுக்கு வேண்டாதவனையும், வேண்டியவனுக்கு வேண்டாததையும் தந்து விளையாடுகிறாயா? ஒவ்வொருவரின் பாசத்துக்கும் ஒரு விலை வைக்கிறாயே! ஒரு ஏழைக் குழந்தையின் இயலாமைக்கு முன்னால் தோற்றுப் போனது நீதானடா!'

ஓங்கிக் கத்த வேண்டும் போல இருந்தது!

அவன் அட்ரஸை வாங்கிக்கொண்டு கிளம்பிய என்னை விநோதமாகப் பார்த்தார் கடைக்காரர்!

''ஏம்மா! கடங்காரப் பய, உங்கக்கிட்டயும் பணம் வாங்கியிருக்கானா?'' நக்கலாகக் கேட்டார்.

''சே! நீயெல்லாம் ஒரு மனுசனா?''

நேராகவே கேட்டுவிட்டு, வேகமாகக் கிளம்பினேன். மனம் கிடந்து அடித்துக் கொண்டது!

''கவலைப்படாதே பால்ராசு! அம்மா நான் இருக்கிறேன்! நான் உன்னை வளர்க்கிறேன்! பெரிய படிப்பு படிக்க வைக்கிறேன்! உன் மனம் போல விளையாட வைக்கிறேன்!''

பொங்கி வழியும் தாய்மையோடு பஸ் ஏறினேன் அவன் ஊருக்கு!

நாடார் இவர் நாடார்!





ராதிகா பலமான சிபாரிசு செய்தும் சரத்குமாரை கழகத்தில் சேர்த்துக்கொள்ளத் தயக்கம் காட்டுகிறார்களாம். "அவர் வந்தால் மட்டுமே நாடார் ஏரியாக்களில் வோட்டுக்களை வளைத்துப் போட முடியும் என்பது சரியல்ல; சென்ற பாராளுமன்றத் தேர்தலில் நமது கூட்டணி, நாடார்கள் அதிகம் உள்ள தொகுதிகளில் வெற்றி பெற்று இருக்கிறது. மேலும் ராஜ்ய சபா உறுப்பினர் பதவி கொடுத்த நம்மை எட்டி உதைத்துவிட்டுப் போனது மட்டுமல்ல, அவர் கட்சி மேடைகளிலும் நம்மைக் கூடுதலாகவே தாக்கியிருக்கிறார்" என்கிறாராம் தளபதி. "அதிகார மையத்தில் நாடார் இனத்தின் பிரதிநிதியாக ராஜாத்தி அம்மாள் இருக்க, அவர்கள் வோட்டு நமக்குத்தான் என்றும் கழகத்தில் கணக்குப் போடுகிறார்கள். ராஜாத்தி அம்மாவும் காமராஜ் சிலைக்கு மாலை போடுவதிலிருந்து நாடார் அமைப்புகளின் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு இனப்பற்றை வெளிப்படுத்துகிறாராம்.

கலெக்ஷன் கொண்டாட்டம்?

பாலம் அல்லது சாலை போன்ற கட்டுமானங்களைக் கட்டி, இயக்கி, அதைப் பின்பு அரசிடம் கொடுக்கும் கருத்தோட்டத்துக்குப் பெயர் build, operate and transfer. கட்டட ஒப்பந்தக்காரர் தனக்குச் சேர வேண்டிய பணத்தை சுங்கவரி (Toll Charges) போட்டு வசூல் செய்துகொண்டு, பின்னர் அரசிடம் ஒப்படைக்க வேண்டும். இந்த வசூல் குறிப்பிட்ட காலகட்டம்தான் என்று முதலில் தீர்மானித்து விடுவார்கள். சென்னைக்கும் செங்கல்பட்டுக்கும் இடையே தேசிய நெடுஞ்சாலையில் உள்ள சுங்கவரி வசூல் மையம் ஒன்று குறிப்பிட்ட காலகட்டத்துக்குப் பின்பும்கூட தன் வசூலைத் தொடர்கிறதாம். "இதன் பின்னணியில் ஆளும் கட்சியின் மாவட்டப் பிரமுகர்கள் இருக்கிறார்களோ என்ற சந்தேகம் இருக்கிறது" என்கிறார்கள் இந்தச் சாலையில் அடிக்கடி பயணம் செய்யும் வாகன ஓட்டிகள்.

குஷ்புவுக்கு

தி.மு.க.வில் சேர்ந்த பிறகு சென்னை திருவான்மியூரில் நடந்த பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசினார் குஷ்பு. அதன் பின் தமிழ் நாடெங்கும் போய் கலக்குவார் என்ற எதிர்பார்ப்பு கழக வட்டாரத்தில் இருக்க, குஷ்புவோ அமைதி காத்தார். குஷ்புவின் வளர்ச்சியை ஒரு கட்டுப்பாட்டில் வைக்க விரும்பிய ஒரு அதிகார மையத்துப் பெண்மணி, "கூட்டங்களுக்கு குஷ்புவைக் கூப்பிட வேண்டாம்" என்று 144 போட்டதாக வதந்தி வேறு. "இந்த வதந்தியெல்லாம் தவறு. இப்பவே ஒரு ரவுண்ட் போய் வந்தால் தேர்தலில் அவர் பிரசாரம் செய்யும்போது அதன் வீச்சு குறைவாகவே இருக்கும். எனவே குஷ்பு தேர்தலின்போது மட்டுமே பட்டிதொட்டியெங்கும் மக்களைத் தன் பிரசாரத்தால் கட்டிப்போடுவார்" என்கிறார் தி.மு.க. சீனியர் ஒருவர்.



பாலிடிக்ஸ் பஜார்

வில்லனை உருவாக்காதே!

தி.மு.க. அணியை உறுதியாகத் தேர்தலில் வீழ்த்த வேண்டுமென்றால் தே.மு.தி.க.வையும் அ.தி.மு.க. அணியில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று ஜெயலலிதா நலன் விரும்பிகள் அவரிடம் வற்புறுத்திக் கூறி வருகிறார்கள். ஆனால், ஜெ.இந்த விவகாரத்தில் ஆர்வம் காட்டவில்லையாம். ''அவரைச் சேர்த்துக் கொண்டால் நமது தயவில் 30, 40 இடங்களில் வென்று பின்னர் நமக்கே வில்லனாக மாறி விடுவார். அவரை ஏன் நாம் வளர்த்து விட வேண்டும். தனியே விடப்பட்டால் இந்தத் தேர்தலோடு காணாமல் போய் விடுவார்,'' என்று ஜெ. சொல்கிறாராம்.









பெரிசுகளுக்கு போனஸ்!

''அன்பழகன், ஆற்காடு, கோ.சி.மணி, வீரபாண்டியார் ஆகிய செம சீனியர்கள் இந்த முறை போட்டியிட மாட்டார்கள்'' என்பது பொதுவாக கழக வட்டாரத்தில் உலாவரும் தகவல். இந்த நிலையில் கலைஞர் முதல்வர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டு அவர் போட்டியிட வேண்டும் என்று காங்கிரஸ் வற்புறுத்துகிறதாம். ''கலைஞர் போட்டியிட்டால் பேராசிரியரை விட்டுக் கொடுக்க மாட்டார். அவரையும் போட்டியிட வைப்பார். பெரியவர்கள் இரண்டு பேரும் போட்டியிடும்போது ஆற்காடு, கோ.சி. மணி, வீரபாண்டியாரையும் விலக்கி வைக்காமல் இந்த முறை வாய்ப்புகள் வழங்கப்படக் கூடும்'' என்று சொல்கிறார் ஒரு சீனியரின் உதவியாளர். அவருக்கும் வாய்ப்பு கிடைக்குமல்லவா?



– சஞ்சயன்

நான் எங்கு புறப்பட்டாலும் பூஜை அறையில் ஊதுபத்தி ஏற்றிவிட்டுத்தான் செல்வேன். செல்லும் இடத்தில், நினைத்தது வெற்றிபெற வேண்டுமென நினைப்பேன். அதேபோல நடந்துவிடும். அந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. உள்ளன்போடு செய்யும் பக்திக்கு நிகர் எதுவும் இல்லை என்பது என் கொள்கை. இதையே பழக்கமாகக் கொண்டதால் எதிலும் இதுவரை வெற்றியே!

-ந.முராரி, சேலம்

நான் காலையில் விழித்தெழுந்தவுடன் விநாயகர் படம் அல்லது சிறு சிலையை வணங்கிவிட்டு, வீதியில் உழைக்கும் துப்புரவு பணியாளர்களின் முகங்களைப் பார்ப்பது வழக்கம். இதனால் ஓஹோவென பலன்கள் இல்லாவிட்டாலும், மன நிறைவும், உள்ளத் திருப்தியும் உண்டாகிறது. இவற்றைப் பார்க்காவிட்டால் எதையோ இழந்தது போல் உணர்விருக்கும். இதனால் எங்குச் சென்றாலும் இப்பழக்கத்தை விடுவது இல்லை!

- எம்.எஸ்.மணி, பெங்களூரு

என் குடும்பத்தில் எந்தக் காரியம் நடந்தாலும், எந்தக் காரியத்துக்குச் சென்றாலும் அதற்கு முந்தைய இரவில் படுக்கப் போவதற்கு முன், 'பல்லி'யை மனத்தில் நினைத்து, 'குட்டிப் பையா, குட்டிப் பையா! இதைச் செய்யலாமா, வேண்டாமா?' என்று கேட்போம். பல்லி, சிறிது

அடுப்பு நாச்சியார் நமஸ்காரம்!

காலையில் எழுந்ததும் என் தாத்தா, அப்பா, அம்மா, தம்பி, தங்கை நால்வருக்கும் 'வாழ்க வளமுடன்' என்று சொல்லி விட்டுத்தான் மறுவேலை. அவர்களும் பதிலுக்குச் சொல்வார்கள். அதேபோல் டெலிஃபோனோ செல்ஃபோனோ யாரிடம் பேசும்போதும் ஹலோ என்று சொல்லாமல் 'வாழ்க வளமுடன்' என்றுதான் ஆரம்பிப்பேன். இதற்குக் காரணம் தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி தொடங்கிய உலக சமுதாய சேவா சங்கத்தின் அம்சமான அறிவுத் திருக்கோயில் சாத்தூர் கிளையில் நான் உறுப்பினராக இருப்பதால். வாழ்க வளமுடன் என மற்றவர்களை நாம் வாழ்த்தும்போது நம் மனம் நம்மையும் சேர்ந்தே வாழ்த்தும். வாழ்த்துகள் பலவிதம். 'வாழ்க வளமுடன்' தனி விதம். இந்த வாழ்த்தைச் சொல்லி வந்தால் எல்லா நாட்களும் மகிழ்ச்சி நாட்களே.



- எம்.கனிமொழி, சாத்தூர்



வாசகர்களே! உங்களோட சென்டிமெண்ட்!
குடும்ப நம்பிக்கைகள் என்ன? ஃபோட்டோவோட எழுதுங்க...
kalki@kalkiweekly -க்கும் அனுப்புங்க.

நேரம் அமைதியாக இருந்தால் அந்தச் செயலைச் செய்வதற்கு அனுமதி கிடைத்து விட்டது என்பது பொருள். செய்யக் கூடா தென்றால் செயலை நினைத்த மாத்திரத் திலேயே 'டிக் டிக்' என்று ஒலியெழுப்பி எச்சரிக்கை செய்துவிடும். அதன்படியே காரியங்கள் நடக்கும். இது எங்கள் வீட்டில் மட்டுமல்ல வெளியூருக்குச் சென்றாலும் கூட பல்லி பலன் கூறிவிடும். இந்தப் பல்லியை இறைவனின் அருள்வாக்காகவே எண்ணி காரியங்கள் செய்து வருகிறோம்.

- ஸ்ரீ செல்வ அரசி,
வாழப்பாடி

எங்கள் வீட்டில் அன்னம் ஆக்கித்தரும் அடுப்பை 'அடுப்பு நாச்சியார்' என்போம். நான் அடுப்பைப் பற்ற வைக்கும் போதெல் லாம் (கியாஸ் ஸ்டவ்தான்) அந்த (திரவ, திட எதுவாயினும்) உணவிலிருந்து ஒரு துளி அல்லது ஒரு சிறு விள்ளல் அடுப்பு மீது வைத்து 'அடுப்பு நாச்சியாரே நமஸ்காரம், அடுப்பு நாச்சியாருக்கே அர்ப்பணம்' என வேண்டிக்கொண்டே தான் சமையல் செய்வேன்.

- எஸ்.ஜம்பகலட்சுமி, சென்னை-59

சென்ட்டிமெண்ட்





விபூதி மணி

பாண்டுரங்க பஜனாஸ்ரமத்தில் தயாரிக்கப்படும் விபூதியில், துளி கூட வாசனை இல்லை. மணி ஸ்ரீனிவாசன் என்னும் இளைஞர்தான் இங்கு விபூதி தயாரித்து, சேவை செய்து வருகிறார். இதனால் அவருக்கு 'விபூதி மணி' என்கிற பெயரே நிலைத்துவிட்டது.

''சந்தனத்துக்கு மணம் வேண்டும். அது வாசனைப் பொருள். விபூதி வாசனைப் பொருள் அல்ல. காயத்துக்கு (உடலுக்கு) மருந்தாகி வருவது விபூதி. உடல் மீது பூசிக் கொண்டால், துர் நீர் உறிஞ்சும் உன்னதமானது விபூதி. தோல் நோயைத் தடுக்கும். தூய வெண்மையும், தூக்கியடிக்கும் வாசனையும் புகுத்தப் படாததே இயற்கையான விபூதி. ''பசுஞ்சாண உருண்டைகளை முட்டான் ஆகத் தட்டி, வெயிலில் உலர்த்திக் காய வைக்க வேண்டும். தரை மீது கடுக்காய்களைப் பரப்பி வைக்கணும். அதன் மீது பசுஞ்சாண முட்டான்களைத் தரை விரிப்பு போல பரப்பணும். முட்டான்கள் மீது கடுக்காய். கடுக்காய் மீது முட்டான். மீண்டும் அதன் மீது கடுக்காய்களைப் பரப்பி, வைக்கோல் இட்டு நெருப்பு பற்றவைக்கணும். தணலில் ஐந்து நாட்கள் எரிந்து புகைந்து அடங்கும். பசுஞ்சாண முட்டான்கள் சாம்பலாகி, அதுவே விபூதியாகிறது. நாலு கிலோ முட்டான் எரிந்தால், ஒரு கிலோ விபூதி கிடைக்கும்'' என்கிறார் விபூதி மணி.

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



✱ விபூதி மணி

மௌனமாய் இரு!

எந்த அவயவத்தையும்விட வாய்க்குதான் வேலை ஜாஸ்தி. ருசி பார்ப்பது, அதாவது சாப்பிடுவது, பேசுவது என்று அதற்கு இரண்டு காரியம் இருப்பதாலேயே, இரண்டையும் பாதியாகக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் பரமேச்வரன் அபிப்ராயமாக இருக்க வேண்டும். 'வயிற்றைக் கட்டி, வாயைக் கட்டி' என்கிறபோது சாப்பாடு, பேச்சு இரண்டையும் கட்டுப்படுத்துவதுதான் தாத்பர்யம். ஆனால், நேர்மாறாகப் பண்ணுகிறோம். இரண்டு வேலையும் தேவைக்கு அதிகமாகக் கொடுக்கிறோம். வாய்தான் ரொம்ப over - worked! அமித போஜனமாக ஓயாமல் ஏதாவது சாப்பாடு, நொறுக்குத் தீனி, பானம் என்று உள்ளே தள்ளிக் கொண்டேயிருக்கிறோம். எப்போது பார்த்தாலும் வெட்டியாக ஏதாவது பேசிக் கொண்டேயிருக்கிறோம்.

இந்த இரண்டையும் ரொம்பக் குறைத்துக் கொள்ள வேண்டும். 'கண்டதைத் தின்று கெடுதலை வரவழைத்துக் கொள்ளாதே; ஸாத்விக ஆஹாரம் மட்டும் மிதமாகச் சாப்பிடு; அதுவுங்கூட இல்லாமல் அவ்வப்போது உபவாஸமிரு' என்கிறது சாஸ்திரம். இதேபோல, 'வாயில் வந்ததைப் பேசிக் கொண்டே போகாதே; அதனால் பிறத்தியானையும் கெடுக்காதே, பகவத் விஷயமாகப் பேசு, பாடு, பஜனை பண்ணு' என்று சொல்லிவிட்டு, உபவாஸத்தில் ஸாத்விகாஹாரம் கூடப் பண்ணப்படாது என்று வைத்திருக்கிற மாதிரியே, 'பகவத் பரமான பேச்சும் கீர்த்தனமுங்கூட இல்லாமல் அவ்வப்போது வாயை மூடிக்கொண்டு மௌனமாக இரு' என்று பெரியோர்கள் உபதேசித்திருக்கிறார்கள்.

இப்போது எங்கே பார்த்தாலும் பேச்சுதான். 'பேச்சாளர்கள்' என்றே பலர். ஒலிபெருக்கி வைத்து மீட்டிங்குகள். கல்யாணம், கார்த்திகை, வேறே விழாக்கள் என்று எங்கே பார்த்தாலும் 'லௌட் ஸ்பீக்கர்' வைத்து சத்தம். இந்த அவஸ்தையைப் பார்க்கிறபோது, மௌனம் அதை அனுஷ்டிக்கிறவனுக்குச் செய்கிற நல்லது ஒரு பக்கம் இருக்கட்டும், இது சமூகத்துக்கே செய்கிற தொண்டு என்று தோன்றுகிறது.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர
சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

அருள்வாக்கு



அன்று ஏதோ விடுமுறை தினம். கிருஷ்ண பாரதி தன் பீரோவிலிருந்த பழைய புத்தகங்கள், கடிதங்களையெல்லாம் ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தான். பல எழுத்தாளர்களுடன் அவனுக்குத் தொடர்பிருந்தது. அவர்கள் எழுதிய கடிதங்களை எல்லாம் படித்துப் பார்த்தபோது அவனுடைய நினைவுகள் பின்னோக்கிச் சென்றன. அந்தக் கடிதங்கள் வந்த தருணங்கள் ஞாபகத்துக்கு வந்தன. ஒழித்துப் போட உட்காரும்போது பழைய கடிதங்களை எல்லாம் கிழித்துப்



போட்டு விட வேண்டுமென்றுதான் நினைத்தான். ஆனால், இப்போது அவனால் அவற்றைக் கிழித்துப் போட முடியவில்லை. அக்கடிதங்களில் அவனுடைய பழைய ஞாபகங்கள் உறைந்திருந்தன.



வண்ணநிலவன்

காபி சாப்பிட வேண்டும் போலிருந்தது. மனோகரியிடம் கேட்கலாமா என்று யோசித்தான். அம்மாவிடம் கேட்க விருப்பமில்லை. அவனுக்காக அம்மாவை மெனக்கிட வைக்க முடியாது. வருணைக் கூப்பிட்டுச் சொல்லி விடலாமென்றால், வருண் எங்கோ விளையாடப் போயிருந்தான். கார்த்திகா தூங்கிக் கொண்டிருந்தாள்.

''மனோ...'' என்று அழைத்தான். பாப்பம்மாள் காதிலும், சண்முகத்தின் காதிலும் கூட அவன் கூப்பிட்டது விழுந்தது. மனோகரி கேஸ் அடுப்பைத் துடைத்துக் கொண்டிருந்தாள். அவள் காதிலும் கிருஷ்ணபாரதி கூப்பிட்டது விழுந்தது.

''ஆமா... இதுல ஒண்ணும் குறைச்சல் இல்ல... மனோன்னு கூப்புடறதெல்லாம் அழகாத்தான் இருக்கு. பொண்டாட்டியைப் பொண்டாட்டியா எப்பிடி நடத்தறதுங்கிறதுதான் தெரியலை...'' என்று முணுமுணுத்துக் கொண்டே அவனைத் தேடிச் சென்றாள்.

பாப்பம்மாளால் அவள் முணுமுணுப்பதைக் கேட்டுக் கொண்டு சும்மா இருக்க முடியவில்லை. தன் மகனுடன் மருமகள் முன்பு போல் ஒட்டுறவாக இல்லை என்பதை அவள் எப்படியோ தெரிந்து வைத்திருந்தாள். அதனால் மனோகரியின் மீது அவளுக்கு இலேசான எரிச்சலும், கசப்புணர்ச்சியும் இருந்தது.

''எதுக்கு மொணமொணத்துக்கிட்டே இருக்கே...? அவன் கூப்புட்



டால் என்னன்னு கேட்டுட்டாத்தான் என்ன?'' என்றாள் பாப்பம்மாள். அவள் சொன்னது மனோகரிக்கும் கேட்டது. ஆனால், அத்தையிடம் அவள் எதுவும் பேசவில்லை. கிருஷ்ணபாரதி கூப்பிட்டதற்கெல்லாம் இத்தனை காலமாக ஓடி ஓடிப் போய் நின்ற பழக்கம், அப்போதும் அவளையறியாமலேயே அவளைத் தொடர்ந்தது. அவன் முன்னால் போய் நின்றாள்.

''வேற ஒண்ணுமில்லே மனோ... கொஞ்சம் காபி இருந்தாக் கொடேன்...'' என்று கேட்டான் கிருஷ்ணபாரதி.

''இதுக்கெல்லாம் பொண்டாட்டி வேண்டியது இருக்கு... ஆனால், புருஷன், பொஞ்சாதி உறவுன்னா அது என்னன்னு மட்டும் தெரியாது...'' என்று வெடுக்கென்று கேட்டுவிட்டு நகர்ந்தாள்.

''அவள் என்ன கேட்டுட்டுப் போறா பாரேன்... வர வரப் புருஷன்ங்கிற மரியாதையே இவளுக்கு இல்லாமே போச்சு...'' என்று மகன் பக்கம் பரிந்து பேசினாள் பாப்பம்மாள்.

''சரி... விடும்மா... அவ ஏதோ சொல்லிட்டுப் போறா... உனக்கென்ன வந்தது?'' என்று அம்மாவைச் சத்தம் போட்டான் கிருஷ்ணபாரதி.

''நீ பொண்டாட்டிய விட்டுக் கொடுத்திர மாட்டியே... அது என்னம்மா வெடுக் வெடுக்குன்னு பேசிட்டுப் போறா... அதைக் கேட்டுக்கிட்டு சும்மா இருக்கியே?''

சமையலறையில் எப்போதும் டிகாக்ஷன் தயாராக இருக்கும். பாலைச் சூடு பண்ணி டிகாக்ஷனைக் கலந்தாள் மனோகரி. அவன் எப்போதும் ஸ்ட்ராங்காகத்தான் குடிப்பான். அவன் ருசிக்கு ஏற்றவாறு கலந்து எடுத்துக் கொண்டு போனாள். மனதளவில் அவள் அவனைவிட்டு விலகியிருக்கிறாளா, நெருங்கியிருக்கிறாளா என்பதை அவளாலேயே உணர முடியவில்லை. ஒருவேளை இத்தனை வருஷத்துப் பழக்கம் காரணமாக அவனுக்குப் பணிவிடைகள் செய்கிறோமோ என்று தோன்றியது. காபி கேட்டதும் கொண்டு போய்க் கொடுப்பது மனைவியாகவா, இல்லை யாரோ ஒரு மனோகரியாகவா அவனுடன் இயல்பாகப் பேசி எத்தனையோ நாட்களாகி விட்டன. இனி என்ன இருக்கிறது? அவனை விட்டுச் செல்வதென்று முடிவு செய்து விட்டாள். பிறகு இந்தப் பணிவிடைகள் எல்லாம்

வாலிப வாலி!



எதற்கு?

அவனை நினைத்தால் பாவமாக இருந்தது. அவள் இல்லையென்றால், அவன் யாரிடம் இப்படி உரிமையாகக் காபி கேட்பான்? ஆனால், அடுத்த கஷணமே, அவனுடன் சுசீலா சிரித்துச் சிரித்துப் பேசியது ஞாபகத்துக்கு வந்தது. காபி தம்ளரை அவன் முன்னால் வைத்துவிட்டு நகர்ந்தாள். மனோகரி மனத்தின் ஒரு மூலையில் கணவன், அத்தை, மாமா எல்லோர் மீதும் இன்னமும் மரியாதை

இருந்தது. அந்த மரியாதைதான் அவளைக் காபி கொண்டுபோய்க் கொடுக்கச் சொல்லியது. அவனுடன் பேசுவதைக் குறைத்துக் கொண்டாலும் அவனுக்குச் செய்ய வேண்டிய பணிவிடைகளை எல்லாம் செய்யச் சொன்னது. அவனுக்குச் சாப்பாடு எடுத்து வைக்கும்போது, அவனுடைய துணிமணிகளைத் துவைக்கும் போது அவளுடைய மனம் மென்மையாகிவிடும். அவன் மீது ஏற்பட்ட கோபமெல்லாம் வடிந்து விட்டது போலிருக்கும். ஆனால், அடுத்த க்ஷணமே அவனை விட்டுப் பிரிந்து செல்ல வேண்டும் என்று அவளாகவே ஏற்படுத்திக் கொண்டிருந்த வைராக்கியம் சட்டென்று தலைதூக்கும்.

அவள் அவனை விட்டுச் செல்லப் போகிறாள். அதுதான் நிஜம். இன்னும் சில நாட்களில் வருணுக்கும் கார்த்திகாவுக்கும் பள்ளிக்கூடம் விடுமுறை விட்டு விடும். குழந்தைகளை அழைத்துக் கொண்டு திருநெல்வேலிக்கே போய்விடுவாள். அவளுடைய அந்த நடவடிக்கை அப்பாவுக்குப் பிடிக்காவிட்டால், ஆபீஸில் பம்பாய்க்கு டிரான்ஸ்பர் வாங்கிக் கொண்டு சென்று விடுவாள். பம்பாய்க்குத்தான் செல்ல வேண்டியதிருக்கும் போல. அப்பா அன்று ஃபோனில் பேசியதிலிருந்தே அவர் தனது முடிவை ஆதரிக்க மாட்டாரென்று தோன்றியது. விடுமுறை ஆரம்பமானதும் பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளுக்கு டி.சி. வாங்கிவிட வேண்டும் என்று திட்டமிட்டாள்.

பாப்பம்மாள் மருமகளை விடுவதாக இல்லை. இன்று அவளிடம் பேசி இரண்டில் ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று முடிவு செய்தாள். காபி தம்ளரை வைத்து விட்டு வேகமாகச் செல்ல முயன்றவளைப் பாப்பம்மாளின் பேச்சு நிறுத்தியது.

"நானும் ஒரு பத்து நாளா உன்னைப் பார்த்துக்கிட்டுத்தான் இருக்கேன். அவன் கூட வண்டியிலே போகிறதில்லை... அவனோட சரியாப் பேசறதில்லை... அது ஏன்னு கேக்கேன்?"

"அத்தை என் வாயைக் கிளறாதீங்க. நான் பாட்டு ஏதோ இருந்துட்டுப் போறேன்..." என்றாள் மனோகரி. சண்முகமும் மனைவி பேசியதைக் கேட்டு விட்டு எழுந்து வந்து அறை வாசல் படியில் நின்று கொண்டார். அவர் மனதிலும் அந்தக் கேள்வி இருக்கிறதே.

"ஒன்னை யார் என்ன செஞ்சா...? நாங்க யாரும் எதுவும் சொன்னோமா?" என்று கேட்டாள் பாப்பம்மாள்.

சண்முகம் மருமகளிடமோ, மகனிடமோ அதிகம் பேச மாட்டார். அவர் உண்டு, அவர் வேலை உண்டு என்று இருப்பார். ஆனால், மனோகரியின் போக்கு அவருக்கே பிடிக்கவில்லை.

"அத்தை கேக்கறதுக்குப் பதில் சொல்லேன்..." என்றார் சண்முகம். அப்பா பேசி

"அழகர் மலைக் கள்ளன் படத்தில் தொடங்கிய கவிஞர் வாலியின் திரைப் பயணம் ஐம்பத்து ரெண்டு வருடங்கள் தாண்டியும் கம்பீரமாக இருப் பதற்குக் காரணம் அவர் தன்னைத் தொடர்ந்து புதுப்பித்துக் கொண்டிருப்பதுதான்" என்கிறார் பொதிகை தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் 'வாலிப வாலி' நிகழ்ச்சியில் கவிஞர் வாலியை நேர்காணல் செய்யும் கவிஞர் நெல்லை ஜெயந்தா.

அவரின் குழந்தைப் பருவம், இளமைக் காலம், சினிமாவுக்கு வந்தது, இதுவரை எழுதியதில் மறக்க முடியாத பாடல்கள், சினிமாவில் நடித்த அனுபவம், இலக்கியப் படைப்புகள் ஆகியவை குறித்து கவிஞர் வாலி பகிர்ந்து கொள்கிறார். காலத்தை வென்று நிற்கும் கவிஞர் வாலியின் பல்வேறு திரைப்பாடல்களும் இதில் ஒளிபரப்பப்படுகின்றன. இந்த நிகழ்ச்சி ஆகஸ்ட் 26-ம் தேதி முதல் ஒவ்வொரு வியாழக்கிழமையும் இரவு 9 மணிக்கு ஒளிபரப்பாகி வருகிறது.



யது கிருஷ்ணபாரதிக்கே ஆச்சரியமாக இருந்தது. மனோகரி, தூங்கிக் கொண்டிருந்த கார்த்திகாவின் அருகே உட்கார்ந்து கொண்டு குழந்தையின் தலையை வருடினாள்.

''நான் எப்படியோ இருந்துட்டுப் போறேன். உங்களுக்கென்ன?''

''எப்படியோ இருந்துட்டுப் போறேன்னா எப்படி... இவ்வளவு நாளும், இத்தனை வருஷமா இப்படியா இருந்தே?'' என்றாள் பாப்பம்மாள்.

''எனக்கு இங்க நடக்கிற சில விஷயங்கள் பிடிக்கலை...'' என்றாள் மனோகரி.

''இங்கே என்ன அப்படித் தப்பா நடந்துட்டுது?''

''உங்களையோ, மாமாவையோ குத்தம் சொல்லலே...''

''அதான் கிருஷ்ணன் மேல என்ன குத்தம்ங்கிறேன்?''

''இது எதுக்கு மனோகரி சுத்தி வளைச்சுப் பேசிக்கிட்டு இருக்கே? சுசீலா இங்க வர்றது, அவளோட நான் பேசுறது பிடிக்கலேன்னு நேரடியாவே சொல்லிரேன்...'' என்றான் கிருஷ்ணபாரதி. அவனை விழுங்கிவிடுபவளைப் போல பார்த்தாள் மனோகரி.


''சுசீலா வர்றது பிடிக்கலையா? எதுக்கு...?'' என்று பாப்பம்மாள் துளைத்தாள்.

''அவ என்ன பொம்பள மாதிரியா நடந்துக்கிறா? அடுத்த ஆம்பளையைத் தொட்டுத் தொட்டுப் பேசறதும், ஈன்னு இளிச்சு இளிச்சுப் பேசுறதும்.... அவதான் வேணும்னா நான் எதுக்கு...?'' என்று குரல் தழுதழுக்கச் சொன்னாள் மனோகரி.

''அவதான் வேணும்னு நான் என்னைக்காவது சொன்னேனா?'' என்றான் கிருஷ்ணபாரதி.

''இதை வெளிப்படையாச் சொல்ல வேற சொல்லணுமாக்கும். அதான் பார்த்தாலே தெரியுதே...''

கிருஷ்ணபாரதிக்கு மனோகரியைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.



பாப்பம்மாள் சிரித்தாள். அதைப் பார்த்து மனோகரிக்கு எரிச்சலாக இருந்தது.

''மனோ, அவ சுபாவமே அப்படித்தான். எல்லார்கிட்டேயும் சரிக்குச் சமமா பேசுவா. கலகலன்னு சிரிப்பா... இதைப் போயிக் குத்தமா எடுத்துக்கிட்டியே?'' என்றாள் பாப்பம்மாள்.

''ஒங்களுக்கு வேணும்னா அவ ஒசத்தியா இருக்கலாம். சம்சாரம் நடத்துற வீட்டுக்குள்ளே வந்து என் புருஷனைத் தொட்டுத் தொட்டுப் பேசுறது எனக்குப் பிடிக்கலை. எனக்கு இங்க இருக்கவே பிடிக்கலை. பிள்ளைகளைக் கூட்டிட்டு திருநெல்வேலிக்குப் போகப் போறேன்... இல்லேன்னா பம்பாயிலே எங்க ஆபிஸ் இருக்கு. அங்கே போயிருவேன்... என்னை யாரும் தடுக்க முடியாது...'' என்று சொல்லிக்கொண்டே அழுதாள் மனோகரி.

''இது என்னடா கூத்தா இருக்கு... யாரோ ஒருத்திக்காக நீ எதுக்கு வீட்டை விட்டுப் போகப் போறேன்கிறே? மூட்டைப்பூச்சிக்குப் பயந்து யாராவது வீட்டைக் கொளுத்துவாங்களா? அவள இனிமே இங்கே வராதேன்னு சொல்லிட்டாப் போச்சு. இதுக்குப் போயி புருஷனை விட்டுப் போறேங்கிறியே...?''

''கல்யாணமாகி ரெண்டு பிள்ளைகளைப் பெத்தாச்சு. என் புருஷனை இன்னொருத்தி தொட்டுத் தொட்டுப் பேசுவா, சிரிச்சுக் கும்மாளமடிப்பா.. அதையெல்லாம் நான் பொறுத்துக்கணுமா...? எனக்கென்ன நாதி இல்லையா?'' என்று அழுதுகொண்டே பேசினாள். கிருஷ்ணபாரதிக்கு அவளைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. பாப்பம்மாளும் சண்முகமும் செய்வதறியாமல் இருந்தனர்.

(தொடரும்)



மூன்று தங்கம்; ஆறு வெள்ளி; ஒரு இளவரசி!



* இளவரசி

சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா அரங்கம். டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தின் இருபதாவது பட்டமளிப்பு விழா. முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல் கலாம் பரிசுகளை வழங்குகிறார். பல்கலைக் கழகத்திலேயே அதிக அளவில் மதிப்பெண் பெற்ற மாணவி என்பதில் துவங்கி, கடைசி ஆண்டு தேர்வுகளில் முதல் மதிப்பெண்கள், மெடிஸன் பாடத்தில் முதல் மாணவி என நீண்ட பட்டியல்களுக்குப் பின்னே அறிவிக்கப்பட்ட ஒரு பெயர் இளவரசி. மொத்தம் பெற்ற பதக்கங்கள் பதினான்கு. அதில் மூன்று தங்கம்; ஆறு வெள்ளி; மீதி ஐந்து அடையாளப் பதக்கங்கள். பல்கலைக் கழக அளவில் அதிக மதிப்பெண் பெற்ற முதல் பெண் என்பதற்காக ஒரு போனஸ் பதக்கம் வேறு. பலத்த கைதட்டல்களுக்கு இடையே அத்தனை பதக்கங்களையும் ஒரு மாலையாகப் பெற்ற இளவரசியை, கலாம் மேடையிலேயே விசாரித்தார்.

தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மாணவியான இவருக்கு, இத்தனை பதக்கங்கள் என்ற செய்தியே சென்னைக்கு பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்ள வந்த பின்தான் தெரியுமாம். ப்ளஸ் டூவில் தூத்துக்குடி மாவட்டத்திலேயே மூன்றாமிடம் பெற்றவர். இளவரசி பதக்கம் வாங்கியதை முதல் வரிசையில் உட்கார்ந்து கண்கள் பனிக்கப் பார்த்தவர் முன்னாள் விலங்கியல் பேராசிரியரான, இருபத்தைந்து வருடங்களுக்கு முன் சென்னைப் பல்கலைக் கழகத்தின் தங்க மெடல் பெற்ற மாணவியான இளவரசியின் பாட்டி தமயந்தி.

எப்படி முடிந்தது இளவரசி என்றால், ''பேராசிரியர்கள் சொல்வதைக் கவனமாகக் கேட்டுக் குறிப்பெடுத்துக் கொண்ட பின் படிப்பேன். சந்தேகங்களை அப்பாவிடம் கேட்பேன்'' என்றார். இவரது தந்தை அருள்மொழி மாறன் டாக்டர் மட்டுமில்லை; மருத்துவக் கல்லூரி பேராசிரியரும்கூட. தாய் செல்வியும் டாக்டர். என் பேராசிரியர்கள், அம்மா, அப்பா உதவியினால்தான் இந்த அங்கீகாரங்கள் எனச் சொல்லும் டாக்டர் இளவரசிக்கு, இன்னும் 23 வயது நிரம்பவில்லை. இளவரசியின் இளைய சகோதரி எழில் படிப்பதும் மருத்துவம்தான். இப்போது மூன்றாம் ஆண்டு!

''உடனே பயிற்சி எடுத்து வேலைக்குப் போக விரும்பாத இவர், ''மருத்துவத்தில் முதுகலைப் பட்டம்பெற்று நம் தமிழ்நாட்டுக் கிராம மக்களுக்குச் சேவை செய்யவே விரும்புகிறேன். முதுகலைப் படிப்பை இந்தியாவில்தான் படிப்பேன். நம் நாட்டு நோயாளிகளின் தேவையை, அவர்களுக்குச் சிகிச்சை அளித்துப் பயிற்சி செய்து கற்பதனால் மட்டுமே அறிந்துகொள்ள முடியும்'' என்கிறார்.

- ரமணன்

அவனிடம் ஜாக்கிரதை

நான் யாதொன்றும் செய்யவில்லை
அப்படிச் செய்கிறவனுமில்லை

உங்கள் வடிவங்களில்
தேங்க இயலாமல் கசிந்தேன்
அப்போதே சஞ்சலத்தை
மறைக்கச் சிரமப்பட்டீர்கள்

உங்கள் வார்த்தைகளுக்கு
வளைதல் செய்யும் லாகவமற்று
ஒடிந்ததில் குமைந்து
அசூசைக் கொண்டீர்கள்

நீங்கள் வாரி இறைத்த
நிறங்களைப் பதற்றத்தோடு அதீதமாய்ப்
பூசிக்கொண்டதில்
கடைவிழியில் அன்னியப்பட்டேன்

உங்களின் தீவிரத்தில்
ஆழவும் முடியாத
கலக்கவும் இயலாத
என் திணறுதலில் கலக்கமுற்ற நீங்கள்
அயலானிடம் சொல்லிப்போகிறீர்கள்
'அவனிடம் ஜாக்கிரதை'

- கதிர்பாரதி

டோரா மற்றும் நாங்கள்

டிபன் பாக்ஸ், வாட்டர் பாட்டில்,
புத்தகங்கள் என
மகனைப் பள்ளிக்கு அனுப்ப
தயார் செய்து கொண்டிருந்தாள்
மனைவி.
மாத்திரைகள், பைல்,
கட்ட வேண்டிய பில்களுடன்
மறுபுறம் நான்.
ஆறு, பாலம், மலையென
திருப்பித் திருப்பி
சொல்லிக் கொண்டிருந்த
டோராவுடன் ஆடிக் கொண்டிருந்தான்
மகன்.

- செல்வராஜ் ஜெகதீசன்

திறப்பு

தட்டித்தட்டி
திறக்கப்படாத
கதவுகளால்
திறந்துகொண்டது
அனுபவக்
குழந்தையின் கண்!

- பொ.முத்துவேல்

கவிதை கஃபே

ஒரு சொல்

எத்தனைமுறை சொன்னாலும்
சிக்கெடுத்த சீப்பை
அப்படியே விட்டுவிடுகிறாள்
மின் விசிறிக் காற்றில்
மூலையில் சுழன்றுகொண்டிருக்கின்றன
தலையுதிர்ந்த மயிர்க்கற்றைகள்.
'சாப்பாட்டில் முடியிருந்தால்
உறவு நீடிக்குமாம்'
அதே பஜனைதான்.
மளிகை சரக்கெழுதப் பேனாவை வாங்கினால்
மூடியுடன் திருப்பித் தரமாட்டேங்கிறாள்
தூங்கப் போகும்போதுதான்
கட்டிலில் குவிந்துகிடக்கும்
துணிக்குவியலை ஓரங்கட்டுகிறாள்
பொங்கி வழியாமல்
ஒருநாளும் பால் காய்ச்சுவதில்லை.
காலையில் அவசரமாய்க்
கிளம்பும்போதுதான் பீரோ சாவியைத் தேடுகிறாள்
இருக்கட்டும்
எனது பட்டியலை நொறுக்கக்கூடிய
ஒரு சொல் அவளிடம் இருக்கக்கூடும்.

\- யாழினி முனுசாமி



வாசகர்களே! உங்க கவிதைகளைச்
சீக்கிரமா 'கவிதை கஃபே' என்று குறிப்பிட்டு அனுப்புங்க...
kalki@kalkiweekly.com க்கும் அனுப்பலாம்.

"பாடுங்கோ... ஆடுங்கோ...

அண்ணா! என்று அனைவராலும் அன்பொழுக அழைக்கப்படுபவர் விட்டல் தாஸ் ஜெயகிருஷ்ண தீட்சிதர். ஃபோனை எடுத்தாலே 'ராதே கிருஷ்ணா' என்றுதான் பேச்சைத் தொடங்குகிறார். நாடி நரம்புகளில் விட்டலனின் அன்புப் பிரவாகம்! எவ்வளவு பெரிய கூட்டமாக இருந்தாலும், ஒவ்வொரு வரையும் தமது நாம சங்கீர்த்தனத்தால், கட்டிப் போடும் கெட்டிக்காரர்!

இறைவனின் நாமத்தை ஜெபம் மட்டும் செய்தால் போதும் என்கிறீர்களே? போதுமா?

இதில் போதும் போதாது என்று எதுவும் இல்லை. நம்மால் முடிந்தது அவ்வளவு தான். நமக்கு அவ்வளவுதான் சக்தி இருக்கிறது. மற்றவற்றை எல்லாம் செய்ய முடிந்தால் நல்லதுதான். ஆனால், குறைந்தபட்சம் ஸ்வாமியின் நாமத்தை ஜெபம் மட்டுமாவது பண்ணு என்று சொல்லுகிறேன்.

இதையும் நான் சொல்லவில்லை. பதிமூன்றாம் நூற்றாண்டு ஞானேஸ்வரர் முதல் பத்தொன்பதாம் நூற்றாண்டு தியாகராஜர் வரை எழுநூறு ஆண்டுகளாக கடவுளின் நாமாவைச் சொல்லு. போதும் என்று முன்னோர்கள் சொல்லி வந்திருக்கிறார்கள்.





* விட்டல்தாஸ் ஜெயகிருஷ்ண தீட்சிதர்



எந்தத் தடையுமில்லை!"

- விட்டல்தாஸ் ஜெயகிருஷ்ண தீட்சிதர்

சாதி, மதம், இனம், மொழி என்ற எந்தப் பேதமும் இல்லாமல், அவரவருக்குப் பிடித்த கடவுளின் நாமத்தைச் ஜெபித்தாலே போதும். அதுவே பெரும் பேறுகளைக் கொடுக்கவல்லது.

போடாதே என்றெல்லாம் கட்டுப்பாடுகள் போடுவார்கள். நான் எல்லாவற்றையும் விலக்கிட்டேன். உனக்கு எப்படிச் சௌகரியமோ அப்படி வா... எப்படி இஷ்டமோ அப்படி இரு.

இன்னொண்ணு, பஜனை. அது பயங்கர ஃபாஸ்ட். விறுவிறுவென்று இருக்கும். எல்லோருக்கும் பஜனையோட ரிதம், பீட் எல்லாம் உற்சாகமா இருக்கு. ரெண்டு வயசுக்குக் கீழ் இருக்கிற குழந்தைகள்தான் தூங்குமே தவிர, மற்றவர்கள் எல்லாம் பஜனையிலே லயிச்சுப் போயிடுவா.



மக்களுக்கு பக்தி ரொம்ப தேவையா இருக்கு. அதே சமயம் எளிமையும் தேவை.

நாமசங்கீர்த்தனத்தில் கலந்து கொண்டால், சோர்வே இருக்காது. இரண்டு மணி நேரம் நிம்மதியாக மனசு லேசா உல்லாசமா ஆயிடும். ஃப்ரெஷ்ஷா ஆயிடுவா.

உங்கள் நாம சங்கீர்த்தன நிகழ்ச்சிகளில், இளைஞர்கள் ஏராளமாகத் திரள்கிறார்கள். என்ன மந்திரம் போட்டீர்கள்?

சுதந்திரம் கொடுத்திருக்கிறேன். இது போன்ற ஆன்மிக நிகழ்ச்சிகளுக்கு வர வேண்டும் என்றால், வேட்டி கட்டிக்கோ, நெற்றியில் பொட்டு இட்டுக்கோ, பேண்ட்

எப்போதும் விட்டலன் நாமத்தை எல்லா மேடைகளிலும் சொல்லிக் கொண்டே இருக்கிறீர்கள். விட்டலன் எப்படி அவ்வளவு ஸ்பெஷல் ஆனார்?

எனக்கு ஒரு காரணம்தான் தோணுறது. என்னோட பாட்டி, அப்பாவோட அம்மா, எப்பவும் விட்டல், விட்டல்ன்னு சொல்

விண்டே இருப்பா. என் சின்ன வயசுல அதுதான் முதல்ல காதுல விழுந்தது. 1962ல எங்க பெரியதாத்தா அனந்தராம தீட்சிதர் விட்டலனை தரிசனம் பண்ணினார். நான் 63ல பொறந்தேன். இதுவும் ஒரு காரணமா இருக்கலாம்!



* ஹரிதாஸ் கிரியின் பாதுகைகள்



* அனந்தராம தீட்சிதர்

உங்கள் நிகழ்ச்சிகளுக்கு ஏராளமான கூட்டம் கூடுகிறது. எப்படிப் பார்க்கிறீர்கள் இதை?

மக்களுக்குப் பக்தி ரொம்ப தேவையா இருக்கு. அதே சமயம் எளிமையும் தேவை. கட்டுப்பாடுகள் இல்லாமல், எளிமையா, சுலபமா ஸ்வாமியைப் புரிஞ்சுக்கணும். கண்டிஷனெல்லாம் கூடாது. நான் வெறுமனே வழி சொல்றேன். பாடுங்கோ. ஆடுங்கோ. எந்த ஒரு தடையும் இல்லாம, நீங்க எப்படி இருக்க விரும்பறேளோ அப்படியே இருங்கோ. கடவுளோட நாமாவை மட்டும் சொல்லுங்கோ போதும்ங்றேன்.

இன்னைக்கு மக்கள் படற கஷ்டத்துல, பக்தியும் சேர்த்து அவாளைக் கஷ்டப்படுத்தக் கூடாது. மெட்ராஸ்ல நான் நடத்துற காலை நிகழ்ச்சிகளில் இருந்துட்டு, அப்படியே ஆபீஸ் போறவா உண்டு. அன்னிக்கு நாள் முழுக்க அவாளுக்கு எனர்ஜெட்டிக்கா இருக்கும்.

ஊர்ல ஏற்கெனவே நிறைய கோயில்கள் இருக்கு. நீங்களும் கும்பகோணம் கோவிந்தபுரத்துல கோயில் கட்டறீங்க. இது எதுக்கு இன்னொரு கோயில்?

முதல்ல இது கோயிலே இல்லை. ஒரு கோயிலைக் கட்டும்போது பின்பற்றப் படற எந்த ஆகம விதிகளும் இங்கே பின்பற்றப்படலை. அப்படின்னா இது என்ன? பிரார்த்தனை பண்ற இடம். தெய்வம், சுலபன் என்று புரிய வைக்கும் இடம். அவன், அடைவதற்குச் சுலபமானவன்னு உணர வைக்கிற இடம்.

உங்களுக்குப் பிடித்த ஸ்வாமியோட பெயரை இங்கே வந்து ஜெபம் பண்ணலாம். இங்கே மதம், மொழி, இனம், சாதி என்று எந்த வேறுபாடும் கிடையாது. எல்லோரும் உள்ளே கர்ப்பகிருஹத்துல போய் கிருஷ்ணனைத் தொட்டு சேவிக்கலாம்.

நீங்கள் வீட்டுல செய்ற ஒரு சமையலை இங்கே கிருஷ்ணனுக்கு நீங்களே நிவேதனம் செய்யலாம். விட்டலன்றவன் ப்ரேமை நிறைஞ்சவன். ப்ரேமையும் அன்புதான் இந்த இடத்தோட அடிப்படை.

- ஆர்.வெங்கடேஷ்

வங்க நாட்டுத் தங்கம்!

அமரர் கல்கி

வங்க நாட்டார் தங்கள் நாட்டைக் குறித்து மிக்க பெருமையுள்ளவர்கள். 'ஸொனாரே பங்காலா' என்று அடிக்கடி சொல்லிப் பெருமையடித்துக் கொள்வார்கள். அதாவது 'தங்கமயமான வங்க நாடு' என்று பொருள். பூமி வளமுள்ளதாயிருந்து நாட்டின் பெயரும் தங்கம் என்று இருந்தால் யாருக்கும் பெருமை ஏற்படுவது இயல்பு தானே?

அப்படி வங்காளிகள் பேசிப் பெருமையடித்துக் கொண்டது ஆறாயிரம் மைலுக்கு அப்பால் சென்று ஆங்கிலேயன் காதில் விழுந்தது! வந்துவிட்டான் கப்பல் ஏறி! உலகத்தில் எங்கேயாவது தங்கம் இருந்தால் அது ஆங்கிலேயனுக்குத்தான் சொந்தம் என்று இங்கிலீஷ் வேதத்திலே எழுதி வைத்திருக்கிறதல்லவா? ஆகவே, ஆங்கிலேயன் இந்தியாவுக்கு வந்ததும் முதன் முதலில் வங்க நாட்டைத்தான் கவர்ந்தான். வங்க நாட்டிலிருந்து ஆங்கிலேயன் கொள்ளை கொண்டுபோன பணத்துக்கு இன்று வரையில் வட்டிபோட்டுக் கணக்குப் பார்த்தால், தமிழ்க் கணக்கு முறைப்படி கோடி, மகா கோடி, சங்கம், மகாசங்கம், வெள்ளம், மகாவெள்ளம், சமுத்திரம், மகா சமுத்திரம் என்ற கணக்கிலேதான் சொல்லவேண்டும்.



இப்படியெல்லாம் வங்க நாட்டுப் பொருளைக் கொள்ளை கொண்டுபோன இங்கிலீஷ்காரன் அதற்கெல்லாம் பிராயச்சித்தமாகவும் பரிகாரமாகவும் ஒரு காரியம் செய்தான்.

வங்க தேசத்து மகாகவி ஒருவரை உலகத்துக்கு அறிமுகம் செய்வித்தான். உலகத்துக்கு என்ன? இந்தியாவுக்கும் வங்க நாட்டுக்குமே அறிமுகம் செய்து வைத்தான்.

டாக்டர் ரவீந்திரநாத டாகூரின் கவிதைகள் சில ஆங்கில பாஷையில் மொழி பெயர்க்கப்பட்டு, 'கீதாஞ்சலி' என்ற பெயருடன் புத்தகமாக வெளியிடப்பட்டது.

அதற்கு ஸ்வீடன் தேசத்திலே உள்ள ஒரு ஸ்தாபனத்தார் 'நோபெல் பரிசு' என்ற சர்வ தேச இலக்கியப் பரிசை அளித்தார்கள். உடனே இந்திய தேசத்தில் உள்ள படித்த மனிதர்கள் அத்தனை பேரும் விழித்துக் கொண்டார்கள். கூர்மையான திருஷ்டியுடன் நோக்கினார்கள். "ஓஹோ! இங்கே நமது நாட்டில் நமது காலத்தில் ஒரு கவிஞர் இருக்கிறார். அவர் கவி பாடுகிறார்! கவி, ஐயா கவி!" என்ற மகத்தான உண்மையைக் கண்டுபிடித்துச் சொன்னார்கள். எல்லாரும் "மகாகவி டாகூருக்கு ஜே!" என்று கோஷமிட்டார்கள்.

– 'தாகூர் தரிசனம்' வானதி பதிப்பகம்

கல்வெட்டுகள்

ஆறு வயது குழந்தைக்கும்

கலைவாணி, வேளச்சேரி

நான் ஃப்ளாட்டில் வசித்து வருகிறேன். கடந்த ஒரு மாதமாக எங்கள் வீட்டுக்கு அக்கம் பக்கத்தில் இருப்பவர்களெல்லாம் மாறி மாறி ஜுரத்தின் பிடியில் இருக்கிறார்கள். ஏன் இப்படித் திடீரென பலருக்கு ஒரே சமயத்தில் ஜுரம் வருகிறது?

பொதுநல மருத்துவர் முரளி ஆச்சாரியா:

''நீங்க சொல்வது ரொம்ப சரி. க்ளினிக்குக்கு வரும் நோயாளிகளில் பாதிக்குப் பாதி பேர், ஜுரத்தோடதான் வர்றாங்க. இதற்குக் காரணம் பருவநிலை மாற்றம்தான். காலையில் சுட்டெரிக்கும் வெயில், திடீரென்று மாலையில் பெய்யும் இலேசான மழை. மழை பெய்து கொண்டே இருக்கும்போதே வெயில்... இப்படி மாறி மாறி வருவதால், சளி, இருமல், தொண்டைக் கட்டுவது, தலை வலி, உடல் வலி, ஜுரம் எனப் பரவலாகப் பலருக்கும் பாதிப்பு வருகிறது. குறிப்பாக, சிறு குழந்தைகளுக்கும், வயது முதிர்ந்த வர்களுக்கும் நோய் எதிர்ப்புத் தன்மை பலவீனமாக இருக்கும். இதனால் வைரஸ் ஜுரம் அவர்களை வெகு சுலபத்தில் தொற்றுகிறது. தேர்ந்த மருத்துவரிடம் சென்று ஜுரத்துக்கான சரியான மாத்திரை மருந்துகளை உட்கொண்டால் இந்த ஜுரம் இரண்டு, மூன்று நாட்களில் சரியாகிவிடும்.''


* முரளி


* நாகராஜுன்

குணசேகரன், திருவையாறு

என் அம்மாவுக்கு 62 வயதாகிறது. அவர் திடீர் திடீர் என சம்பந்தமில்லாமல் பேசுகிறார். ஞாபகமும் மறந்து போகிறது. அவருக்கு வந்திருப்பது என்ன?

மூளை, நரம்பியல் நிபுணர் நாகராஜன்:

''உங்கள் அம்மாவுக்கு வந்திருப்பது dementia (ஞாபகமறதி) என்று சொல்லக்கூடிய ஒருவித alzheimer's disease ஆக இருக்கலாம். மூளையின் ஒருசில குறிப்பிட்ட பகுதிகள் சுருங்குவதால், அறிவாற்றல் மற்றும் நினைவுத் திறன் ஆகியவை இவர்களுக்குக் குறைய ஆரம்பிக்கும். மூளையின் முன் பகுதியில் சில வகையான நச்சுத்தன்மை கொண்ட புரோட்டீன்கள் சுரக்க ஆரம்பிப்பதால், இந்த ஞாபகமறதி நோய் வருகிறது. இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, அன்றாட நிகழ்வுகள் எதுவும் ஞாபகம் இருக்காது. பக்கத்தில் இருக்கும் ஒரு கோயிலுக்கு, கடைக்குப் போனால் வீட்டுக்குத் திரும்ப வழி தெரியாமல் திணறுவார்கள். இவர்களது பெயர், வீட்டு விலாசம், குடும்பத்தினர் களின் பெயர்கள் என எதுவுமே இவர்களுக்கு ஞாபகத்தில் இருக்காது. ஆனால், பல வருடங்களுக்கு முன் நிகழ்ந்தவை எல்லாம் ரொம்ப சரியாகச் சொல்

உங்கள் சந்தேகங்களை 'கல்கி கிளினிக்' என்று குறிப்பிட்டு அனுப்புங்க...
என்று டைப் செய்து ஒரு ஸ்பேஸ் விட்டு, உங்கள் கேள்வி,பெயர், ஊர்



வார்கள். அதே போல இவர்கள் பேசும் வார்த்தைகளும் கோர்வையாக இருக்காது. இந்த அறிகுறிகள் தென்பட ஆரம்பித்த உடனேயே ஒரு நல்ல மூளை நிபுணரிடம் பாதிக்கப்பட்டவரை அழைத்துச் செல்வது அவசியம். உங்கள் தாயையும் கட்டாயம் ஒரு மூளை நிபுணரிடம் அழைத்துச் செல்லுங்கள்.''



✱ வெங்கட்ரமணி

ரேகா சுப்ரமணியம், அம்பத்தூர்

ஆறு வயது நிரம்பிய என் மகள் ஸ்ருதிக்கு எதற்கெடுத்தாலும் எரிச்சல், கோபம் என வருகிறது. இந்த வயதிலேயே எரிச்சல், டென்ஷன் என்றிருப்பது சரியா?

குழந்தைகள் மனநல மருத்துவர், வெங்கட்ரமணி :

''ஆறு மாதக் குழந்தைக்கும் கோபம், எரிச்சல், மனச்சோர்வு என எல்லாமே ஏற்படும். அம்மா, அப்பா என இருவரும் வேலைக்குச் சென்று விடுகிறார்கள் என்ற ஏக்கம், இதை எடுக்காதே, அதை எடுக்காதே என்று தொடர்ந்து வரும் கட்டளைகள். அதனால் ஏற்படும் எரிச்சல்கள் எனச் சின்னஞ்சிறு குழந்தைகளுக்கே ஏற்படும்போது ஆறு வயது செல்லக் குட்டீஸ்களுக்கு இவை வருவது இயற்கையே. பெற்றோரான நீங்கள் அவளுடன் தினமும் குறிப்பிட்ட சில மணி நேரங்களாவது செலவிடுங்கள், கட்டாயம் ஓடி, ஆடி, விளையாடுவதற்கு இடத்தையும், நேரத்தையும் சேர்த்தே ஒதுக்குங்கள். பள்ளியில் ஒரே அறையில் அடைத்து வைக்கப்பட்டு வரும் குழந்தைக்குச் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க வழி அமைத்துக் கொடுங்கள். எல்லாவற்றுக்கும் மேலாகப் பொறுமையாக இருங்கள். உங்கள் மகளின் கோபம், உங்களின் பொறுமைக்கு முன்னால், பொசுக்கென பொசுங்கிவிடும்.'' ●

alki@kalkiweekly.comக்கும் அனுப்பலாம். உங்கள் செல்போனில், kacli
ஆகியவற்றுடன் 562632 என்ற எண்ணுக்கும் எஸ்.எம்.எஸ். செய்யலாம்.

மகிமைராஜன்



தெலுங்கில் சூப்பர் டூப்பர் ஹிட் டான ஹேப்பி டேஸின் தமிழ்ப் பதிப்பு - 'இனிது இனிது'. கல்லூரி மாணவர்களின் கலர்ஃபுல் கனவுகளும் கலாட்டாக்களும்தான் கதை. இயன்றவரை ஒவ்வொரு ஃப்ரேமிலும் 'பூத் கலர்' குறையாமல் இயக்கி இருக்கும் கே.வி.குகன்தான், ஒளிப்பதிவாளர் என்பதால் எங்கேயும் கேமரா, கதையை விட்டு வெளியே பயணிக்கவில்லை. சீனியர் மாணவர்களோடு சீறுவதும், மாணவிகளிடம் குழைவதுமென ஒவ்வொருவரின் மனத்துக்குள்ளும் கடந்த காலத்தில் தூங்கிக்கொண்டிருக்கும் 'காலேஜ் கேம்பஸை' உயிர்ப்பித்து விடுகிறார்கள். இத்தனைக்கும் அனைவரும் புதுமுகம். பிசிறு தட்டாமல் திரைக்கதையோடு இழையோடும் இசையில் படம் முழுக்க ரம்யம் பரவுகிறது. கல்லூரியை தாயாக உருவகித்துப் பாடும் ஃபேர்வெல் டே பாடலோடு படம் முடிகையில் நம் மனசும் கனத்துதான் போகிறது.

இனிது இனிது - நன்று நன்று!

'பசங்க' பாண்டிராஜ் கிராமத்துக் களம் புகுந்து விளையாண்டிருக்கும் படம் - வம்சம். ஆரம்பப் பாடலிலேயே நேட்டிவிட்டி எஸ்டாபிலிஷிங்கில் நிமிர்ந்து உட்கார வைக்கிறார். இதுவரை வெவ்வேறு சமூகத்துக்கிடையே ஊடுருவிக் கிடக்கும் பகைமையைப் படம்பிடித்து வந்த தமிழ்ச் சினிமாவுக்கு மத்தியில் 'மறவர்' சமூகத்துக்குள்ளே நீறுபூத்த நெருப்பாக இருக்கும் பகைமைதான் கதை. கூடவே காதலும் சேர்ந்து கொண்டதால் களைகட்டியிருக்கிறது படம். என்ன... அருள்நிதிதான் கதாபாத்திரத்தின் கனம் தாளாமல் தள்ளாடுகிறார். காதல், கலாட்டா, சண்டை.... என எல்லாத்துக்கும் ஒரே முகபாவம். சுனேனாவின் நடிப்பு ஏகத்துக்கும் சூப்பர். கஞ்சா கறுப்பு ஸார், காமெடியில கொஞ்சம் புதுப்பிச்சுக்கங்க இல்லைன்னா காணாமப் போயிடுவீங்க. கிஷோர், ஜெயபிரகாஷ் இருவரின் வீராப்பான நடிப்பில் கச்சிதம். தாஜ்நூரின் இசையில் மண்மணம். யார் மனசும் புண்படாவண்ணம் சாதிச் சீர்கேட்டைச் சொல்லியிருக்கும் பாண்டிராஜ், யதார்த்த கதை சொல்லும் இயக்குநர்கள் வரிசையில் சேர்ந்திருக்கிறார்கள்.

வம்சம் - வாழ்த்தலாம்!





ஊழலில் மக்களுக்கும் பங்கு!

''தலைவரே, இந்த வருடத்துக் கான சிறந்த கற்பனை நாவலுக்கான பரிசு உங்களுக்குத்தான் கொடுத் திருக்காங்க.''

''நான் நாவல் எதுவும் எழுத லியே!''

''உங்க சுயசரிதைக்குத்தான்.''

- என்.வி.ரமணி

''இந்த மாப்பிள்ளையை எனக்கு ரொம்பப் புடிச்சுப் போச்சுப்பா!''

''ஏம்மா?''

''டிஃபன் சாப்பிட்ட தட்டை எவ்வளவு பாந்தமா கழுவி வெச் சிருக்கான்னு பாருங்க!''

- ஞா.ஞானமுத்து





''நம்ம கட்சிக்கு மக்கள் ஆதரவு பெருகி வருதுன்னு எப்படிச் சொல்றே?''

''ஊழலில் மக்களுக்கும் ஒரு பங்கு வழங்கப்படும்னு தலைவர் அறிக்கை வெளியிட்டிருக்காரே...''

- எம்.மிக்கேல்ராஜ்

''வக்கீல் ஸார்... என்னோட பாதி சொத்து உங்களுக்கு ஃபீஸ் கொடுத்தே காலியா போச்சு...''

''அப்போ இன்னும் மீதி இருக்கா?''

- நெ.இராமன்





''மன்னா போர்க்களத்தில் புறமுதுகிட்டு ஓடிவராமல், இப்படி அசைந்து அசைந்து வருகிறீர்களே...?''

''அதனால் என்ன?''

''உங்களை 'சுலோ'த்துங்க சோழன் என்று மக்கள் கிண்டல் பண்ணுகிறார்கள் மன்னா!''

- எம்.அசோக்ராஜா

''எங்கம்மா உன்னை ஏன் திட்டினாங்க?''

''தினமும் சர்க்கரை இல்லாத காஃபியைக் கஷ்டப்பட்டுக் குடிக்கிறாங்களேன்னு இன்னிக்குக் கொஞ்சம் உப்புப் போட்டுக் குடுத்தேங்க!''

- ஞா.ஞானமுத்து



தித்திக்கும்

விஜய் டி.வி.யில் 'பக்தி நேரம்' பகுதியில் தாமல் பெருந்தேவியின் உபன்யாசம் கேட்டேன். ராம சீதா கல்யாணத்தை விவரிக்கும்போது ஸ்ரீராமனுடைய ஜாதகம், சீதையின் ஜாதகம், கல்யாண ஏற்பாடு, சிவ தனுசு, சுயம்வரம், ராமசீதாவின் அந்த நேரத்து மனோபாவம்... என்று வரிசையாகச் சிலாகித்துச் சொல்லிக் கொண்டு வந்தவர், திருமண விருந்தை வர்ணித்தார். தலை வாழை இலையை நீளமாய்ப் போட்டு அப்பம், அதிரசம், சுகியன், வடை, பாயசம், பதிர்பேனி, அக்கார வடிசில் என்று ஆரம்பித்து காய்கறி வகைகளையும் சேர்த்துச் சொல்கிறார் பாருங்கள்... அடடா! உதடுகளின் வேகம், தெளிவான உச்சரிப்பு, தங்குதடையற்ற மலையருவி போன்ற ஆற்றொழுக்கான நடை, வார்த்தைகளின் வீச்சு, மந்திர உச்சாடனை போன்ற அந்த மூச்சு விடாத துரிதம் எல்லாமே சேர்த்து சொக்க வைத்து விட்டது. ஒவ்வொரு பதார்த்தத்தின் நிஜ ருசியும் நம் நாக்குக்கே வந்து விட்டதைப் போன்ற அற்புதமான சுகானுபவம் அது. மணக்க மணக்க விருந்து சாப்பிட்ட நிறைவைத் தந்த அந்த உபன்யாசத்தை நாள் முழுவதும் கேட்டுக் கொண்டிருக்கலாம்.

- எஸ்.கமலா இந்திரஜித்,
வடபாதிமங்கலம்

பிரச்னைகளை மறந்திட 'யோகா' எல்லாம் தேவையே இல்லை. சன் தொலைக்காட்சி 'அசத்தப் போவது யாரு?' நிகழ்ச்சியை விடாமல் பார்த்தாலே போதும். பிரச்னை போயே போச்சு. குடும்பத்தோடு பார்த்து மகிழ வைக்கிறது. வீட்டு, வெளி வேலைகளை மூட்டைக் கட்டி வைப்பதோடு சாப்பிட்டுக் கொண்டேயும் பார்த்தால், என்ன சாப்பிடுகிறோம் என்பதும் தெரியாமல் போகிறது. இந்த நிகழ்ச்சியில் திரைப்படத் துறையைச் சார்ந்தவர்களின் அனுபவங்களைக் கேட்கையில் சுவாரஸ்யமாக இருக்கிறது. வாண்டுகள் முதல் பெரியவர்கள் வரை நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் அனைவரும், 'நிகழ்ச் சிக்குப் போகலாமா சார்' எனக் கேட்கும்போதே நிமிர்ந்து உட்கார வைத்து விடுகிறார்கள். பங்குபெறும் அனைவருமே 'முத்(து)'த்தாகப் பேசி அசத்தும்போது 175 வது நிகழ்ச்சி என்ன, அதையும் தாண்டி வெற்றிவாகை சூடும்.

- சுகந்தி நாராயண்,
வியாசர்பாடி





டி.வி.யில் உங்களுக்குப் பிடித்த நிகழ்ச்சி எதுவாயினும்... 'சேனல் சாய்ஸ்' என்று குறிப்பிட

சேனல் சாய்ஸ்

தேன் கிண்ணம்!

சின்னத் திரையில் எல்லா சேனல்களிலும் ஒப்பாரி, பழிக்குப் பழி, இரத்தத்துக்கு இரத்தம், பாலியல் பலாத்காரம் என பஞ்சமாபாதகங்களைச் சுற்றி நாள் முழுவதும் ஓடும் மெகா சீரியல்களுக்கு நடுவில் 'பாலை வனச் சோலை' போல ஜெயா டி.வி.யில் ஒளிபரப்பாகும் 'தேன் கிண்ணம்' நிகழ்ச்சி செம தித்திப்பு. திங்கட்கிழமை வி.ஐ.பி.களுக்குப் பிடித்த பழைய பாடல்கள், அனுபவித்து ரசித்துச் சொல்லும் விதம் அருமை. செவ்வாய்க் கிழமை நேயர் விருப்பம்; புதன் கிழமை நிர்வாகத்தினர் விருப்பம், வியாழன் 'கருத்தும் கானமும்' (ஏதேனும் ஒரு தலைப்பில் அழகான தொகுப்புரையுடன் பாடல்கள்) வெள்ளி 'பாட்டும் பின்னணியும்' எனும் தலைப்பில் 'இசை அமைப்பாளர்களின் விவரங்களுடன் பாடல்கள்...' என பழைய பாடல்கள் செவிகளில் தேனைப் பாய்ச்சுகிறது.

நிகழ்ச்சித் தொகுப்பாளினிகள், நேர்த்தியாகப் புடைவை அணிந்து, தலையை வாரிப் பின்னலிட்டு, மங்களகரமாக அலட்டல் ஏதுமின்றித் தொகுத்து வழங்குவது கண்களுக்குக் குளிர்ச்சியாக இருக்கிறது.

- எஸ்.விஜயலக்ஷ்மி,
ஆதம்பாக்கம்

கலைஞர் தொலைக்காட்சியின் 'கருத்து யுத்தம்' நிகழ்ச்சி எல்லோரும் பார்க்க வேண்டிய ஒன்று. மக்களுக்குப் பயன்படும் பல்வேறு தலைப்புகளில் இருசாரார்களின் கருத்துகளைச் சொல்ல வைப்பதோடு, ஐந்து நபர்களை நடுவர்களாக்கி அவர்களின் கருத்துகளையும் கேட்கிறார்கள். இந் நிகழ்ச்சியைக் கேட்பதால், ஒரு பிரச்னைக்கு எப்படியெல்லாம், மாறுபட்ட கோணங்களில் தீர்வு இருக்கிறது என உணர முடிகிறது. சீரியல்களுக்கு இம்மாதிரியான நிகழ்ச்சிகள் மாறுதலாகவும் பயனுள்ளதாகவும் இருக்கிறது. நமக்கே அம்மாதிரியான பிரச்னை வந்தால், எப்படி எதிர்கொள்ளலாம் என்ற தெளிவு கிடைக்கிறது.

- எஸ்.பி.பாலு, திருச்சி






கைப்படத்துடன் எழுதுங்க. kalki@kalkiweekly.com க்கும் அனுப்பலாம்.

ஆக்ஷனுக்கு மில்லா என்று பெயர்!

கொடிய வைரஸிடம் இருந்து மக்களைக்
காப்பாற்றும் ஆலின் கதைதான் 'ரெசிடெண்ட்
ஈவில் ஆஃப்டர் லைப்' படம். இதே பெயரில்
வந்து வசூலில் சாதனை படைத்த படங்களின்
தொடர்ச்சி இப்படம். இதில் அட்ராக்ஷனே
லேட்டஸ்ட் '3D' தொழில் நுட்பம்தான்.
ஆக்ஷன், த்ரில்லர் படமான இதை பால்.
டபிள்யூ.எஸ்.ஆண்டர்சன் கதை எழுதி
இயக்கியுள்ளார். தன் மனைவியும் நட்சத்திர
நடிகையுமான மில்லா ஜாவோவிச்சை பிரதான
ஆலிஸ் வேடமேற்க வைத்துள்ளார்.
மில்லா, ஹாட் கேர்ள் என்று பத்திரிகை
களால் பலமுறை தேர்ந்தெடுக்கப்பட்டவர்.
ஒரு குழந்தைக்குத் தாயான பின்னும் இவர்
வனப்புக்குக் குறைவு இல்லை. முந்தைய
'ரெசிடெண்ட் ஈவில் படங்களை இயக்கியவர்
இதே இயக்குநர்தான் என்றாலும் இதில் கூடுதல்
செறிவு ஏற்றி திகில் கூட்டி வழங்கியுள்ளார்.
இப்படத்தில் வைரஸின் அச்சுறுத்தலுக்கு அஞ்சு
வதா. மில்லாவின் அதிரடிக்கு அஞ்சுவதா
என ரசிகர்கள் கலங்குவார்கள். இதற்
கிடையில் மிரட்டும் தீயசக்தி வேறு.
லேட்டஸ்ட் 3D தொழில்நுட்பம்
இதில் கையாளப்பட்டிருக்கும் முறை
கண்களை விரியவைக்கும். படம்
வெளியாகும் அன்றே வீடியோ கேம்ஸும்
வெளியாக இருக்கிறது.

- சிவா





சேவைக்கே முதலிடம்!





விட்டல்தாஸ் ஜெயகிருஷ்ண தீட்சிதர் உருவாக்கிவரும் பாண்டுரங்கன் கோயிலோடு கூடவே தங்கும் இடங்களையும் கட்டிவருகிறார். பக்தர்கள் தங்குவதற்கு எனக் கட்டப்பட்டுள்ள அறைகள், எளிய ஆனால் போதுமான வசதிகளோடு உள்ளன.

இத்துடன் அவர் ஏற்படுத்தியிருக்கும் மற்றொரு குடியிருப்புதான் இன்னும் சிறப்பு வாய்ந்தது. பாண்டுரங்கனின் பக்திப் பரவசத்தில் மிதக்க விரும்புபவர்கள், அங்கேயே தம் வாழ்நாளெல்லாம் தங்கி இருந்து, தம்மால் ஆன எளிய சேவைகளைச் செய்ய, குடியிருப்புகளைக் கட்டியிருக்கிறார்.

ஓர் அறை, இரண்டு அறைகள் கொண்ட தனி வீடுகள் அவை. அடிப்படை வசதிகளைக் கொண்ட இக் குடியிருப்புகளில் வசிப்போர் தம்மால் ஆன பொருள் உதவியை பாண்டுரங்கனுக்கு வழங்கியவர்கள்.

''குருஜியுடன் பதினான்கு ஆண்டுகளாக இருந்து வருகிறேன். நாம சங்கீர்த்தனத்துக்கு மிருதங்கம் வாசித்து வருவது, என் வாழ்வில் கிட்டிய பெரும் பாக்கியம். கடந்த ஏழு ஆண்டுகளாக சேவார்த்திகள் இல்லத்தில், குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எங்களுக்கு இரண்டு பையன்கள்'' என்கிறார் சாயி பிரகாஷ்.

''கடந்த மார்ச் மாதம் ஓய்வு பெற்றேன்,'' என்று தொடங்கும் ராம்ராம் ஜானகி, சென்னையில் ரயில்வே துறையில் வேலை பார்த்தவர். நாம சங்கீர்த்தனத்தில் ஈடுபாடுகொண்ட இவருக்குத் திருமணம் ஆகவில்லை. நாமதேவ், ஞானாபாய், புண்டலீகன்... போன்ற பெரும் பக்தர்கள் பாடிய அபங்கங்கள் மீது தீராத பற்று கொண்டவர். ''அதன் பிறகு இங்கு வந்து தங்கிவிட்டேன். குருசேவையே என் குறிக்கோள். பாண்டுரங்க சேவைக்கு நான் கொடுத்துவைத்திருக்க வேண்டும்'' என்று நெக்குருகிப் போகிறார் ஜானகி. இவர் ஸ்ரீ விட்டல் ருக்மணி சன்ஸ்தான் தகவல் மையத்தில் சேவை புரிந்து வருகிறார்.

சேவை மனப்பான்மை தான் அடிப்படை. இக்குடியிருப்புகளில் தங்கிக் கொண்டு, கோவில் பக்கமே வராதவர்களுக்கு இங்கே இடமில்லை. பாண்டுரங்கனின் சேவைகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு, தம் வாழ்வை அர்த்தமுள்ளதாக்கிக் கொள்ள விரும்பும் அன்பர்களுக்கே இங்கே முதலுரிமை.

- சரவணன் திரு



* சாயி பிரகாஷ் * ஜானகி



கதையும் தொழில்நுட்பமும் கைகோத்தால் ரசிகர்களுக்கு வித்தியாசத் திரைப்பட அனுபவம் கிடைக்கும். அது போன்றதோர் படம் 'பிரானா 3D.' உயிர் பயத்தைப் பற்றிச் சித்திரிக்கும் படங்கள் அக்காலத்திலிருந்து வரவேற்பைப் பெற்று வருகின்றன. 'ஜுராஸிக் பார்க்' - டைனோசர், 'அனகோண்டா' - பாம்பு, 'ஜாஸ்'- சுறா மீன் ஆகிய திரைப் படங்களின் வரிசையில் இப்போது 'பிரானா'வில் மீன்.

லேக் விக்டோரியா, கோடைக்கால சுற்றுலாத் தலம். ஆண்டுக்கு ஆண்டு இங்கு வருகிற பார்வையாளர் கூட்டம் அதிகமாக அங்கு உள்ள 'ஸ்பிரிங் பிரேக்' என்ற கேளிக்கை சந்தோஷ நீர் நிலையம்தான் காரணம். ஸ்விம்மிங், போட்டிங், டைவிங் என்று தங்கள் கவலைகளை மறந்து கூடிக் கும்மாளம் அடிக்கும் கூட்டம் 5000லிருந்து 50,000 என்று பெருகிக்கொண்டே போகிறது.

இந்த ஏரிக்குள் உயிர்ப் பலிகள் நிகழ்கின்றன. காரணம் அமானுஷ்யச் சக்தி போல தெரிந்தது. பிறகு அது நீரில் வாழும் மீனால்தான் நடக்கிறது என்று தெரிந்ததும் பலரும் நம்பவில்லை. புலனாய்வு செய்ய நீருக்குள் இறங்கித் தேடினால் நீரடி மண் தரை சமமாக இல்லை. பிளந்து பல நூறடி ஆழத்துக்கு போய்க்கொண்டே இருக்கிறது. இது பூகம்பத்தின்போது ஏற்பட்ட பிளவு. அதனுள் தேடுதல் வேட்டையில் இறங்கினால் ஷாக். ஆட்கொல்லி மீன்களின் அட்டூழியம்தான் இது என்று தெரிகிறது. அதுதான் 'பிரானா' மீன் வகை. பிரானா வகை மீன்கள் இரண்டு மில்லியன் ஆண்டுகளுக்கு முன் அழிந்துவிட்டன. அது எப்படி மீண்டும் வரமுடியும்? என்ற வாதப் பிரதிவாதங்களுக்கு மத்தியில் ஆராயப் புறப்பட்டுப் போகிறார்கள். உயிர்க்கொல்லி மீனுக்கு வலைவிரிக்கப் பார்த்தால் வலை வீசியவர்களின் உயிருக்கே உலைவைக்கின்றன பிரானா மீன்கள். பிரானா முதலில் மனிதனைத் தாக்கும். அப்போது வெளியேறும் ரத்த வாடையை மோப்பம் பிடித்தபடி கூட்டமாக வந்து துவம்சம் செய்யும் ரத்தவெறி பிடித்த மீன் இனம் இது.



பிரானா இன் விக்டோரியா லேக்!



ஒரு நாள் லேக் விக்டோரியாவில் சுமார் 20,000 பேர் நீச்சல் கேளிக்கையில் குஷியாக இருக்கும்போது, பிரானா மீன்கள் ஆட்களை உள்ளிழுத்துக் கபளிகரம் செய்கின்றன. 'என்னய்யா கதை விடாதீங்க... மீன் மனுஷனைக் கடிக்குதா.. யார் காதுல பூ வைக்கிறீங்க...?' என்று அலட்சியம் செய்கிறார்கள். சிக்கியுள்ள 20,000 பேரை மீட்கும் பொறுப்பு எலிசபெத் ஷூவுக்கு வருகிறது. ஒரு பெண்மணியாக இருந்து கொண்டு அவர் எடுக்கும் மீட்பு முயற்சிகள்தான் மீதிக்கதை.

ஏரியில் நிறைய ரத்தம் சிந்தும் காட்சி எடுக்கப்பட வேண்டும். அதற்கான சிவப்பு திரவம் கலக்கப்பட்டு ஏரி நிறம் மாறியது. இதற்கு விமர்சனங்கள், எதிர்ப்புகள். இப்படி பல்வேறு சவால்களைச் சந்தித்த பின்தான் 'பிரானா 3D' உருவாகியுள்ளது.

தமிழ், தெலுங்கு, இந்தி, ஆங்கிலம் ஆகிய நான்கு மொழிகளில் இப்படத்தை டைமன்ஷன் பிலிம்ஸ் நிறுவனம் தயாரித்திருக்கிறது. அதிபயங்கரப் படங்களை இயக்கும் அலெக்சாண்டர் ஏஜா(Alexandre Aja)தான் டைரக்டர்.

முழுநீள ஆக்ஷன் த்ரில்லராக உருவாகியுள்ளது இப்படம். ஆகஸ்ட் 20, 2010 அன்று உலகம் முழுவதும் வெளியான பிரானா ஏக வரவேற்பு. அலெக்சாண்டர் ஏஜாவின் படங்களிலேயே இது ரொம்பவும் ஃப்ரெஷ்ஷாக இருக்கிறது என்று புகழ்கிறார்கள் விமர்சகர்கள்.

– மகிமைராஜன்



அலெக்சாண்டர் ஏஜா



எலிசபெத் ஷூ

மை பைக்!

நான் ஓட்டும் வண்டி எம். 80, இதை நான் வண்டியாக நினைத்ததில்லை. எனக்கு அது மிகவும் நெருங்கிய தோழி. என் மகள், பள்ளிக்குச் செல்வது, பள்ளியில் இருந்து வருவது எல்லாம் எம்.80ல்தான். பள்ளியில் இருந்து வரும்போது வண்டியை நான் ஓட்ட என் பின்னால் என் மகள் பூமிகா, அவள் தோழி அக்ஷயா, அவளின் அம்மா, புத்தகப் பை (10 கிலோ இருக்கும்) எல்லாம் எனது எம்.80ல்தான். மடிப்பாக்கத்தின் சாலைகள் மேடுபள்ளமாக இருக்கும். மழைக்காலத்தில் சேறும் சகதியுமாக இருந்தாலும், அதில் நாங்கள் விழாமல் வருவது எம்.80ல்தான். ஆகஸ்ட் 27 எங்கள் திருமண நாள். அன்று வாங்கிய வண்டி. இதுவரை பெரிய செலவு செய்ய வைக்காமல் எங்கள் நிலையைப் புரிந்து கொண்ட தோழி போல இருக்கிறது.

- அ.சௌம்யா, மடிப்பாக்கம்

சைக்கிள் கூட ஓட்டத் தெரியாமல் இருந்த எனக்கு, பிறந்த நாள் பரிசாக ஒரு மொபெட்டை வாங்கித் தந்தார் என் கணவர். ''ஓட்டத் தெரியாதே!'' என்றதற்கு ''நானிருக்கிறேன்'' என்று கூட வந்து பொறுமையாகச் சொல்லிக் கொடுத்தார். அதுவரை வீட்டுப் பறவையாக, தன்னம்பிக்கை இல்லாமல் இருந்த நான், சொந்தமாக வண்டி ஓட்டி, என் காரியங்கள், வீட்டுப் பொறுப்புகள் என்று அத்தனையையும் கவனிக்க முடிந்ததில், என் மேல் எனக்கே மரியாதை வந்தது. பெண் தொழில்முனைவோருக்கான சிறப்பு வகுப்புகளைத் தேடிச் சென்று பயிற்சி பெறும் அளவு வளர்ந்தேன். இப்போதும் இல்லத்தரசியாக, அடுக்குமாடிக் குடியிருப்பின் பொறுப்பாளராக தன்னம்பிக்கையோடு செயலாற்றி வருகிறேன்.

- ர.கிருஷ்ணவேணி, தொளம்பூர்




✱ அ.சௌம்யா

டேராடூனில் (வங்கியில்) பணிபுரிந்துகொண்டிருந்த போது நண்பனுடைய ஸ்கூட்டரை எடுத்துக் கொண்டு டேராடூனை அலசினேன். சாதாரணமாக 80 கி.மீ. வேகம். நெடுந்தொலைவு ஓட்டிச் சென்று வந்தேன். ஹெல்மெட்டும் இல்லை. பயமறியாத இளங்கன்றாக இருந்தேன். அடுத்த நாள் காலையிலேயே பல வாடிக்கையாளர் நண்பர்கள் என் பொறுப்பற்ற டிரைவிங்கையும், என்னையும் கண்டித்த போதுதான் எனக்கே தன்னுணர்வு கிட்டியது. அன்றிலிருந்து 45 கி.மீ. தாண்டினாலே மூளைக்குள் 'பீப்' 'பீப்' என்று கேட்கும்.

வாரணாசியில் இருந்தபோது மோட்டார் சைக்கிள் டெலிவரி எடுத்து மாறுபட்ட கியர் மெகானிசத்தைக் கண்டு பயப்படாமல் ஓட்டிய நான், தில்லி வந்த முதல் நாளே 3 ஸ்கூட்டர் விபத்துக்களையும், இரண்டு சடலங்களையும் கண்டுவிட்டதால் ஏற்பட்ட பயம் முப்பது வருடங்களாகியும் இன்றளவும் மனத்தில் நச்சரித்துக் கொண்டிருக்கிறது. அன்று முதல் ஸ்கூட்டரையே தொடுவதில்லை!

- எஸ்.வெங்கடசுப்ரமணியன், தி. நகர்.



உங்க பைக் அனுபவத்தை 'மை பைக்' என்று குறிப்பிட்டுப் புகைப்படத்தோடு எழுதி அனுப்புங்க. kalki@kalkiweekly.comக்கும் அனுப்பலாம். செல்ஃபோனில் KACON என்று டைப் செய்து, ஒரு ஸ்பேஸ் விட்டு, உங்கள் அனுபவம், பெயர், ஊர் ஆகியவற்றுடன் 562632 என்ற எண்ணுக்கும் எஸ்.எம்.எஸ்.செய்யலாம்.

நான் வங்கி நிர்வாகியாக ஒரு கிளையில் பணியாற்றியபோது நடைபெற்ற சுவாரஸ்ய மான சம்பவம் இது!

விவசாய அபிவிருத்திக்காகக் குறைந்த வட்டிக்குக் கடன் தரும் திட்டத்தின் கீழ் ஒரு வாடிக்கையாளருக்கு 'மோட்டார் பைக்' லோனை சாங்ஷன் செய்தேன். அந்தக் கிளைக்கு அதுதான் முதல் 'பைக்' லோன். இது தவிர, பல்வேறு கடன்களையும் வழங்க இருந்ததால் வங்கியின் உயர் அதிகாரிகள், கிராம மக்கள் கலந்துகொள்ளும் ஒரு விழாவாக நடத்தினோம்.

விழாவில் 'பைக்' சாவியை வாங்கிய வாடிக்கையாளர், 'இந்த வண்டியை மானேஜர் ஓட்டிப் பார்த்துட்டுக் கொடுத்தா மகிழ்ச்சியா யிருக்கும்' என்றார். எனக்கோ வயிற்றில் புளியைக் கரைத்தது. காரணம், நான் அந்த மாடல் பைக்கை ஓட்டியதேயில்லை, இருந்தாலும் 'தெரியாது' என்று சொல்ல மனமின்றி வண்டியில் ஏறி அமர்ந்து ஸ்டார்ட் செய்து கிளப்பினேன். சீறிப்பாய்ந்தது வண்டி. இந்த மாடல் வண்டியில் மட்டுமே 'பிரேக்' இடது புறம் இருக்கும். அதை உணர்ந்து பிரேக் போடுமுன் வண்டி ஒரு குடிசைச் சுவர் மீது மோதி விட்டது. நல்லவேளையாக ஆட்கள் மீது மோதவில்லை. குடிசைச் சுவருக்கும் வண்டியின் முகப்புக்கும் சற்று சேதம். அஷ்ட கோணலான முகத்துடன் நான் பைக்கி லிருந்து இறங்க பெருந்தன்மையுடன் நிலை மையைச் சமாளித்தார் வாடிக்கையாளர். "வண்டி பிரேக் குல பிரச்னை இக்குதுன்னு நினைக்கி றேன். டீலர்கிட்டே கொடுத்து சரிபண்ணிட றேன்!" எனச் சொல்லி என் மானத் தைக் காத்த அவருக்கு மான சீகமா நன்றி சொன்னேன்.

- ஆர். ரகோத்தமன்,
அரும்பாக்கம்



கத்திக்கப்பல்


கடல் மாதிரி மூன்று கட்டு வீடு. மூன்றாம் கட்டில் நாங்கள் இருந்தால் யாருக்கும் தெரியாது. வீட்டின் நடுவே வானம் பார்க்க வசதியாய் முற்றம். இரும்புக் கம்பியால் சதுரம் சதுரமாய் அடைத்திருந்தார்கள். எத்தனை அறைகள் என்று விரல் விட வேண்டும். கொல்லைப்பக்கம் பசு மாடுகளின் மணியோசை. மாட்டுப் பொங்கல் வந்துவிட்டாலே குஷிதான். கொம்புகளுக்குக் காலையிலிருந்து வர்ணம் பூசிக்கொண்டிருப்பார்கள். பொறுமையாய்க் காட்டிக்கொண்டிருக்கும். அதன் கொம்புகளில் புதுத் துண்டில் பணம் வைத்துக் கட்டி விரட்டி விடுவார்கள். பின்னாலேயே 'ஹோ'வென்று கத்திக்கொண்டு ஓடுவோம்.

தாமரைக் குளத்தில்தான் தினசரிக் குளியல். 'கொடி சுத்திக்கும்டா பார்த்து' என்று எச்சரிக்கப்பட்டு அனுப்பப்படுவோம். இதனாலேயே தாமரைக் குளத்தில் குளிக்க அத்தனை சுதந்திரம் இல்லை. கோவில் வாசல் பக்கம் ஒரு குளம். அங்கே மாடுகள்தான் வழக்கமாய் குளிக்கும். அதன்மேல் மொய்க்கும் உண்ணிகள், பெரிய ஈக்கள் குளிக்கப் போகும் எங்களையும் பிடுங்கும். அப்போது கற்றுக் கொண்டதுதான் உள் நீச்சல். குளத்தின் இக்கரையிலிருந்து அக்கரை வரை நீச்சல் அடித்து சாதனை புரிந்ததை இப்போது நினைத்துப் பார்த்தால் பிரமிப்பாய் இருக்கிறது. ஏறக்குறைய ஜில்லிட்டு வீடு திரும்பும் போது பசி அதன் உச்சத்தில் இருக்கும். முதல் நாள் கோயிலில் கிடைத்த புளியோதரை பிரசாதமும் கெட்டித் தயிரும் தாமரை இலையில் வைத்துத் தருவார்கள். இப்போது நினைத்தாலும் அதன் சுவை நாக்கில் நிற்கிறது. மழை நீர் தேங்கியதாகவோ, கொசுக்கள் பிடுங்கிய தாகவோ சரித்திரமே இல்லை. கல்யாணமோ, துக்கமோ ஊரே ஒன்றுகூடி விடும். அலமுவின் சிநேகம் கிடைத்தது அந்த மாதிரி ஒரு சமயத்தில்தான்.

கோயில் தீட்சிதரின் மகள் கல்யாணம். தாலி கட்டி முடிந்த அரை மணியில் அதுவரை உயிரை இழுத்துப் பிடித்துக் கொண்டிருந்த ஒரு பாட்டி இறுதி மூச்சை விட்டாள். 'அலமு... இனிமேல் உனக்கு யார் இருக்கா' என்கிற அலறல் கேட்டது. ஒரு வாரம் முன்பே கல்யாணத்துக்கு வந்திருந்த பாட்டியும், பேத்தியும் அவ்வளவாய் எங்கள் கவனத்தை அதுவரை ஈர்க்கவில்லை. இப்போது அலறல் கேட்டு அலமுவை முதன்முறையாக உற்றுப் பார்த்தோம். ரெட்டை ஜடையில் ஒரு தேவதை என்று வயசான பின் சொல்லத் தோன்றியது. அப்போது ஓர் ஈர்ப்பு இருந்தது மட்டும் நிஜம்.

'நீங்களாம் வரக் கூடாது' என்று மிரட்டிவிட்டு பா(ட்)டியைக் கொண்டு போனார்கள். குளத்தில் குளிக்க அன்று கூடுதலாய் ஒரு வாய்ப்பு




ரிஷபன்

கிடைத்தது. சுடச்சுட குழம்பு சாதம், கூட்டுச் சாப்பிடக் கொடுத்தார்கள். பாட்டி செத்தது கல்யாணச் சாவு என்று சொல்லி தினசரி ஒரு ஸ்வீட் கிடைத்தது. லட்டு, அப்பம், அதிரசம், மைசூர் பாகு... எங்கள் கெட்ட புத்தியில் ஊரில் உள்ள மற்ற பாட்டிகள் எல்லாம் எப்ப போவார்கள் என்று சித்ரகுப்தனாய் மாறி ஏடாகூடமாய் யோசிக்க ஆரம்பித்தோம். இத்தனை நேரம் 'நாங்கள்' என்றே சொல்லிக் கொண்டிருக்கிறேன். அந்த நாங்கள்... நான், கிச்சா என்கிற கிருஷ்ணசாமி, பட்டா என்கிற பார்த்தசாரதி, கோவாலு என்கிற கோபால்.

பத்து நாட்கள் முடிகிறவரை ஊருக்குப் போக வேண்டாம் என்று அலமுவை நிறுத்தி விட்டார்கள். கோயிலுக்குப் பெரும்பகுதி போக முடியாமல் தீட்டு. சுற்றி வளைத்து எல்லோரும் சொந்தம் என்கிற லாஜிக்கில். தீட்சிதர் மட்டும் துக்கத்துடன் போனார். மற்ற நாட்களில் ஒத்தாசைக்கு ஆட்கள் இருப்பார்கள். இப்போது அவரே எல்லா வேலைகளையும் செய்ய வேண்டி இருந்தது. கோயிலை பத்து நாட்கள் மூடிவிடலாமா என்கிற அபத்தமான யோசனை ஆரம்பத்திலேயே நிராகரிக்கப்பட்டது.

எங்கள் நால்வரில் நான்தான் வயதில் சின்னவன். மற்ற மூவரும் ஏறக்குறைய ஒரே வயது. அதனால் எந்த வேலைக்கும் என்னைத்தான் ஏவி விடுவார்கள் முன்பு. இப்போது சீன் மாறி விட்டது. 'டேய் அலமுக்குக் காஃபி கொடுத்துட்டு வாடா..' என்று குரல் கேட்டால் எனக்கு முன் மற்ற மூவரும் ஓடிப் போய் நிற்பார்கள். 'அலமு தனியா குளிக்கப் போகவேண்டாம்... நீ போ கூட' ஒருத்தன் சோப்... அடுத்தவன் டவல்... என்று பூனைப் படை ரெடியாகிவிடும்.

வெளியில் வர முடியாத அலமுவின் பொழுதுபோக்குக்குக் கேரம் விளையாட நாங்கள் எப்போதும் தயார் நிலையில் இருந்தோம். கிச்சா வேண்டுமென்றே ஃபாலோ போடாமல் விட்டு விடுவான். இந்த யுக்தி புரியாத கோவாலு (ஆட்டமென்று வந்துவிட்டால் கொலைவெறியுடன் இருப்பான்) ஃபாலோ காயினைப் போட்டுவிட கிச்சா முகத்தைச் சோகமாய் வைத்துக் கொண்டு 'ஏண்டா தப்பாட்டம் ஆடற' என்று கேட்பான். கோவாலு சண்டை போட்டுக் கொண்டு வெளிநடப்பு செய்ய எனக்கு வாய்ப்பு கிடைக்கும்.

கிச்சாவின் மனைப் படிக்க முடிந்ததால் சில நேரங்களில் நானே கோவாலுவின் வெறியைத் தூண்டி விட்டிருக்கிறேன். அலமுவுக்கோ எங்கள் சண்டை அவளின் சுவாரசியத்தை அதிகப்படுத்திக் கொண்டிருந்தது. கோவாலு எழுந்து போனதும் முகத்தை அப்பாவியாய் வைத்துக்கொண்டு 'என்னாலதானே உங்களுக்குள்ள சண்டை' என்று கேட்பாள்.

'நீ பேசாம இரு. அவன் போனா என்ன... நாங்க இருக்கோம்ல' கிச்சா உணர்ச்சிபூர்வமாய்க் குமுறுவான். பட்டாவின் கண்கள் சட்டென்று கலங்கிவிடும். எனக்கோ மையமாய் முகம். அதிலிருந்து யாருக்கும் எதுவும் புரியாது.

கையில் உருமாறியிருந்த காகிதத்தை, 'என் ப்ரஸண்ட்' என்றா

அலமுவின் கண்கள் சில சமயம் பாட்டியை நினைத்துக் கலங்கும். அல்லது அவள் எதிர்காலம் நினைத்தோ? கிச்சா தன் சேமிப்பு மூன்றரை ரூபாயைக் கண்ணில் காட்டாமல் (வீட்டில் சுட்டது பிளஸ் கடை கண்ணிகளுக்குப் போன கூலி) 'நான் உன்னைக் காப்பாத்தறேன்' என்பான். தனிமையில் அவனிடம் கேட்டேன்.

'என் ஸ்கூல் ஃபீஸ் கட்டணும். ஹெல்ப் பண்றியா?'

கிச்சா எப்போதும் இல்லையென்று சொன்னதில்லை.

'பார்க்கலாம்டா.'

அப்பாவே ஸ்கூல் ஃபீஸைக் கட்டி விடுவதால் கிச்சாவை நான் சோதிக்க வாய்ப்பு இல்லாமல் போனது.

அலமுவைச் சுற்றி இயங்கிக்கொண்டிருந்த நாங்கள் இது வெகுகாலம் நீடிக்காது என்பதை மறந்தோம்.

கிரேக்கியம் முடிந்து அலமு புதுப் பாவாடை தாவணியில் ஜொலித்தபோது கோயிலுக்குள் எல்லோரும் போனோம். தீட்சிதருக்குச் சந்தோஷத்தில் அழுகையே வந்துவிட்டது. இனி அவருக்கு ஹெல்ப்பர் வந்துவிடும்.

பிராகாரத்தில் புறாக்களின் ஹுக்கும்... ஹுக்கும். வவ்வால் வாசனை (!) மடப்பள்ளி நெடி. அலமு ஊஞ்சல் மண்டபத்தில் உட்கார்ந்தாள். பவழமல்லிச் செடி அருகே பட்டா. கோவாலு சமீபத்திய கோபத்தில் சற்றுத் தள்ளி நின்று வெளியிலிருந்து ஆதரவு கொடுத்துக் கொண்டிருந்தான். கிச்சா கீழ்ப் படியில் அலமுவின் முகம் பார்த்து அமர்ந்து அடுத்த உத்திரவு என்ன என்கிற பாவனையில் இருந்தான்.

னித்த அலமு, லேசாய்ச் சிரித்துக்கொண்டே...!

"நாளைக்கு ஊருக்குப் போகணுமாம்" அலமு சொல்லும்போதே பட்டா அழுதுவிட்டான்.

கிச்சா படிப்பைப் பாதியில் நிறுத்திவிட்டு (மூன்றாம் வகுப்பில் இரண்டாம் வருடம்) அலமுவைக் காப்பாற்ற என்னென்ன யுக்திகளைக் கையாளலாம் என்று மூக்கை விடைத்துக்கொண்டு யோசிக்க ஆரம்பித்தான்.

"உங்க சித்தப்பா வீட்டுக்குத்தானே போகப் போறே" என்றேன் அப்பாவியாய்.

கிச்சா படக்கென்று எழுந்து வந்தான்.

"அந்த வீட்டுக்கு எப்படிப் போக முடியும்"

"ஏன்... பஸ்ஸுலதான்"

"உளராதே... சொந்த அம்மாவை (அலமுவின் செத்துப்போன பாட்டி) வச்சுக் காத மனுஷன் அலமுவை வெச்சுக் காப்பாத்துவார்னு என்ன நிச்சயம்?"

பட்டா இதை உடனே ஆமோதித்தான். கோவாலுகூட இணக்கமாய் முகம் வைத்துக் கொண்டான்.

"நாம என்ன பண்ண முடியும்" என்றேன் குழப்பமாய்.

"எங்கம்மாகிட்ட பேசி இங்கேயே அவளை இருக்கச் சொல்லிட்டா"

"நீதான் இப்ப உளர்றே... சான்ஸே இல்ல"

கிச்சா உணர்வின் உச்சத்தில் இருந்தான்.


"அப்ப நானும் அவகூட போறேன்"

'சித்தப்பா அலமுவையே வெச்சுக்க மாட்டார். உன்னை எப்படி வெச்சுப்பார்?'

கிச்சா என் பார்வையை அந்த மங்கிய ஒளியிலும் படித்துவிட்டான்.

அலமு எங்கள் சண்டையைப் பற்றி கவனம் இல்லாமல் கையில் இருந்த காகிதத்தை மடித்து ஏதோ செய்து கொண்டிருந்தாள்.

அலமுவுக்குக் கை வேலைகளில் ஆர்வம்.



இந்த பத்து நாட்களில் கவனித்திருக்கிறேன். கையில் எது கிடைத்தாலும் அதை ஏதோ ஓர் அழகுப் பொருளாக உருமாற்றி விடுவாள். 'தூக்கிப் போடாதே கொண்டா' என்பதுதான் அவள் தாரக மந்திரம்.

தென்னை ஓலையில் அவள் செய்த கிளியை நான் வீட்டுக்குக் கொண்டு போன போது, அம்மா உள்ளே அனுமதிக்கவில்லை.

''ச்சீ... கருமாந்திரம்... இதை ஏன் உள்ளே கொண்டு வர்றே''

''அம்மா.. கிளிம்மா.''

''இது அதுக்காகக் கொண்டு வந்த ஓலைடா.''

பார்வைகள் எப்படி மாறுகின்றன!

''என்னடா பண்றீங்க.. வாங்கடா...'' அதட்டல் கேட்டது.

அலமு எழுந்தாள். கடைசி நிமிடங்கள் இந்த ஊரில். இனி திரும்ப வருவாளோ... மாட்டாளோ. மூலஸ்தான கலசத்தைப் பார்த்தாள். மதிலை... ஊஞ்சல் மண்டபத்தை... வாகனங்களை... கடைசியாய் எங்களை.

என் கையில் உருமாற்றியிருந்த காகிதத்தைத் திணித்தாள். கத்திக்கப்பல்! அவளிடம் பழக ஆரம்பித்தபோது கேட்டது. பேச்சு வாக்கில் சொன்னாள். கத்திக்கப்பல் என்று. கப்பல் தெரியும். அது என்ன கத்திக் கப்பல்? அடிப்பாகத்தில் ஒரு நீட்டல். கிழித்துக்கொண்டு போகுமாம். சண்டைக் கப்பல்.

''என் ப்ரஸண்ட்,'' என்றாள் இலேசாய்ச் சிரித்துக்கொண்டு.

கோவாலு அருகில் வந்து எட்டிப் பார்த்தான். பிறகு என்னிடம் கை நீட்டினான். வாங்கிப் பார்த்துவிட்டு திருப்பிக் கொடுத்து விட்டான்.

''அலமு...''

அலமு மட்டுமல்ல நாங்களுமே திடுக்கிட்டுத் திரும்பினோம். கோவாலு!


''அலமு... நீ சாதாரணப் பொண்ணு இல்ல... உங்கிட்ட ஏதோ ஒண்ணு இருக்கு! ஒரு திறமை. உங்க சித்தப்பா வீட்டுல நீ ஒரு சுமை இல்ல. சொத்துன்னு புரிய வைக்கிற மாதிரி நடந்துக்க. அப்புறம் அவங்க உன்னைக் கொண்டாடுவாங்க. நீ ரொம்ப நல்லா வருவ.''

ஆவேசம் வந்த மாதிரி பேசினான். கோவில் பின்னணியில் கோவாலுவின் குரல்!

அலமு கோவாலுவைக் கட்டிக்கொண்ட போது, அந்தப் பரிசு அவனுக்குத் தகும் என்று நாங்கள் அமைதி காத்தோம். கிராமத்திலிருந்து ஒன்றரைக் கிலோ மீட்டர் நடந்துபோய் பஸ் ஏற்றிவிட்டுத் திரும்பினோம்.

கிட்டத்தட்ட இருபது வருடங்களுக்குப் பிறகு அலமுவைப் பார்த்தபோது, டவுனில் அழகுவினைப் பொருட்கள் மற்றும் ட்ரெஸ் மெடீரியல்ஸ் ஓனராக (அலமுஸ்) சந்தித்த போது, கோவாலு (சரியாகப் படிக்காமல் உதவி தீட்சிதராகக் கோவில் பணி)வின் கணிப்பு வீண் போகவில்லை என்பது புரிந்தது.

சாந்தனு பாக்யராஜ் கதாநாயகனாக நடிக்கும் படம் 'கண்டேன்'. நாயகியாக ஆந்திராவை சேர்ந்த ரஷ்மி கவுதம் என்ற புதுமுகம் அறிமுகமாகிறார். இவர் தெலுங்கு தொலைக்காட்சி தொகுப்பாளினியாக இருந்தவர். இவர்கள் தவிர சந்தானம், ஆஷிஷ் வித்யார்த்தி, முத்துக்காளை உள்ளிட்டோரும் நடிக்கிறார்கள். காதல்தான் கதை என்றாலும் இது வழக்கமான கோடம்பாக்க காதல் அல்ல என்கிறார் இயக்குனர் ஏ.சி.முகில்.



ஞானியர் பூமி!

ஊருக்குள் நுழையும்போதே, இரண்டு புறமும் அமைதி தவழும் மரங்கள். தளதள பயிர்களின் பச்சைக் கம்பள வரவேற்பு. முதுகை உரசிக்கொண்டு போகும் மெல்லிய காற்று. பரபரப்புக்கு இடமே இல்லை. எப்போதாவது ஒன்றிரண்டு பேருந்துகள் சாலையைத் தேய்த்துக்கொண்டு போகின்றன.

இன்னும் தம் வளமை தொலைக்காத கிராமம் கோவிந்தபுரம்.

கோவிந்தபுரத்துக்கு இன்னொரு பெரிய பலமும் உண்டு. அதுதான் பக்தி. அனைவரையும் இங்கே ஈர்ப்பது இங்கே சூழ்ந்துள்ள ஞானியரின் மோன நிலை. இங்கேதான், காஞ்சி சங்கரமடத்தின் 59வது பீடாதிபதியாக இருந்த ஸ்ரீ போதேந்திராள் சரஸ்வதி சுவாமிகளின் (1684 - 1712) அதிஷ்டானம் இருக்கிறது.

கடவுளின் நாம ஜெபமே போதும். அதுவே மனிதனைக் கரைத்தேற்ற எளிய வழி என்று தம் வாழ்நாள் முழுவதும் நாம ஜெபத்தையும் நாம சங்கீர்த்தனத்தையும் பரப்பிய ஸ்ரீ போதேந்திராள், கோவிந்தபுரத்தில் வீர சோழ ஆற்றின் கரையின் ஜீவ சமாதி அடைந்தார்கள். பின்னர் தஞ்சை மன்னர் பிரதாப் சிங் என்பவரால், இங்கே அவருக்கு அதிஷ்டானம் எழுப்பப்பட்டது.


போதேந்திராள் ஸ்வாமிகளோடு நாம ஜபத்தை தம் வாழ்நாளெல்லாம் உபதேசித்த ஸ்ரீதர ஐயாவாள் வசித்தது கும்பகோணத்தில் இருக்கும் திருவிசலூரில். இருவரும் போற்றி உயர்த்திய நாம ஜபம்தான் பின்னாளில் தென்னாட்டு பஜனை சம்பிரதாயம் உருவாக அடிப்படையாக இருந்தது.



* ஸ்ரீதர ஐயாவாள்



* போதேந்திராள் ஸ்வாமிகள்



போதேந்திராளின் காலத்திலேயே வாழ்ந்தவரான சதாசிவ ப்ரும்மேந்திரரும் அவரோடு இணைந்து உரையாடி இருக்கிறார்கள்.

இப்பேற்பட்ட ஞானியர் உலவிய புண்ணிய கோவிந்தபுரத்தில் இன்று பல ஆன்மிக மையங்கள் உருவாகியிருக்கின்றன. விட்டல்தாஸ் ஜெயகிருஷ்ண தீட்சிதரின் ஸ்ரீ விட்டல்ருக்மிணி சன்ஸ்தான் ஒருபக்கம், ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின் சைதன்ய குடீரம் இன்னொருபக்கம்.

இன்றும் அமைதியான நடு இரவுகளில் போதேந்திராளின் அதிஷ்டானத்தருகே, பகவன் நாம ஜெபம் கேட்பதாக நம்பப்படுகிறது.

– துளசி



- குமுறும் மீனவர்கள்



* அருளானந்தம்

''இலங்கைக் கடல் பகுதிக்குள் நுழையும் தமிழக மீனவர்களைக் காப்பாற்ற முடியாது'' என்று பாராளுமன்றத்தில் சமீபத்தில் பேசியிருப்பது கல்லைக் கட்டி எங்களைக் கடலில் தள்ளி விடுவது போலிருக்கிறது'' என்று குமுறுகிறார், நிரபராதி மீனவர்களின் விடுதலைக்கான கூட்டமைப்பின் தலைவர் ராமேஸ்வரம் அருளானந்தம்.

''ராமேஸ்வரத்தை ஒட்டிய மன்னார் வளைகுடா மற்றும் ஆதம்பாலம் கடற் பகுதிகள், இந்தியாவுக்கும், இலங்கைக் கும் இடையே அமைந்துள்ள மிகக் குறுக லான கடற்பகுதியாகும். ராமநாதபுரம் பகுதியில் ஒன்றரை லட்சம் மீனவர்கள் இருக்கிறார்கள். இந்தப் பகுதியில் ஆறா யிரம் விசைப் படகுகளும், ஒரு லட்சம் நாட்டுப் படகுகளும் இருக்கின்றன.

இந்தக் குறுகிய கடல் பகுதியில்தான் இருநாட்டு மீனவர்களும் மீன் பிடிக்க வேண்டும். தனுஷ்கோடியில் இருந்து இந்தியக் கடல் எல்லை 11 மைல் உள்ளது. ஆனால் மீன் வளம் உள்ள பகுதிக்கு இன்னமும் சில மைல்களாவது போக வேண் டும். கடலில் சர்வதேச எல்லை என்று சுவர் கட்டி வைத்திருக்கவில்லை. வேறு அடையாளமும் கிடையாது. எனவே இலங்கை மீனவர்கள் இந்தியக் கடல் பகுதிக்கும், இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பகுதிக்கும் தவறுதலாகச் சென்று விடுவதுண்டு.

ஆனால் இந்தியப் பகுதிக் குள் வரும் மீனவர்களை இந் திய ராணுவமும், கடலோரக் கடற்படையும் மரியாதையுடன் நடத்தி கரைக்குக் கொண்டு வந்து சிறையில் வைக்கிறார்கள். அதன்பிறகு சட்ட வழி கள் தொடருகின்றன. ஆனால், கடலில் தெரியாமல் எல்லை தாண்டும் தமிழக மீனவர்களை இலங்கை ராணுவம் சுட்டுக் கொல்கிறது; நிர்வாணப்படுத்தி அவ மானப் படுத்துகிறது.

புலிகள் இருக்கும்வரை அவர்களுக்கு நாங்கள் ஆயுதங்களும் மருந்துகளும் கடத்த உதவி செய்வதாகச் சொல்லி எங்களைத் தாக்கினார்கள். இப்போது அவர்கள் இல்லை. அப்புறம் ஏன் தாக் குதல் தொடர்கிறது? இன்னொன்று சொல்கிறேன். புலிகள் இருக்கும்போதே எங்கள் படகுகளை மடக்கும்போது அதிலிருந்து ஆயுதங்களும் மருந்துகளும் எப்போதும் கைப்பற்றப்பட்டதில்லை.

சென்ற வருடம் மே மாதம், புலிக ளோடு நடந்த இறுதிப் போருக்குப் பிறகு தாக் குதலில் நமது மீனவர்கள் இரண்டு பேர் இறந்திருக்கிறார்கள்; ஐந்து பேர்



ாயம் அடைந்திருக்கிறார்கள். இதற்கென்ன காரணம்? மொத்தத்தில் எங்களுக்கு நாதியில்லை. நாங்கள் கேட்பதெல்லாம் தெரியாமல் எல்லை தாண்டும் நமது மீனவர்களை சிங்கள ராணுவம் மரியாதையாக நடத்தி சட்டரீதியாகச் செயல்பட வழிசெய்யுங்கள் என்பதுதான்.''

கச்சத்தீவு பகுதியில் உங்களால் மீன் பிடிக்க முடிகிறதா?

''கச்சத் தீவை இலங்கைக்குக் கொடுத்ததே தவறு. அதன்பின் அங்கே நடக்கும் மாதா கோயில் விழாவுக்குத் தடையின்றிச் செல்லலாம் என்றார்கள். 1985க்குப் பிறகு கடந்த ஆண்டுதான் அங்கே திருவிழாவே நடந்தது. மேலும் கச்சத் தீவில் வலைகளைக் காய வைத்துக்கொள்ளலாம் என்று சலுகை கொடுத்திருக்கிறார்கள். ஒரு விஷயம் தெரியுமா? கடந்த இருபத்தைந்து வருடங்களாகவே மீனவர்கள் நூல் வலை உபயோகிப்பதில்லை. நைலான் வலைதான். எனவே, காயவைக்க கச்சத்தீவு போக வேண்டியதில்லை. ஆனால், கச்சத் தீவைச் சுற்றியுள்ள இரண்டு மைல் சுற்றளவுப் பகுதி இலங்கையின் கட்டுப்பாட்டில் உள்ளது. அந்தப் பகுதியை இரு நாட்டு மீனவர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். மீன்வளம் உள்ள பகுதி அது. ஆனால் அங்கே மீன் பிடிக்கும் நமது மீனவர்கள் சிங்கள ராணுவத்தால் மிருகத்தனமாகத் தாக்கப்படுகிறார்கள். இதை இந்திய அரசு தடுக்க வேண்டும்.''

இலங்கை மீனவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினீர்களே... என்ன ஆச்சு?

''அந்தப் பேச்சுவார்த்தையில் எங்களுடன் இலங்கை மற்றும் தமிழக அதிகாரிகளும் கலந்து கொண்டார்கள். அப்போது 'ராமேஸ்வரம் மீனவர்கள் மீன் வளமிக்க இலங்கைக் கடற்பகுதியில் வாரத்துக்கு இரண்டு நாட்கள் முறையே பன்னிரெண்டு மணி நேரம் மீன் பிடிக்க அனுமதிக்கப்படுவார்கள்' என்று உடன்பாடு ஏற்பட்டது.

இந்த உடன்பாட்டின்படி நாங்கள் மீன்பிடிக்க சிங்கள ராணுவம் ஒத்துழைக்க வேண்டும். இந்தியக் கடற்படை பாதுகாப்புத் தரவேண்டும். எனவே, இந்த உடன்பாடு எப்படிச் செயல்படுகிறது என்பதைப் பொறுத்துதான் பார்க்க வேண்டும்.''

- ப்ரியன்



அரசாங்கம்தான் பொறுப்பு!









கோவிந்தபுரம்

● 400 பசுக்களும் கன்றுகளும் இருக்கும் ஸ்ரீ கோகுலம் கோசாலையில் சாணத்துக்கா பஞ்சம். அதையும் மிகவும் கவனமாகப் பயன்படுத்துகிறார்கள் இங்கே. சாணத்தில் இருந்து எரிவாயு உற்பத்தி செய்யும் பெரிய ப்ளாண்ட்டைத் தனியே நிறுவியுள்ளார்கள். அதில் இருந்து உற்பத்தியாகும் எரிவாயு பாண்டுரங்க பஜனாஸ்ரமம் முழுவதும் சமையலுக்குப் பயன்படுகிறது. அத்தோடு, அந்த எரிவாயுவில் இருந்தே, மின்சாரமும் உற்பத்தி செய்யப்படுகிறது. ஒரு நாளைக்குப் பனிரெண்டு கிலோவாட் மின்சாரம் இதில் இருந்து கிடைக்கிறது. ஸ்ரீ பாண்டுரங்க பஜனாஸ்ரமத்தின் பத்து மணி நேர மின் தேவையைப் பூர்த்தி செய்கிறது சாண எரிவாயு மின்சாரம்!

● பாண்டுரங்க பஜனாஸ்ரமத்தில், ஒரிசா மாநிலம் பூரியைச் சேர்ந்தவர்களே பல்வேறு பணிகளைச் செய்கிறார்கள். பசுக்களைப் பேணிப் பாதுகாப்பது முதல், சமையல் வேலை வரை அத்தனை வேலைகளையும் திருத்தமாகச் செய்யும் இவர்களுக்கு ஒன்றிரண்டு தமிழ்ச் சொற்களே தெரிந்திருக்கின்றன. எல்லோரும் பூரி ஜகன்னாதர் ஆலயத்திலும் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்தும் வந்தவர்கள். பாண்டுரங்க பக்தர்கள். பக்தி மனத்தில் சுரக்கும்போது, மொழி ஒரு தடையா? மாநிலம்தான் தடையா?



விட்டல் சுவாமி

● பண்டரிநாதனுக்காகக் கட்டப்பட்டு வரும் கோவிலுக்குப் பின்புறம், ஓர் அரச மரம் இருக்கிறது. எத்தனை பேர் அதைக் கவனித்தார்களோ தெரியவில்லை. ஒரு கோணத்தில் பார்க்கும்போது, அது தும்பிக்கை முகத்தான், விக்ந விநாயகனின் முகச்சாயலை அப்படியே கொண்டு இருக்கிறது. நல்ல பணிகள் எங்கு நடந்தாலும் பிள்ளையார் சுழி இல்லாமல் தொடங்கப்படுவதில்லை. விநாயகரின் முகத்தைக் கண்ட விட்டல்தாஸ் சுவாமிகள், அந்த அரச மரத்தினடியிலேயே இன்னொரு விநாயகர் சன்னிதியையும்



விக்ந விநாயகர்





ஹைலைட்ஸ்!



● மன்னார்குடி ராஜகோபாலன்

உருவாக்கிவிட்டார்!

● பாண்டுரங்க பஜனாஸ்ரமத்தில் எல்லோருக்கும் ஒரே சாப்பாடுதான்! அங்கே கட்டட வேலை செய்யும் தொழிலாளர் முதல் பசுக்களைப் பாதுகாக்கும் பணியாளர்கள் வரை, வெளியூரில் இருந்து வரும் பக்தர்கள் முதல், ஆஸ்ரமத்தில் இருக்கும் செயலாளர்கள் வரை அனைவரும், மொத்தமாக இருக்கும் சில்வர் தட்டுகளை எடுத்துக்கொண்டு போய் கழுவி எடுத்து வந்து போட்டுக்கொண்டு அமர வேண்டியதுதான். நாக்கில் நீர் சுரக்கும் அருமையான சமையல். சாப்பிட்ட பின், தாம் உட்கார்ந்த இடத்தைத் தாமே சுத்தம் செய்யவேண்டியதுதான். பாண்டுரங்கன் முன்னே பிரிவினைகளுக்கு இடமேது?

● பதினெட்டு அடி உயர கலசம், பஜனாஸ்ரமத்தின் உள்ளே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அந்தக் கலசத்துக்கு, ஒவ்வொரு நாளும் காலை முதல் மாலை வரை விட்டலன் நாமத்தை உருவேற்றிக்கொண்டு இருக்கிறார்கள். வெளியூர்களில் இருந்து வரும் பக்தர்களும் அங்கே உட்கார்ந்து கொண்டு, மனமுருக விட்டலனின் நாமத்தை ஜெபம் செய்யலாம். பக்தர்கள் இல்லாத சமயத்தில், ஆசிரமவாசிகளே, நாம ஜெபத்தில் ஈடுபடுகிறார்கள். கோவில் கட்டுவதை ஒரு சமூக இயக்கமாக மாற்றியிருக்கிறது இந்த நாம ஜெபம்!

- திருநா, ஞானம்

கலைஞர் குடும்பத்தின் சினிமா துறை ஆதிக்கம் பற்றி தினமணியில் மதியின் கேலிச்சித்திரம், கலைஞர் கருணாநிதிக்கு எரிச்சலாகிவிட்டது. பிருத்விராஜ் கபூரின் குடும்பத்தில் மகன்கள், பேரன்கள், கொள்ளுப் பேரன்கள் நடிக்கவில்லையா? சிவாஜி கணேசனின் மகனும் பேரனும் நடிக்கவில்லையா? ரஜினியின் மருமகனும் மகள்களும் சினிமாவில் ஈடுபட வில்லையா ? கலைஞர் வீட்டில் மாத்திரம் உதயநிதி, கலாநிதி, தயாநிதி, அருள்நிதி, அறிவுநிதி என்று வந்தால் அது ஆகாது. குறுக்கே நூல் போட்டவர்களுக்கு அது பிடிக்காது என்று பொரிந்திருக்கிறார்.

நண்பர் மதி, கலைஞர் சொல்லும் குறுக்கே போடும் நூலான பூணூலைப் போட்டிருப்பவர் அல்ல. விமர்சனங்களுக்கு நேரடியாக பதில் சொல்ல முடியாத போதெல்லாம் பூணூலில் சரணடைவது கருணாநிதியின் வழக்கம். கலைஞர் குடும்பத்தில் இனியும் பிறக்கக்கூடிய அன்புநிதி, பண்புநிதி, குணாநிதி, தமிழ்நிதி, தேன்மொழி, கவிமொழி, லெனின், ஜீவா என்று யாரானாலும் சினிமாவில் ஈடுபடட்டும். நமக்கு எந்த ஆட்சேபணையுமில்லை. இந்த நிதிகளுக்கெல்லாம் எங்கிருந்து நிதி வருகிறது என்பதுதான் தமிழ் மக்களின் கவலை.

கல்லூரிப் படிப்பை முடித்ததுமே பல கோடி ரூபாய் பட்ஜெட்டில் படம் தயாரிக்கும் வல்லமை கலைஞர் குடும்பத்தில்தான் இருக்கிறதே தவிர, பிருத்விராஜ் கபூர் குடும்பத்துக்கு இருந்ததாகத் தெரியவில்லை. போட்டி கம்பெனிகளின் கேபிள்களை வெட்டிப் போட்டு அராஜகம் செய்ததற்காக, குண்டர் சட்டத்தின் கீழ் கைது

ஓ பக்கங்கள்

செய்யப்படவேண்டுமென்
கபூர் குடும்ப வாரிசுக
யாருக்கும் எதிராக எந்த அ
அதிகாரியும் பரிந்துரை எ
தும் அவலம் நிகழவில்லை

ஒரு படத்தின் ரிலீ
தேதி, எந்தெந்த தியேட்டரி
எத்தனை நாள் என்பன
யெல்லாம் கட்டுப்படுத்
முழு திரையுலகத்தையு
ஆட்டிப்படைக்கு
அதிகாரத்தில் எந்தக் கபூரு
இருந்ததில்லை. திரையுல
சங்கத் தேர்தல்களி
ஜெயித்த அணியை மிரட்டி
தோற்றதாகக் கையெழுத்
போடச் சொல்லி தன் ஜா
ராக்களைப் பதவியில் உ
காரவைக்கும் வேலையை
ஒரு கபூரும் செய்ததில்லை

கலைஞர் கருணாநி
இப்போதெல்லாம் வசன
எழுதும் ஒரு படம் கூட



பிருத்விராஜ் கபூரு



ஞாநி

மக்கள் ஆதரவைப் பெற்று அமோகமாக ஓடுவதில்லை. ஆனால் இந்திய சினிமா வரலாற்றிலேயே ஒரு படத்துக்கு வசனத்துக்காக 50 லட்ச ரூபாய் சம்பளம் அவருக்கு மட்டும் தரப்படும் மர்மம், எந்தக் கூருக்கும் புரியவே புரியாது. ராஜ்கபூரின் வசனகர்த்தா கே.ஏ.அப்பாஸ் முதல் இன்று வசூலைக் குவிக்கும் படங்களின் வசனகர்த்தா பாஸ்கர் சக்தி வரை யாருக்கும் இப்படிச் சம்பளம் கிடைத்ததில்லை.

பரம்பரை மிராசுதாரரான ஜி.கே வாசனின் அறிவிக்கப்பட்ட சொத்து மதிப்பு மூன்று கோடி 78 லட்சம். எந்த சினிமாவுக்கும் கதை வசனம் எழுதி ஒரு நாளும் சம்பாதிக்காத கனிமொழியின் சொத்து எட்டுக் கோடி 56 லட்சம்; அழகிரியின் சொத்து மதிப்பு 19 கோடி என்று தேர்தல் ஆணையத்திடம் அறிவித்திருப்பதன் மர்மங்கள் கூூர்களுக்குத் தெரியாது. கூூர்கள் முழு நேரம் நாடகமேடையில் நடிகர்களாக உழைத்து சினிமாவுக்கு வந்து சொந்தக் காசில் ஜெயித்தவர்கள். அரசியலுக்காக சினிமாவையும், சினிமாவை ஆதிக்கம் செய்ய அரசியல் அதிகாரத்தையும் கலைஞரும் அவர் வாரிசுகளும் பயன்படுத்துவதால்தான் விமர்சனங்கள் எழுகின்றன. இனியும் எழும்.

இனி இந்தக் குறுக்கே நூல் போடும் விவகாரத்துக்கு வரலாம். கலைஞர் கருணாநிதியின் கணக்குப்படி தமிழகத்தில் பூணூல் போடும் பார்ப்பன சாதியினரின் எண்ணிக்கை மூன்று சதவிகிதம்தான். ஆனால் மொத்த வாக்காளர்களில் கலைஞர் கருணாநிதியை ஆதரித்து வோட்டுப் போடுபவர்கள் எப்போதும் சுமார் 25 சதவிகிதம்தான். மொத்தப் பூணூலார் மூன்று சதவிகிதம் பேரும் எதிர்த்ததாக வைத்தாலும், கருணாநிதியை விரும்பாத இதரர் 72 சதவிகிதம். மக்கள் இன்னமும் ஜாதிகளுக்கு அப்பாற்பட்டுதான் வோட்டுப் போடுகிறார்கள். ஜாதி அடிப்படையில் மட்டுமே வோட்டுப் போட்டார்கள் என்றால் கருணாநிதியின் ஜாதியும் பூணூலார் ஜாதியும் ஏறத்தாழ ஒரே சதவிகிதம்தான். அவருக்கு 25 சதவிகித ஓட்டு கூட வந்திருக்க முடியாது.

குறுக்கே நூல் போட்டவர்களை நம்பித்தான் கருணாநிதியின் மீடியா வியாபாரங்களே நடந்து வந்திருக்கின்றன. குங்குமம் பத்திரிகையைத் தொடங்கியபோது அவர் ஆசிரியராக அழைத்து

ருணாநிதியும் ஒன்றா?



வந்தது. பூணூல் போட்ட சாவியைத்தான். நிர்வாகத்தை கவனிக்க நியமித்தது. பூணூல் போட்ட டி.கே.தியாகராஜனைத்தான். பத்திரிகையின் முதல் இதழின் அட்டைப் படத்தில் கண்ணாடியில் முகம் பார்த்து பொட்டு இட்டுக் கொள்ளும் பெண்ணுக்குப் பக்கத்தில் சுவரில் தொங்கவிடப்பட்டது காஞ்சி சங்கராச்சாரியார் சந்திர சேகரேந்திரர் படத்தைத்தான். மறைந்த முரசொலி மாறனின் நெருங்கிய நண்பரும் இன்றைவும் தி.மு.க அரசின் ஆதரவுடன் கிரிக்கெட் வாரியப் பதவியில் இருப்பவருமான இந்தியா சிமெண்ட்ஸ் சீனிவாசன், கலைஞரின் ஒரு பேரனுக்குப் பெண் கொடுத்த வீட்டார், வக்கீல்கள், ஆடிட்டர்கள் பலரும் குறுக்கே நூல் போட்ட பார்ட்டிகள்தான். பேரன்கள் கம்பெனியின் பெயரான சுமங்கலி என்ற வார்த்தைப் பிரயோகமே 'அவாளு'க்குரியதுதான்.


மீராகுமார்

மீண்டும் சொல்கிறேன். கலைஞர் நேரடியாக விமர்சனங்களுக்குப் பதில் சொல்ல வேண்டும். முடியாவிட்டால், ஜாதியம் பேசுவது முனைமழுங்கித் துருப்பிடித்த ஆயுதம். அது உதவாது. இன்றைய புதிய வர்ணாஸ்ரமத்தில் ஆதிக்க ஜாதி, கண்ணுக்குத் தெரியாத அதிகாரப் பூணூலை அணிந்திருக்கும் புதிய பார்ப்பனரான கருணாநிதி வகையறாக்களே.

★ ★ ★

எதிர்ப்பு அஞ்சல் அனுப்புங்கள் !

தங்கள் சம்பளத்தைத் தாங்களே உயர்த்திக் கொள்ளும் உரிமை இந்தியாவில் தனியார் முதலாளிகளுக்கு அடுத்தபடியாக எம்.பி.களுக்கு மட்டுமே இருக்கிறது. மாதம் 16 ஆயிரம் ரூபாய் சம்பளத்தை துறைச் செயலாளர் சம்பளத்துக்கு நிகராக 80 ஆயிரம் ஆக்கும்படி பாராளுமன்றக் குழு பரிந்துரைத்தது. மேலே ஒரு ரூபாய் சேர்க்க வேண்டுமென்கிறார் தீவன ஊழல் புகழ் லாலு பிரசாத் யாதவ். துறைச் செயலாளர்கள் சுமார் 25 வருட காலம் அரசுப் பணி செய்து விட்டு அந்தச் சம்பளத்தை வந்தடைபவர்கள். எம்.பி.யைப் போல திடீர் லாட்டரியு பரிசாக வந்தவர்கள் அல்ல. பதவியில் இருந்து கொண்டே வேறு தொழிலோ வணிகமே செய்யும் உரிமையும் எம்.பி.களைப் போல அவர்களுக்குக் கிடையாது.

மேலை நாடுகளில் மக்கள் பிரதிநிதிகளுக்குத் தரும் சம்பளத்தை விட இந்தியாவில் குறைவு என்பது எம்.பி.களின் இன்னொரு வாதம். இந்தியாவில் தனியார் அலுவலகத்தில் பணியாற்றும் ஒரு கடைநிலை ஊழியரின் சம்பளம் கூட மேலை நாட்டுக் கடைநிலை ஊழியருடையதை விடக் குறைவுதான். தினக்கூலியும் இங்கே குறைவுதான். இதையெல்லாம் சமமாக்குவதற்கு உழைத்த பின்னர் எம்.பி.கள் தங்களுக்கு உயர்வு கேட்டால் நியாயம்.


லாலு பிரசாத் யாதவ்

ஏற்கெனவே எம்.பி.களின் தொகுதி மேம்பாட்டு நிதியில் பெரும் ஊழல் நடப்பதாகத் தணிக்கை அறிக்கைகள் சொல்கின்றன. தற்போது ஒரு எம்.பி.க்கு சம்பளம் 16 ஆயிரம் தவிர வீடு, டெலிஃபோன், விமானம், ரயில் டிக்கட், மின்சாரம், தண்ணீர், உதவியாளர் செலவு என்று வருடத்துக்கு சுமார் ஒன்பது கோடி ரூபாய்கள் செலவிடப்படுகின்றன. சம்பளத்தையும் அலவன்சையும் நான்கு மடங்கு கூட்டினால், இது பத்துக் கோடியைத் தாண்டி விடும்.

அவர்களே அறிவித்திருக்கும் சொத்துக் கணக்குகளின்படி இப்போதுள்ள 544 எம்.பி.களில் 315 பேர் கோடீஸ்வரர்கள்.

இந்த வாரப் பூச்செண்டு!



கலாசார ஒழுக்கக் காவல் வேலை பார்ப்பது போலீஸ் வேலை அல்ல என்று கூறியதற்காக சென்னை காவல் ஆணையர் ராஜேந்திரனுக்கு இ.வா.பூ.

புதிதாக ராஜ்ய சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட 54 எம்.பி.களில் 43 பேரின் சராசரி சொத்து மதிப்பு தலா 25 கோடி ரூபாய்! சாதாரண இந்தியர்களின் நிலை என்ன? ஆசிய வளர்ச்சி வங்கியின் இந்த வார அறிக்கைப்படி இந்தியாவின் நடுத்தர வகுப்பினரில் 82 சதவிகிதம் பேர், அதாவது 22 கோடி பேரின் சராசரி மாத வருமானம் தனி நபருக்கு அதிகபட்சம் 2000 ரூபாய்தான். இவர்களையே நடுத்தர வகுப்பு என்று சொன்னால் ஏழைகளின் நிலை எப்படி என்று கற்பனை செய்யவே பயமாயிருக்கிறது. மாதம் 10 ஆயிரம் ரூபாய்க்கு அதிகமாக சம்பாதிப்போர் மொத்த மக்கள் தொகையில் 0.0009 சதவிகிதம்தான். அதாவது வெறும் 10 லட்சம் பேர்!

எனவே எம்.பி.கள் சம்பளத்தை மேற்கொண்டு ஒரு ரூபாய்கூட உயர்த்த எந்த நியாயமும் இல்லை. சம்பள உயர்வுக்காக அனைத்துக் கட்சி எம்.பி.களும் சேர்ந்து கொண்டு சபைகளை நடக்கவிடாமல் செய்த போது, நம் மக்களுக்கு ரத்தம் கொதித்திருக்க வேண்டும். ஒவ்வொரு ஊரிலும் சாலை மறியல் நடந்திருக்க வேண்டும். நாம் சுரணையற்றவர்களாகிக் கொண்டே போவதுதான் ஊழல் அரசியல்வாதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் வசதியாக இருக்கிறது.

நமக்குச் சுரணை இருக்கிறது என்று நிரூபிக்க இதோ ஒரு வாய்ப்பு. மிக மலிவான விலையில் 50 பைசாவுக்குக் கிடைக்கும் ஆயுதம் அஞ்சலட்டை. எம்.பி.களின் சம்பள உயர்வை எதிர்க்கிறோம்; உயர்வை ஆதரிக்கும் எம்.பி.களை அடுத்த தேர்தலில் நிச்சயம் ஆதரிக்க மாட்டோம் என்று பொருள்படும் கீழ்வரும் ஆங்கில வாசகங்களை அஞ்சலட்டையில் எழுதிக் கையெழுத்திட்டு மக்களவை சபாநாயகருக்கு அனுப்புவோம். கல்கி வாசகர்களில் ஒரு 10 ஆயிரம் பேர் ஆளுக்குப் பத்துப் பேர் வீதம் அஞ்சலட்டைகளை அனுப்ப (செலவு ஐந்து ரூபாய்தான்) ஏற்பாடு செய்தால் ஒரு லட்சம் கடிதங்கள், மீரா குமார் மேசையில் குவியும். மக்கள் தங்கள் அராஜகத்தை எதிர்க்கிறார்கள் என்பதை எம்.பி.களுக்குத் தெரியப்படுத்துவோம்.

இந்த வாரத் திட்டு!



தான் ஏன் ஐ.ஏ.எஸ் படிக்கவில்லை என்று கூறிய அமைச்சர் பொன்முடி 'ஒருவேளை நான் ஐ.ஏ.எஸ் படித்திருந்தால், கார் கதவைத்தான் திறந்து விட்டுக் கொண்டிருக்க வேண்டும்' என்று சொல்லியிருப்பதற்காக அவருக்கும், இதைக் கேட்டுக் கொண்டு மேடையில் மௌனமாக உட்கார்ந்து இருந்ததற்காக மூன்று ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கும் இ.வா தி.

தகவல் அறியும் மக்கள் உரிமைக்கான ஆணையத்தின் தலைவர் பதவிக்குத் தேர்வு செய்யும் மூவர் குழு (முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர், ஓர் அமைச்சர்) கூட்டத்தில் கலந்துகொள்ளாததற்காக எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதாவுக்கு இ.வா.தி.



We, the people of India, condemn MPs hiking their salaries by 400 percent. Any sitting MP supporting hike will not get our vote again. சபாநாயகர் முகவரி : The Speaker, Lok Sabha, 17, Parliament House, New Delhi 110001 மின்னஞ்சல்: speakerloksabha@sansad.nic.in, lokmail@sansad.nic.in

அப்புக்குட்டியின் கனவு...
அழகர்சாமி குதிரை...
அஸோஸியேட் டைரக்டர்...!



* 'வெண்ணிலா கபடி' படத்தில் அப்புக்குட்டி...

'நான் மகான் அல்ல' வெற்றியின் எந்தச் சுவடுகளும் தன்னைப் பாதிக்க விடாமல் 'அழகர்சாமியின் குதிரை' என்ற அடுத்த படத்தை இயக்கிக் கொண்டிருக்கிறார் சுசீந்தரன். பெயரே வித்தியாசமாக இருக்கிறதே என்று கேட்டால், ''படமும் வித்தியாசம்தான் கண்டிப்பாக ஹிட்டாகும்'' என்கிறார் உறுதியாக.

''அண்ணன், தம்பி, அப்பா, அம்மா என நமக்கு நெருக்கமான உறவுகளை நாம் வாழ்க்கையில் உயிருக்கு உயிராக நேசிக்கிறோம். ஆனால், கோவேறு கழுதை எனப்படும் இனத்தைச் சேர்ந்த குதிரையை நேசித்த மனிதன்தான் அழகர்சாமி. அழகர்சாமியின் வாழ்க்கையில் நடக்கும் சுவாரஸ்யமான விஷயங்களைத்தான் படத்தில் சொல்லப் போகிறேன். எழுத்தாளர் பாஸ்கர் சக்தியின் குறுநாவல்தான் 'அழகர்சாமியின் குதிரை.'



* தயாரிப்பாளர் கௌதம்

* இயக்குநர் சுசீந்திரன்...

குறுநாவல் முழுமையான படமாக முடியுமா?

''இந்தக் குறுநாவலின் பத்துப் பக்கத்தை அப்படியே படமாக்கினால் பத்து சீன்கூட வராது. இந்த நாவலின் கதையம்சத்தை எடுத்துக்கொண்டு சினிமாவுக்கான சில அம்சங்களையும் சேர்த்துள்ளேன். நான் இந்த நாவலைப் படிக்கும்போது, வயிறு குலுங்கச் சிரித்தேன். ஆடியன்ஸை வயிறு குலுங்கச் சிரிக்க வைக்க நான் இயாரண்டி. சென்டிமெண்ட், காதல், ஆக்ஷன்... இப்படிப் பல அம்சங்களைக் கொண்ட ஸ்கிரிப்ட் அமைவது மிக அபூர்வம்... எனக்கு இப்போது அமைந்திருக்கிறது.

பாஸ்கர் சக்தியின் ரியாக்ஷன் எப்படியிருக்கிறது?

''ஒரு குழந்தை பிறந்து, தவழ்ந்து, வளர்ந்து வரும்போது ஒரு தாய்க்கு ஏற்படும் உணர்வு எப்படி இருக்குமோ அது போன்ற உணர்வில் இருக்கிறார் பாஸ்கர் சக்தி. தான் எழுத்தில் வடித்த கதாபாத்திரங்கள் கேமிரா முன் நடிக்கும்போது, இதுதான்யா நான் எதிர்பார்த்தது; இப்படித்தான்யா நான் எதிர்பார்த்தது; இப்



படித்தான்யா இருக்கணும் என்று சொல்லி மகிழ்கிறார். தனது மண்ணின் கதை என்ற சென்டிமெண்ட்டும் இருக்கிறது. 'அழகர்சாமியின் குதிரை'யின் அஸோஷியேட் டைரக்டராகவும் வேலை பார்க்கிறார்.



இளைய தலைமுறை இயக்குநரான நீங்கள் இசைக்கு இளையராஜாவைத் தேர்ந்தெடுத்தது ஏன்?

''இளையராஜா எல்லாத் தலைமுறைகளுக்கும் பொருந்தி போகக்கூடியவர். அவர் இசையமைத்த பாடல்களையும், பின்னணி இசையமைத்த படங்களையும், ஒன்றாவது நன்றாக இல்லை என்று கைநீட்டிச் சொல்லிவிட முடியுமா? மண் சார்ந்த படம் என்றவுடன் எனக்கு இளையராஜா தவிர வேறு யாரும் நினைவுக்கு வரவில்லை. படத்தின் கதையைச் சொன்னவுடன் ரொம்பவே ரசிச்சார். இந்த மாதிரி ஸ்கிரிப்ட் வந்து ரொம்ப நாளாச்சுப்பா, நல்லா வரும் என்று வாழ்த்தினார்.

'அழகர்சாமியின் குதிரை'யில் அப்புக்குட்டி எப்படி வந்திருக்கிறார்?

''வெண்ணிலா கபடிக் குழுவில் சரண்யா மோகனைத் தூரத்திலிருந்து பார்த்தவர் அப்புக்குட்டி. தூரத்திலிருந்து பார்த்த ஹீரோயின் தனக்கு ஜோடியாக நடிப்பதை, கனவு நிறைவேறிய சந்தோஷத்தைப் போன்று உணர்கிறார். அப்புக்குட்டிக்குப் பெற்றோர்கள் இடையாது. தானாகச் சுயமாகப் போராடி முன்னேறும் இளைஞர். நிறையக் கனவுகளுடன் உழைப்பவர். 'அழகர்சாமியின் குதிரை' அவர் கனவை நிறைவேற்றிக் கொடுக்கும். 'வெண்ணிலா கபடிக் குழு'வுக்குப் பிறகு சரண்யா மோகனுக்கு நல்ல ஸ்கோப் தரக்கூடிய படம் இது. கதையையும், தன்னுடைய கேரக்டரையும் மட்டுமே நம்பி நடிக்கக் கூடிய நடிகை. நம்ம வீட்டில் ஒரு பெண் இருந்தால் எப்படி இருப்பாரோ, அதே போன்றுதான் ஸ்கிரீனிலும் வரப் போகிறார்.''

- ராகவ்குமார்

தீராத விளையாட்டு விட்டலன்
பாகம் 1 - இறுதி
அத்தியாயத்திலிருந்து ஒரு பகுதி:

ஜருகண்டி மறக்காமல் ஒன்றைச் சுட்டிக்காட்டினான். 'அப்பேர்பட்ட நாமதேவர் தலையைத் தடியால் தட்டியா அவரது பக்குவத்தை, குயவராக விளங்கிய கோராகும்பர் சோதித்ததாகச் சொன்னீர்கள்?'

'ஆமாம், நாமதேவர் மட்டுமல்ல ஞானேஸ்வர், முக்தாபாய் ஆகியோரையும் கோராகும்பர் சோதித்தார். அந்தச் சுவையான பகுதியை ஞானேஸ்வரர் சமாதியடைந்த இடமான ஆலந்தியில் சொல்கிறேன். அடுத்தது அங்குதானே போகப் போகிறோம்.'

'முக்தாபாய் என்று யாரையோ சொன்னீர்களே'

'பாண்டுரங்க மகாத்மியத்தில் முக்தாபாய்க்கும் இடம் உண்டு. அதுமட்டுமல்ல சமர்த்த துக்காராம், ஏகநாதர், கூர்ம தாசர், சௌதா மாலி இப்படிப் பலரும் வாழ்ந்த, மறைந்த பகுதிகளுக்கெல்லாம் போய் புண்ணியம் தேடிக்கொள்ளப் போகிறோம். தவிர பாண்டுரங்க பொக்கிஷத்



தீராத விளையாட்டு

தில் வேறு சில அமுதங்களையும் பருகப் போகிறோம்.'

கேட்கும்போதே சிலிர்ப்பாக இருந்தது. 'மீதமுள்ள பக்திப் பயணம் அர்த்தமுள்ளதாக அமையும்' என்றது மனது. 'அற்புதங்கள் அமைந்ததாகவும் அது இருக்கப் போகிறது' என்றது உள்ளுணர்வு.

1

விட்டலன்

பாகம்-2

அருண் சரண்யா

சித்தேஸ்வரர் ஆலயத்தின் கலசம் அன்று அதிமுக்கியம் பெற்றிருந்தது.

''கலசம் எப்போது அசையும்?'' எனக்கு ஆர்வம் அதிகமாகிக் கொண்டிருந்தது. ராமநாதன் பரவசமும் எதிர்பார்ப்புமாகக் கலசத்தையே கவனித்துக் கொண்டிருந்தார். ஜருகண்டி பொறுமையிழந்து கொண்டிருந்தான். அங்குக் கூடியிருந்த பல்லாயிரக்கணக்கானவர்களும் அந்தக் கலச அசைவுக்குதான் காத்திருக்கின்றனர். அந்த அசைவுதான் ஞானேஸ்வரரின் அனுமதி. கலசம் அசைந்த அடுத்த நொடியே 'வாரக்ரீ' யாத்திரை தொடங்கிவிடும்.

வாரக்ரீ யாத்திரையை வாரீ என்றும் சுருக்கமாக அழைக்கிறார்கள். பூனாவிலிருந்து 25 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது ஆலந்தி. அங்குதான் சித்தேஸ்வரர் ஆலயம் அமைந்துள்ளது. வாரீ யாத்திரையில் ஆலந்தியிலிருந்து கிளம்பும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் நடந்தே பண்டரிபுரத்தை அடைவார்கள்.

அதற்கு முன்தினம் நானும் ஜருகண்டியும் ராமநாதனை வாரீ யாத்திரை தொடர்பாகப் பலவித கேள்விகளைக் கேட்டோம். அவரும் உற்சாகமாகப் பதிலளித்ததில் பல விவரங்களைத் தெரிந்துகொண்டோம்.

''இந்த யாத்திரைக்கு சுமார் எவ்வளவு நாட்கள் பிடிக்கும்?''

''ஆலந்தியிலிருந்து பண்டரிபுரம் சுமார் 150 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. யாத்திரையை முடிக்க 17லிருந்து 20 நாட்கள் வரை ஆகும்'' என்றார் ராமநாதன்.


''வேகமாகப் போனால் இன்னும் சீக்கிரமே போய்விடலாம் இல்லையா?'' என்றான் ஜருகண்டி.

''அப்படியெல்லாம் அவசரக் குடுக்கைத்தனமாகவோ ஆடி அசைந்துகொண்டோ சென்றுவிட முடியாது''. கிளம்பும் நாளிலிருந்து சேரும் நாள்வரை கணக்கு உண்டு. ஆஷாட மாதத்தில் - தோராயமாக ஆடி மாதம் என வைத்துக் கொள்ளலாம் - கிருஷ்ணபட்ச அஷ்டமி திதியில் கிளம்பி, சுக்லபட்ச தசமி திதியில் பண்டரிபுரத்தை அடைய வேண்டும். ஒருவரையொருவர் தாண்டிக் கொண்டு செல்வதில்லை. இதற்கு முக்கிய காரணம் பக்காவான ஏற்பாடுகள் தான்.

''திண்டிதிண்டியாகத்தான் நடக்க வேண்டும்'' என்ற ராமநாதன் அருகிலிருந்த சொம்பை எடுத்து அதிலிருந்த தண்ணீரை வாயில் சரித்துக் கொண்டார்.

அதற்குள் ஜருகண்டி கேள்வியோடு முந்திக் கொண்டான். ''திண்டு தெரியும். திண்டின்னா என்ன?''

'சரியான முந்திரிக் கொட்டை. அதை நானே சொல்லமாட்டேனா என்ன?' என்பது போல் ஒரு பார்வையை □சிய ராமநாதன் தொடர்ந்து விளக்கம் அளித்தார்.



''திண்டி என்பது ஒரு கு□. ஒரு திண்டி மற்றொன்றோடு கலக்கக்கூடாது. இப்படி□சுமார் 2500 திண்டிகள் ஆலந்தியிலிருந்து கிளம்புகின்றன என்றா□ம், 2□ திண்டிகளுக்கு

மட்டும் ஒரு சிறப்பிடம் உண்டு. முதலில் பதிவு செய்யும் இந்த 28 திண்டிகள் ரதத்துக்கு முன்னால் செல்ல, மற்ற ஆயிரக்கணக்கான திண்டிகள் ரதத்தைப் பின்தொடரும். அந்த வெள்ளி ரதத்தில் மையமாக இருப்பது ஞானேஸ்வரர். பாண்டுரங்கனின் பரம பக்தர்.''

''ரதத்தில் ஞானேஸ்வரரின் உருவம் இருக்குமா?''

''உருவம் அல்ல, பாதுகைகள். ஊனக் கண்ணில் பார்த்தால் அது பாதுகைகள்தான். ஆனால் ஞானேஸ்வரரே ஆலந்தியிலிருந்து தன் அன்பு பாண்டுரங்கனைக் காண பண்டரிபுரம் செல்வதாகத்தான் ஆழமான நம்பிக்கை.

அதுமட்டுமல்ல ஞானேஸ்வரரின் குதிரை ஒன்று யாத்திரையில் இடம் பெறும். கூடவே இன்னொரு குதிரையும் வரும். இந்த இரண்டாவது குதிரை 'சோப்தார்' என்பவருடையது. அதாவது ஞானேஸ்வரரின் பாதுகாவலர். ஞானேஸ்வரர் உடலோடு வாழ்ந்தபோது அவருக்குப் பாதுகாவலராக இருந்தவரின் வாரிசுகளுக்குதான் வாழையடி வாழையாக இந்தச் சிறப்பு அளிக்கப்படுகிறது.''

இந்த இடத்தில் ஆலந்தியைப் பற்றிய வேறுசில தகவல்களையும் வாசகர்கள் அறிந்துகொள்வது நலம். ஆலந்தி என்றால் மராத்தியில் கடவுளின் இடம் என்று பொருள். ஞானேஸ்வரர் சில வருடங்கள் இங்குத் தங்கினார். அந்த நகரம் முழுவதும் பாண்டுரங்கப் பக்தியைப் பரப்பினார்.

இந்திராணி நதிக்கரையில் அமைந்துள்ளது இந்த நகரம். பூனாவிலிருந்து நிறைய பேருந்துகள். முக்கால் மணி நேரத்தில் அடையலாம்.

பாண்டுரங்க சரிதத்தில், பக்தி விஜயத்தில், ஞானேஸ்வரருக்கு மிகச் சிறப்பான இடம் உண்டு. அவர் ஒரு ஞானக் கடல். பகவத் கீதையை மராத்தியில் மொழிபெயர்த்தார். இது 'ஞானேஸ்வரி' என்று அழைக்கப்படுகிறது.



ஞானேஸ்வரர் பிறந்தது 'பைடண்' என்ற இடத்தினருகே (நம் பண்டரி விஜயத்தில் அங்கும் சென்றோம். அந்த விவரங்கள் பிறகு) எனினும் ஆலந்தியிலுள்ள குகையில்தான் அவர் சமாதி அடைந்தார். அங்குள்ள ஆலயம்தான் சித்தேஸ்வரர் கோவில்.

ராமநாதன் அளித்த வாரீ யாத்திரையைப் பற்றிய ரசமான விவரங்களுக்கு மீண்டும் வருவோம்.

''ரதத்துக்கு முன்னால் 28 திண்டிகள் செல்லும் என்றேன் இல்லையா, அவற்றிற்கெல்லாம் ஒவ்வொரு எண்ணைக் கொடுத்

தீர்த விட்டல க்ஷேத்ர விட்டல
தேவ விட்டல தேவபூஜா விட்டல
மாதா விட்டல பிதா விட்டல
பந்து விட்டல கோத்ர விட்டல
குரு விட்டல குருதேவதா விட்டல
நிதான விட்டல நிரந்தர விட்டல
நாமா ம்ஹணே மஜ விட்டல
ஸாம்படலா
ம்ஹாணோனீ களிகாளா பாட நாஹீ
- நாமதேவர்

''புண்ணிய தீர்த்தம், திருத்தலம், தெய்வம், தேவபூஜை, அன்னை, தந்தை, உறவினர், கோத்திரம், குரு, குரு காட்டிய தேவன், நிதி, நிரந்தரமாக உள்ளவன் எல்லாம் விட்டலனே. விட்டலன் என்னைப் பிடித்து வைத்துக் கொண்டுள்ளதால் கலிகாலம் எனக்கு ஒரு பொருட்டாகத் தெரியவில்லை''

அபங்க அமுதம்



திருப்பார்கள். அந்த வரிசையில்தான் கலந்துகொள்ள வேண்டும்.

ஒவ்வொரு திண்டியிலும் கட்டாயம் இடம்பெற வேண்டிய சில பொருள்கள் உண்டு. அவற்றில் மிக முக்கியமானது வீணை. இதைச் சுமந்திருப்பவர்தான் அந்தத் திண்டியின் மிக முக்கியமான நபர். இவரது வழிகாட்டுதலில்தான் அந்தத் திண்டி இயங்கும். அபங்கங்களில் மிகவும் பரிச்சயமுள்ளவராக இவர் இருப்பார்.

அடுத்தது 'பக்வாஜ்'. மிருதங்கம்தான் இப்படி அழைக்கப்படுகிறது. அடுத்தது 'தால்'. ஜால்ரா எனப்படும் தாளம் இது. நான்காவது 'பதாகா'. இது காவிக்கொடி. காக்கி வண்ணத்தில் முக்கி எடுத்த 'நிஜ' கொடி. அடுத்தது துளசி மாடம். இதைச் சுமந்து வரும் பொறுப்பு பெண்களுக்கானது. இறுதியாக 'கங்கா ஜல்' எனப்படும் புனித நீர்.

ஒவ்வொரு திண்டியிலும் வீணை மட்டும் ஒன்றுதான் இருக்கும். மற்ற ஆறும் எவ்வளவு வேண்டுமானாலும் இருக்கலாம்.

வீணையை ஏந்தி வருபவர் 'வீணாக்ரி' என்று அழைக்கப்படுகிறார். ஹரி பஜனையைச் செய்வதில் சமர்த்தர்களான இவர்களுக்குப் பரம்பரையாக இந்தச் சிறப்பு அளிக்கப்படுகிறது.

ஒரு திண்டியில் மேற்படி பொருள்கள் எந்த வரிசையில் இடம்பெற வேண்டும் என்பதற்கும் ஒரு நியதி உண்டு. முதலில் பதாகா, இரண்டாவதாக தால். மூன்றாவது வீணை, நான்காவது பக்வாஜ், ஐந்தாவது துளசிமாடம். கங்காஜல் திண்டியின் முன்புறம், பின்புறம் ஆகியவற்றில் இடம்பெறும்.

கலசம் அசைந்து அதன்மூலம் ஞானேஸ்வரர் அனுமதி கிடைத்தவுடன் வாரக்ரீ யாத்திரை தொடங்கும்.



விண்ணளக்கும்

கோவிந்தபுரத்தில் கட்டப்பட்டு வரும் பாண்டுரங்க விட்டலனின் கோவில், அப்படியே பண்டரிபுரத்தை உரித்து வைத்தாற்போல் இருக்கவேண்டும் என்று பார்த்துப் பார்த்துச் செதுக்குகிறார்கள். 2011 ஜூலை 15 அன்று இக்கோவில் கும்பாபிஷேகம். அதற்குள் எல்லா வேலைகளையும் முடுக்கிவிட்டிருக்கிறார் விட்டல்தாஸ் ஜெயகிருஷ்ண தீட்சிதர். கோவிலின் சிறப்பை இப்படியெல்லாம் பட்டியலிடலாம்:

- கோவிலின் கோபுரம் மகாராஷ்ட்டிர கட்டடக் கலையை ஒட்டியே கட்டப்படுகிறது.
- கோபுரத்தின் உயரம் நூற்றி முப்பத்திரெண்டு அடிகள். சூரியனே மனித சக்திக்கு அடிப்படை. சூரியனைப் போற்றும் சூரிய ஸ்துதி, நூற்றி முப்பத்திரெண்டு பஞ்சாதிகள் (பாராக்கள்) கொண்டது. மேலும் இந்த 132 என்ற எண், ஆரோக்கியத்தையும் சகல சௌக்கியத்தையும் தரவல்ல எண்.
- கருவறையில் சுவாமிக்குக் கீழே நூறு கோடி விட்டல நாமங்களை எழுதி சமர்ப்பிக்க இருக்கிறார்கள். பாண்டுரங்கனின் அருளை வேண்டும் அனைவரும் விட்டலனின் நாமத்தை எழுதி, இங்கே அனுப்பலாம். ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு சைஸ் பேப்பரில் எழுதுகிறார்கள். அவற்றை முறைப்படி அடுக்கி வைக்க முடியாது என்று இந்த மடத்திலேயே பத்தாயிரம், லட்சம் நாமாக்களை எழுதித் தரும் நோட்டுகளை வெளியிட்டிருக்கிறார்கள்.
- இதுவரை அறுபது கோடி நாமாக்கள் எழுதி வந்துவிட்டன. அவற்றைப் பத்திரமாக பெட்டியிலும் கவர்களிலும் சேமித்து வைத்திருக்கிறார்கள். இன்னும் ஓராண்டுக்குள் மிச்சமிருக்கும் நாற்பது கோடி நாமாக்களும் வந்துவிடும் என்று நம்புகிறார்கள்.
- கோபுரத்துக்கு மேல் பதினெட்டு அடிகள் செப்புக் கலசம். ஏன் பதினெட்டு? ஜெயத்தையும் மங்களத்தையும் குறிக்கும் எண் அது.



* செப்புக் கலசம்

● முன்னால் இருக்கும் வசந்த மண்டபம், தென்னகக் கட்டடக் கலையின் சிறப்பை எடுத்துச் சொல்வதாக இருக்கும்.

● விசாலமான வசந்த மண்டபத்தில் தூண்களே கிடையாது. சத்சங்கம், பஜனை இன்னபிற விழாக்களை நடத்தவென்று இத்தனை பெரிய மண்டபம் எழுப்பப்பட்டுள்ளது.

● பண்டரிபுரத்தில் இருக்கும் கோபுரத்தின் உயரம் எண்பது அடிகள். கோவிந்தபுரத்தில் அமையவிருக்கும் விட்டலன் கோயில் கோபுரத்தின் உயரம், அதைவிட அதிகமாக இருக்குமாம்!

- ஸ்ரீ அரசு

விட்டலன் கோபுரம்!





● கோபுரப் பணியைத் திட்டமிடும் விட்டல்தாஸ் சுவாமிகள்



● சேமிக்கப்படும் நாமாக்கள்

மோஸார்டையும் தியாகராஜரையும், பீதோவனையும் தீக்ஷிதரையும், விவால்டியையும் சியாமா சாஸ்திரியையும் ஒன்றாகக் கலந்து வாசித்தால் எப்படி இருக்கும்?

''அற்புதமாக இருக்கும்'' என்று யாராவது சொன்னால் நம்புவீர்களா? நம்பாவிட்டால், 'ராகாஸாகா' என்ற சி.டி. ஆல்பத்தை வாங்கிக் கேட்டுப் பாருங்கள்.

இந்த இசைப் புரட்சியை நிகழ்த்தியிருப்பவர் வயலின் வித்தகர் வி.எஸ். நரசிம்மன். 'ராஜ பார்வை' திரைப்படத்தில் கண் பார்வையற்ற வயலின் கலைஞனாகத் தோன்றிய கமலுக்காக வாசித்தவர்.

மேலை நாட்டு இசை அமைப்பு முறையைச் சார்ந்த 'ஸ்ட்ரிங்ட் க்வார்டெட்' என்கிற பிரிவைச் சார்ந்தது இந்த சி.டி.

''நடுநாயகமான முதல் வயலின், பாடலையோ அல்லது மெலடி என்று வழங்கப்படும் ராகத்தையோ வாசிக்க, இரண்டாம் வயலின், வயோலா (வயலினைக் காட்டிலும் காத்திரமான ஒலி கொண்ட சற்றுப் பெரிய வயலின் போன்றது), செல்லோ (தலைகீழாக நிறுத்தி வாசிக்கப்படும் விஸ்வரூபம் எடுத்த வயலின்) என்ற மூன்றும் பக்க வாத்தியங்களாக இணைகிற இசை மரபுதான் ஸ்ட்ரிங்ட் குவார்டெட்'' என்று விளக்குகிறார் நரசிம்மன். ('ஸ்ட்ரிங்ட்' - தந்தி வாத்தியங்கள்; 'க்வார்டெட்' - நான்கு).

தொட்டும் தொடாமலும், தொடர்ந்தும், விலகியும், சுற்றிச் சுழன்றும், தழுவியும் நழுவியும் நெகிழ்ந்தோடும் ஸ்வரங்களின் சேர்க்கையால் பல்வேறு பரிமாணங்களில் இசையை ஜொலிக்கச் செய்திருக்கிறார் நரசிம்மன். நான்கு வாத்தியங்களும் என்ன என்ன வாசிக்க வேண்டும் என்பதைத் தனித்தனி ஸ்கோர்களாகக் (ஸ்வர அமைப்புகளாக) கற்பனை



✱ வி.எஸ். நரசிம்மன்

துளித்துளியாய் பூஞ்சிதறலாய்...!

செய்து வடிவமைத்தலை அரேன்ஜ்மெண்ட் என்று சொல்கிறார்கள். அப்படிப் பட்ட அரேன்ஜ்மெண்டை நரசிம்மன் நமது கர்நாடக இசைப் பாடல்களை மையப்படுத்தி உருவாக்கியுள்ளார்.

ராகாஸாகா ஆல்பத்தில் முதல் வயலின் வாசித்ததோடு இரண்டாம் வயலின், வயோலா ஆகியவற்றையும் தமக்குத்தாமே பக்க வாத்தியமாகவும் வாசித்திருக்கிறார்! தற்போதைய நவீன டிராக் ஒலிப்பதிவு முறை, இதனைச் சாத்தியமாக்குகிறது.

ஆபோகி வர்ணத்துடன் தொடங்கி லால்குடி ஜெயராமனின் தேஷ் தில்லானா, சின்னஞ்சிறு கிளியேவுடன் நிறைவு பெறும் இந்த ஆல்பத்தில் இடம் பெற்றுள்ள பத்துப் பாடல்களையும் எத்தனை முறை திரும்பத் திரும்பக் கேட்டாலும் இன்னமும் கேட்க வேண்டும் என்ற ஆவல் தீருவதில்லை.

பழங்கால மாளிகை ஒன்று திடீரெனப் புதிய ஒளி அமைப்பில் உயிர் பெற்றெழுந்து, "நாம் தினந்தோறும் பார்த்து வந்த மாளிகையா இது! இந்தத் தூண்களும், வளைவுகளும், சுதை வேலைப் பாடுகளும் நம் கண்களில் இத்தனை நாள் படவே இல்லையே" என்று நம்மைப் பிரமிக்க வைக்கும் அதிசயம் போலத்தான் இந்த இசையும்! பிசிறில்லாமல், வலிமையுடன் அதேசமயம் மென்மையாக, இதமாக, சரளமாக, இனிமையே சாரமாகப் பொழியும் அந்த வில்லும் விரல்களும் அவை ஆழ்ந்து திளைக்கும் நாத வெள்ளத்தில் நம்மையும் இழுத்துக்கொண்டு போகின்றன. கனம், நயம், கமகம், குழைவு அனைத்துடன் அழுத்தமான, சம்பிரதாயச் சுத்தமான கர்நாடக இசைப் பாடல்களை, ராக ஆலாபனை, ஸ்வரப்ரஸ்தாரத்துடன் கேட்கும்போது, 'இப்படிப்பட்ட அற்புதமான கலைஞரைக் கர்நாடக இசை உலகம் அறியாது போய் விட்டதே' என்ற தாபம் எழாமல் இல்லை.

மிருதங்கம் போன்ற லய வாத்தியம் ஏதும் இல்லாமல், "தகதிமி தகிட தகதிமி தகிட" என்று, செல்லோ தந்தியிலேயே தாள கதி கம்பீரமாக முழங்க, கௌளை ராகத்தில் அமைந்த தீக்ஷிதரின் 'ஸ்ரீமஹா கணபதி ரவதுமாம்' க்ருதியில் அந்த மத்தவாரணமே கண்முன் அசைந்து அசைந்து நடைபோட்டு வருகிறது. முதல் வயலின் "சித்தி விநாயகோ" என்று சற்றே நிறுத்த அந்தப் பிரம்மாண்டமான வேழத்தை நிமிர்ந்து பார்க்கும் மலைப்பு.

துளித்துளியாய், பூஞ்சிதறலாய் அமிருதவர்ஷிணியின் ஸ்வரங்கள் சாரல் கட்ட, தொடர்வது 'ஸுதாமயி', 'ஓரகுபு ஜூசேதி ந்யாயமா' என்று விம்முவது தியாகராஜரின் கன்னடகௌளை கிருதி. சொல்லிக்கொண்டே போகலாம் ஒவ்வொரு பாடலின் அழகையும்.

"ஸ்ரீசுப்ரமண்யாய'வைக் கேட்டீர்களா? ஓ! அது நம்மை ஒரு தியான

நிலைக்குக் கொண்டு போய் விடுமே'' என்று சிலிர்ப்புடன் மொழிகிறார் இந்த சி.டி.யில் செல்லோ வாசித்திருக்கும் வி.ஆர்.சேகர். கைக்கு அடங்காமல் திமிறும் இந்த வாத்தியத்தைக் கட்டி ஆண்டு அதை நினைத்ததெல்லாம் பேசவும், உறுமவும், கர்ஜிக்கவும் வைக்கும் இந்த வித்தகர் குன்னக்குடி வைத்தியநாதனின் மகன் என்று அறியும்போது, ஒரு பக்கம் வியப்பு. இன்னொரு பக்கம் 'அதானே பார்த்தேன்' என்ற கண்டுபிடிப்பின் பெருமை!

'ஏன் மேற்கத்திய இசை? ஏன் வயலினை விடுத்து செல்லோ?' என்ற கேள்விகளுக்கு இயல்பாய் அவரிடமிருந்து வருகிறது பதில்:

''வயலின் கற்றுத் தர அப்பாவுக்கு நேரமே இல்லை. பள்ளிப் படிப்பு முடிந்ததும் நானாகவே மேற்கத்திய இசையை விரும்பி இதில் இறங்கினேன். தன்ராஜ் என்ற குரு பயிற்றுவித்தார். முப்பது ஆண்டுகளாகத் திரை இசை தான் என் வாழ்க்கை. அவ்வப்போது இதுபோல் மேற்கத்திய இசைக் குழுவில் இணைந்து வாசிக்கும் ஆனந்தம் ஆத்மார்த்தமானது'' என்கிறார்.



மேற்கத்திய இசை கர்னாடக இசை இரண்டிலும் கரை கண்டும் அடக்கம் என்பதற்கு இலக்கணமாக இருப்பது இவரது மகுடம்.

நரசிம்மனும் இசைப் பரம்பரையைச் சார்ந்தவர். தாத்தா பிடில் ரங்கண்ணா என்று பெயர் பெற்ற வித்வான். தந்தை ஸ்ரீநிவாச ஐயங்கார் பிரபல கோட்டு வாத்தியக் கலைஞர் என்பதோடு பல இசைக் கருவிகளையும் வாசிக்கும் திறமை படைத்தவர். வீடு முழுவதும் தில்ருபா, சாரங்கி, செல்லோ, ஜலதரங்கம், கஞ்சிரா என்று இசைபடும் வாத்தியங்களுக்கிடையே வளர்ந்தவர் நரசிம்மன். தந்தையிடம் வயலின் வாசிக்கக் கற்றுக்கொண்டு அவரது கோட்டுவாத்தியக் கச்சேரிகளுக்குப் பக்க வாத்தியம் வாசித்து வந்தார். பிறந்த ஊரான மேல்கோட்டையை விட்டுச் சென்னை வந்த வரை திரை இசை உலகம் வரவேற்று அரவணைத்துக்கொண்டது. எம்.பி.ஸ்ரீனிவாசன், எம்.எஸ்.விஸ்வநாதன், இளையராஜா, ஏ.ஆர்.ரஹ்மான் போன்ற பலர் இசையமைப்பில் வாசித்தவர்; வாசிப்பவர். பாலசந்தரின் 'அச்சமில்லை, அச்சமில்லை ' போன்ற பல படங்களுக்குச் சொந்தமாக இசை அமைத்துத் தடம் பதித்தவர். நரசிம்மனின் தந்தை கன்னடப் படங்களுக்கு இசை அமைத்தவர். அவற்றுள் ஒன்று பத்மா சுப்ரமண்யத்தின் தந்தை கே.சுப்ரமண்யம் இயக்கிய 'ஸ்த்ரீ ரத்னா' என்ற படம்.

சென்னை வந்த நரசிம்மனை மேற்கத்திய இசை மெல்ல மெல்ல ஈர்த்தது. முழு மூச்சுடன் அதைப் பயின்று அதிலும் கர்னாடக இசைக்கு நிகரானத் தேர்ச்சி அடைந்து, இரண்டு இசைத் துறைகளிலும் கரை கண்டும், அடக்கம் என்பதற்கு இலக்கணமாக இருப்பது இவரது மூன்றாவது மகுடம்.

ராகா ஸாகா பாடல்களை வாசித்துப் பதிவு செய்ய ஸ்டுடியோ எதையும் தேடிப் போகவில்லை. வீட்டில் தமது அறையில் அமர்ந்தவாறே ஒவ்வொரு வாத்தியமாக வாசிக்க, வெளியே பறவைகள் இரைச்சல், தெருவில் வாகனங்கள் ஓசை என்ற பாதிப்பு எதுவும் அறவே இல்லாமல் வாத்தியங்களின் ஒலி நேரே கம்ப்யூட்டரில் பதிவாகியுள்ளன. இதற்கேற்ற வண்ணம் நான்கு வாத்தியங்களிலும் சிற்சில மாறுதல்கள் செய்திருக்கிறார் நரசிம்மன்.

- ஸுஜாதா விஜயராகவன்

'அனுமதி வாங்கித்தான் பெண்ணிடம் காதலை வெளிப்படுத்துவேன்' என்று இளைஞர்களுக்கு காதல் பாடமே நடத்தி விட்டாரே(ா) முதல்வரின் பேரன் அருள்நிதி!

- அய்யாறு எஸ். வாசுதேவன், சென்னை

விட்டல்தாஸ் மஹராஜ் ஜெயகிஷ்ண தீக்ஷிதரின் பத்து நாள் நிகழ்ச்சியை இணையத்தில் காண ஒரு லட்சம்பேர் ஐந்நூறு ரூபாய் கட்டணம் அளித்த செய்தி ஆச்சர்யம்.

- அ.க.கிருஷ்ணன், புதுச்சேரி

'க்ளிக் கார்னர்'- காமென்ட், வித்தியாசமான கற்பனை. உமது கரும்பாய் இனிக்கும் குறும்பு நச்சுன்னு இருக்கு.

- நித்யா பாலாஜி, ஜமீன் பல்லாவரம்

ச.ந.கண்ணனின் 'எங்கு தொட்டாலும் ஊழல்' மனதினைப் பிசைகிறது.

- எஸ்.அமிர்தா, சென்னை - 26

'வாழ்க வளமுடன்' ஸ்பெஷல் ஓர் அற்புத பெட்டகம். 'சுவடுகளின் ஆவணம்' அவரது வரலாற்றை அறிய வைத்தது. மகரிஷி கருத்துகள், அருள்ளர் ஆல்பம். வேதாத்திரிப் பற்றி பொள்ளாச்சி நா.மகாலிங்கம் அவர்களின் கட்டுரை எல்லாமே உள்ளத்துக்கு உவகைதந்தன. பயன்மிகு பொக்கிஷம். பாராட்டுகள்.

- உமாதேவி பலராமன், வேட்டவலம்

'கண்டறியாதன கண்டேன்' தொடர் மூலம் கோயில்கள், அங்கு நடைபெறும் விழா, வைபவங்கள் பற்றிய உண்மைகளைத் தெரிந்துகொள்ள முடிந்தது. பன்னிரண்டு வாரம் ஸ்ரீநிவாச ராகவன் பரவசத்தை ஏற்படுத்திவிட்டார். சபாஷ்...!

- ரேவதிப்ரியன், ஈரோடு

முத்துவேலின் கவிதை முத்தென ஒளிர்கிறது!

- ஆதி.கேசவன், கழுகாசலபுரம்

கடந்த முப்பது ஆண்டுகளாக ஜவுளித் தொழிலில் பலவகைகளில் ஈடுபட்டிருப்பவன் நான். இந்தத் தொழிலின் பிரச்னைகள் பற்றி இவ்வளவு விரிவாக எந்தப் பத்திரிகையும் எழுதியதில்லை.

- தேவி ராஜம், திருப்பூர்



'ஆஹா... ஆல்பம்' மீண்டும் கல்கியில் புதிய பகுதியா? வரவர எங்களை ஆச்சரியப் படுத்திக்கிட்டே இருக்கிறீர்களே?

- வே.முருகேசன் சென்னை - 88




இனிமையான பயண வாய்ப்பு உண்டு. தந்தை வழி சொத்து வந்து சேரும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் உண்டாகும். கடன் சுமை தீரும். புதிய வீடு/மனை வாங்க ஏற்ற தருணம். பொருள் வரவு உண்டு. மகிழ்ச்சியான வாரம்.



சத்ரு தொல்லை அதிகமாகும். கடன் சுமையால் அவதிப்பட நேரும். வாக்குவாதம் தவிர்க்கவும். தேவையற்ற பணச் செலவு உண்டாகும். திடீர்ப் பயணமும், வீடு மாற்றமும் வந்து சேரும். வம்பு வழக்குத் தள்ளிப் போகும். நன்மையும் தீமையும் கலந்து வரும் வாரம்.



மனத்தை உறுத்திய பெரிய பாரம் குறையும். பணப் பிரச்னை தீரும். உத்தியோகத்தில் உயர்வு கிட்டும். வியாபாரத்தில் நல்ல பலனும் புதிய தொழில் முயற்சியில் வெற்றியும் தேடி வரும். மகான்கள் தரிசனம் பெற நீண்ட தூரப் பயணம் செல்ல நேரிடும். நற்பலன்கள் அதிகமாகவே இருக்கும் வாரம்.



உத்தியோகத்தில் பதவி உயர்வு, பண உயர்வு ஏற்படும். கடன் பிரச்னை தீரும். வீடு மாற்றம் உண்டாகும். சுபப் பேச்சுவார்த்தை பலனளிக்கும். வாகனம் வாங்கும் வாய்ப்பு உண்டு. உறவினர் நட்பு வருகையால் ஆதாயம் தேடி வரும். இனிமையான வாரம்.



நீண்டதூரப் பிரயாணம் வந்து சேரும். உத்தியோகத்தில் இடம் மாறுதலும், கடன் தொல்லையும் இருக்கும். மனத் தைரியமும் தன்னம்பிக்கையும் மிகுந்து காணப்படும். தரும காரியங்கள் நிறைவேறும். குடும்ப வாழ்க்கை நன்றாக இருக்கும்.



திடீர்ப் பிரயாணம் மேற்கொள்ள நேரிடும். நீண்டகால வழக்குகள் முடிவுக்கு வரும். பணக் கஷ்டம் இருக்காது. எதிரிகள் சரண் அடைவார்கள். கடன் தொல்லை தீரும். குடும்ப உறவு நன்றாக இருக்கும். புண்ணியத்தலம் செல்வீர்கள். மகிழ்ச்சியான வாரம்.

நடக்குமென்பார்; நடக்கும்!

29.08.2010 முதல்
04.09.2010 வரை

தஞ்சை பரத்வாஜ்



உத்தியோகத்தில் உயர்வு வரும். சுப பேச்சுவார்த்தை பலிதமாகும். புதிய வேலைவாய்ப்பு வந்து சேருவதால், தொழிலில் முன்னேற்றம் இருக்கும். வியாபாரத்தில் மிதமான போக்குக் காணப்படும். புண்ணிய காரியம் செய்வீர்கள். கடல் கடந்த மனிதருடன் அறிமுகம் ஆகும். சுகமான வாரம்.



நிலுவைகள் வசூலாகும். கடன் சுமை நீங்குவதால் நிம்மதிக் கிட்டும். வம்பு வழக்கு முடிவுக்கு வரும். நெருங்கிய கூட்டாளிகள் விலகிப் போவார்கள். வீடு/மனை வாங்க முதலீடு செய்ய அருமையான நேரம். புதிய பொருட்கள் சேர்க்கை உண்டாகும். சிலருக்கு இட மாறுதல் உண்டாகும்.



வாக்குவன்மை மேலோங்கும். வர வேண்டிய நிலுவைகள் வந்து சேரும். தடைப்பட்டு வந்த திருமணம் கைகூடும். விலகிப்போன கூட்டாளிகள் தேடி வருவார்கள். பண வரவு காத்திருக்கிறது. வியாபாரத்தில் நல்ல வருவாய் எதிர்பார்க்கலாம். சுபிட்சமான வாரம்.



வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும். வாகனங்களில் பயணம் செய்யும்போது எச்சரிக்கை தேவை. நீண்ட காலம் தடைப்பட்ட காரியம் நடக்கும். புதிய தொழில் பலன் அளிக்கும். சுமையிலிருந்து விடுதலை கிட்டும். நீண்ட தூரப் பயணம் செல்ல வேண்டி வரும். எச்சரிக்கையான வாரம்.



பணப் பிரச்னை தீரும். வாகனம் வாங்க வாய்ப்பு ஏற்படும். கடன் பிரச்னை உறுத்த மன நிம்மதி பறி போகும். வழக்கு இழுத்துக் கொண்டே செல்லும். வேலைப்பளு அதிகரிக்கும். வாக்குவாதத்தில் ஈடுபடாமலிருத்தல் நல்லது! பிரச்னையான வாரம்!



உடல்நிலைத் தொல்லை விலகும். யாருக்கும் ஜாமீன் போட வேண்டாம். கூட்டாளிகளால் நஷ்டம் உண்டாகும். எனினும் சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் உயர்வு கிட்டும். சந்தோஷம்/துக்கம் சரிவிகிதக் கலவையான வாரம்!

ஏற்கெனவே இரண்டு செல்ஃபோன்களைப் பறி கொடுத்து இருந்த என் கணவர், மேற்கொண்டு ஒன்றை வாங்க யோசித்துக்கொண்டு இருந்த போது திருமணமாகி பெங்களூருவில் இருக்கும் எங்கள் மகளும் மருமகனும் நவீனத் தொழில்நுட்பத்துடன் கூடிய ஒரு விலையுயர்ந்த செல்ஃபோனைப் பரிசளித்தார்கள்.



* கே. ஜெயலெஷ்மி

என் கணவர் மிகவும் systematic. காலையில் எழுந்து பேப்பர் படிப்பதற்கு முன் செல்லை சார்ஜ் பண்ணுவார். அன்றும் அதுபோல சார்ஜ் பண்ண செல்லைத் தேடும்போது, அதைக் காணவில்லை. சரி நேற்று இரவு வெளியில் போனோமே, அப்ப காரில்தான் இருக்கும் என்பது நிச்சயமாகத் தெரிந்து காரில் போய் பார்க்க எங்களுக்கு அதிர்ச்சி. காரில் செல்ஃபோன் இல்லை. அப்போதுதான் காரைத் துடைப்பவர் எங்கள் காரைத் துடைத்துவிட்டு எதிர்வீட்டுக் காரைத் துடைக்கச் சென்றிருந்தார். உடனே என் கணவர், என் மகனின் செல்ஃபோனைக் கையில் வைத்துக்கொண்டு எதிர் வீட்டுக்காரரிடம் பேசிக்கொண்டே தன் நம்பருக்கு டயல் செய்ய அங்கு காரைத் துடைத்துக் கொண்டு இருந்த நபரின் பாக்கெட்டிலிருந்து எங்கள் செல்ஃபோன் ஒலி எழுப்ப அவரும் திகைக்க, நாங்கள் செல்ஃபோனை எடுத்து வந்துவிட்டோம். இனி மறதியாகக்கூட காரில் செல்ஃபோனை வைக்கக் கூடாது என்று முடிவு செய்தோம். (அந்த நபரையும் வேலையில் இருந்து நீக்கிவிட்டோம்.)

- கே. ஜெயலெஷ்மி, சென்னை

2006 மார்ச் ஒன்பது, எனது பிறந்தநாளன்று என் மகன் சஸ்பென்ஸாக செல்ஃபோன் வாங்கித் தந்து என்னை அசத்தினான். முதல் குழந்தை பிறந்தபோது உணர்ந்த அந்த உணர்ச்சிகளை மறுபடி உணர்ந்தேன். இறக்கை கட்டாத குறைதான். மகிழ்ச்சியில் மிதந்தேன். பார்ப்பவர்களிடமெல்லாம் மகன் வாங்கித் தந்த அந்த 'செல்'லத்தைச் சொல்லிச் சொல்லி, காட்டிக் காட்டி மகிழ்ந்



வாசகர்களே! உங்க செல்ஃபோன் அனுபவத்தை எழுதுங்

KACON என்று டைப் செய்து. ஒரு ஸ்பேஸ் விட்டு உங்கள் அனுபவம். பெ



தேன். விலையுயர்ந்த பொருட்களைக் கணவர் வாங்கித் தந்திருந்தாலும் மகன் தன் உழைப்பில் வாங்கித் தந்த அந்த 'செல்'லின் மதிப்பே தனிதானே! இந்த மகிழ்ச்சியும் தனிதானே! எங்கள் ஊர் பெரிய கோவில் அம்பாளை, 'செண்டும் கையும் செங்க மலத்தாயார் துணை' என்று சொல்வார்கள். இங்கே செல்லும் கையும் சரஸ்வதி துணையாகக் கூடவே வருகிறது. முதன்முதலில் தப்புத் தப்பாய் மெசேஜ் அடித்துக் காசை இழந்ததுகூட நல்ல அனுபவம் தானே! இப்போ விரலசைவில் விந்தைகள் பல!

- ஆர். சரஸ்வதி, மன்னார்குடி

என் புது செல்ஃபோனுடன், என் அக்கா வைப் பார்க்கப் போயிருந்தேன். அக்காவின் மகன் 12 வயது, மாமா செல்ஃபோன் கொடு... கேம்ஸ் விளையாட வேண்டுமென்றான். என் அக்கா, அவனிடம் கொடுக்காதே. அவன் ஒரு ஜி.டி. நாயுடு. எதைக் கண்டாலும் பிரித்து மேய்ந்து விடுவான் என்று எச்சரித்தார்.

"செல்ஃபோன் கொடு... கேம்ஸ் விளையாடணும்!"

மதிய உணவுக்குப் பின், ஒரு குட்டித் தூக்கம் போட்டு விட்டு, ஊருக்கு வந்து சேர்ந்தேன். வந்தவுடன் என் சகோதரிக்கு ஃபோன் செய்ய செல்ஃபோனை எடுத்துப் பார்த்தேன். ஃபோன் வேலை செய்யவில்லை. ஒரு சந்தேகத்தோடு செல்லைத் திறந்து பார்த்தேன். பேட்டரியைக் காணவில்லை.

நான் தூங்கும்போது 'அந்த ஜி.டி நாயுடு' பேட்டரியைக் கழற்றி, அதற்குள் என்ன இருக்கிறது என்று உடைத்துப் பார்த்திருக்கிறான் என்பதை, என் சகோதரி என் மனைவியின் செல்ஃபோன் மூலம் எனக்குத் தெரிவித்தாள். பிறகென்ன 300 ரூபாய் கொடுத்து வேறு பேட்டரி போட வேண்டியதாயிற்று.


- எஸ். சோமசுந்தரம், குளித்தலை

lki@kalkiweekly.comக்கும் அனுப்பலாம். உங்கள் செல்ஃபோனில்
r ஆகியவற்றோடு 562632 என்ற எண்ணுக்கு எஸ்.எம்.எஸ்.செய்யலாம்.

வி.கே.ஜெயராமன் - தங்கம்மாள் ரெண்டு பேரும் கணவன் - மனைவி. ஜோலார்பேட்டை அருகே ஊசி நாட்டான் கிராமம். தொழில் விவசாயம். 'முந்தானை முடிச்சு' பார்த்துட்டு அவங்க ரெண்டு பேரும் ரசிகரா மாறிட்டாங்க. என்னோட பிறந்தநாளை நானேகூட மறந்துடுவேன். ஆனா அவங்க மறக்க மாட்டாங்க! ஊர் முழுக்க ஸ்வீட்ஸ் கொடுத்துக் கொண்டாடுவாங்க. கிராமத்துல விளையற பொருட்களில் எது பெஸ்ட்டோ, அதை எனக்காக மஞ்சள் பையில் எடுத்துக்கிட்டு புருஷன், பொஞ்சாதியா சேர்ந்து வீட்டுக்குக் கொண்டு வருவாங்க. இராமாயணத்துல ஒரு கேரக்டர், ராமருக்குப் பழங்களைப் பரிசாகக் கொடுக்க நினைப்பாள் சபரி என்ற கிழவி. இனிப்பில்லாத, சுவையில்லாத பழங்களை ராமர் கடிச்சி, அதனால முகச் சுளிப்பு வந்துடக் கூடாதுன்னு ஒவ்வொரு பழமா கடிச்சி ருசி பார்த்து வெச்சிருப்பாள். எல்லாமே எச்சில் கனிகள். ஆனால், அன்பில் விளைந்த பழங்கள். ராமர், எச்சில் என்று பாராமல் அதை ருசிச்சான்னு இராமாயணத்துல இருக்கு அந்த மாதிரி கேரக்டர்ஸ் அந்த ரசிகர்கள். வருஷத்துக் மூணு நாலு முறை வந்துடுவாங்க. சோபாவுலகூட உ காரமாட்டாங்க. தரையில உட்கார்ந்துகொண்டு வந் பொருட்கள் ஒண்ணு ஒண்ணா எனக்கு எடுத்துத் த வாங்க. அவங்க முன்னாடி நான் அதைச் சாப்பிடணும் செடியோட வேர்க்கடலையைப் பிடுங்கிக் கொண்டுவந் முத்தின கடலையா உரிச்சுத் தருவாங்க; என்கிட்டே இருந்து ஒரு பைசாகூட வாங்கிக் கொண்டது இல்லை

சில காலம் அவர்கள் வருவது நின்று போனது வீடும் மாறி வந்துட்டேன். வீட்டு எதிர்ப்போட எ கல்யாணம் நடந்து முடிஞ்சுது. அப்போ என்னோ புது வீட்டைத் தேடி ஜெயராமன் மட்டும் தனிய

அன்பில் விளைந் பழங்கள்!



வந்துட்டார். "நாங்கதான் உம்மேல பாசமா இருக்குறோம். நீ எம் மேல பாசம் வைக்கல. உனக்குப் புத்தி சொல்லித் திருத்த யாருமில்ல. இதெல்லாம் சரியா இருக்கும்னு எனக்குத் தோணலை. சரி எங்க அவன்! கூப்பிடு... அவனை ஒரு மிரட்டு மிரட்டிட்டுப் போறேன். அப்போதான் பயமிருக்கும்," சொல்லியபடி என்னைத் தாண்டி மாடிப்படி ஏற முயன்றவரின் கையில் அரிவாள் இருக்கிறதை அப்போதுதான்

பார்த்தேன். அவரைச் சமாதானப் படுத்தி அனுப்பியபோது ஒரு விஷயம் தெரிந்தது. அவர் மனைவி தங்கம்மாள் இறந்து போனதும் அதனால் அவர் சற்று மனநிலை பாதித்திருப்பதும். மனைவியை ஆழமா நேசிக்கிறவன் இப்படி நிலைகுலைவது சாத்தியம் தானே? அந்த நிலையில்கூட ஓர் உன்னதமான ரசிக னாய் என் நலனை மட்டும் பார்த்தார். அதுதான் அவர் மனத்தில் பதிந்து இருந்தது. அவர் நல்ல மன நிலையில் இருந்து செய்து இருந்தாலும் அந்தச் செயல் அநாகரிகமா னது அல்ல. ஏனெனில் இந்த ரசிகர் அடியாள் அல்ல.



தமிழக ரசிகர்கள் நாகரிகமானவர்கள். அவரவர் ஹீரோ அவரவருக்கு உசத்தி. அதற்காக எதிர் ஹீரோவைத் துவேஷிப்பதும் இன்னொரு ஹீரோவின் போஸ்டரைக் கிழிப்பதும் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்வதும் நிச்சயம் இந்தத் தமிழ் மண்ணில் இல்லை. ஐந்து வருடங்களுக்கு முன் இந்த மாதிரி கேரளாவில் இருந்தது. அப்படிச் செய்தவர்கள் நிச்சயம் ரசிகர்கள் இல்லை. கூலிக்கு மாரடிப்பவர்கள். இதை ஊக்கப் படுத்தியவர்கள் ஹீரோக்கள் அல்ல; வெறும் ஜீரோக் கள்தான். இப்போது கேரளாவிலும் நல்ல முன்னேற் றம் ஏற்பட்டு இருக்கிறது. இதுதான் நல்ல நாகரிகம்.

நாகரிகம்னு சொன்னதும் என் பாட்டி சொல்ற டயலாக் ஞாபகத்துக்கு வந்துடுது! "ச்சீ... என்னடி பட்டிணத்துக்காரனின் நாகரிகம்? சாப்பிட்டுத் தூங்குற

ஊர்வசி

வீட்டுக்குள்ளேயே, கக்கூஸ் கட்டி அதுக்குள் ளேயே போறான். 'அட்டாச்டு பாத்ரூம்'னு வேற பீத்திக்கிறான். கன்றாவி புடிச்சவன்க" என்பார். காலைக்கடன் என்றால் அது வீட்டுக்கு வெளியேதான். அதுதான் அவருக்கு நாகரிகம்.

9

எங்கக் கிராமத்திலிருந்து ஒரு பெண், ஸிட்டிக்கு வேலைக்குப் போன, அவ புருஷனோட அப்பப்போ ஆசையா பேசிக்க செல் ஃபோன் வாங்கிக் கொடுத் தாள். ஆனா இவ லைன் போடுறப்ப அவர்

யாரோடோ பேசிக்கிட்டு இருந்திருக்கார். அப்போ செல் ஃபோனில் வழக்கமாக வரும் டயலாக், 'நீங்கள் தொடர்பு கொள்ளும் நபர் வேறொரு எண்ணில் தொடர்பில் உள்ளார். சற்று நேரம் கழித்துப் பேசவும் அல்லது லைனில் இருக்கவும்' என்று வந்திருக்கு. இவனுக்குக் கோபம். வேறோர் எண்ணில் எப்படித் தொடர்பில் இருக்கலாம் என்று சிட்டிக்கு பஸ் ஏறி, அந்த செல்ஃபோனைத் தூக்கி வீசிட்டு புருஷனைக் கையோடு கூட்டிட்டு வந்துட்டா. அந்த வெகுளித்தனத்துக்குள், அறியாமைக்குள் எவ்வளவு உன்னதமான அவளின் காதல் இருக்கு. அதை எப்படிக் கிண்டலடிக்க முடியும்?





* இயக்குநர் பரதன்

உங்களுக்குத் தெரியுமா? ஒரு கிண்டல்தான் ஒரு கலை உருவாகக் காரணமாகவும் இருந்திருக்கு. குஞ்சன் நம்பியார்னு (கு.ந) ஒருத்தர் (கதகளியில் பிழாவு கருவி வாசிப்பவர்) கதகளியின்போது மேடையில் தூங்கி விடுகிறார் கு.ந. கதகளி ஆடுகிறவர் கு.ந-வைப் பலர் முன்னிலையில் கிண்டலடித்துவிட்டார். கேலிக்குள்ளான கு.ந., 'ஏன் தூக்கம் வந்தது? இந்தக் கலையில் மக்கள் பிரச்னை மக்கள் பாஷையில் மக்களுக்குப் போய் சேரலை. சேர்ந்து இருந்தால் தூக்கம் வந்து இருக்காது. ஆகையால் இதுல கொஞ்சம் மாற்றம் பண்ணனும்'னு மனசுக்குள் நெனைச்சு அவர் ஆரம்பிச்சதுதான் 'ஓட்டந்துள்ளல்' என்ற புதிய கலை வடிவம். ஓர் ஊருக்குப் போய் அந்த ஊர்ப்பிரச்னையைத் தெரிந்து கொண்டு அதனைக் கவிதையில் கேலியும் கிண்டலுமாக பாடிச் சொல்கிற கலை வடிவம். பல பாடல்களை அங்கேயே உருவாக்கிப் பாடுறது தான் 'ஓட்டந்துள்ளல்'. இது கதகளியின் இன்னொரு தொடர். தேவர் மகனுக்குப் பிறகு இது போன்ற இன்னுமொரு கலையான 'சாக்கியார் கூத்தை' மையமாக வைத்து இயக்குநர் பரதன் ஸாரோடு ஒரு படம் பண்ண முயற்சித்தபோது அதற்கான பூர்வாங்க வேலைகள் தொடங்கிய போது அவர் காலமானார். பரதன் ஸார் இன்னும் என் கண் முன்னே என்னைத் தொடர்ந்து இருக்கிறார்.

இந்தத் தொடர் வண்டி வாழ்க்கையில் ஒவ்வொரு பெட்டியிலிருந்தும் ஒவ்வொருவராக விலகியபடியே இருக்க...

நான் ஒரு புதிய ஜோடியை நெருக்கத்தில் பார்த்தபடியே வந்தேன் அந்த ரயிலில்...

அது ஒரு விசேஷ அனுபவம்...

(தொடரும்)

ஈஸி போட்டி சில்கி சாரி!



மாதம் 3 புடவைகள் பரிசு!

வாசகர்களே!

ஊர்வசி எழுதும் 'காலை எழுந்தவுடன் சிரிப்பு!' தொடரைத் தொடர்ந்து படிங்க... தொடரையொட்டி வாரம் ஒரு கேள்வி கேட்கப்படும்.

ஒவ்வொரு வாரமும் ஒரு கூப்பன் இடம்பெறும். விடைகள் மற்றும் உங்களின் பெயர் முகவரி ஆகியவற்றை அதிலேயே எழுதி இணைத்து மொத்தமாய் ஒவ்வொரு மாத இறுதியிலும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

சரியான விடை எழுதிய மூன்று வாசகர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு, அம்மாதத்துக்கான அதிர்ஷ்டசாலிகளாகப் புடைவை பரிசு பெறுவார்கள். **தொடரின் இறுதியில் ஒரு மெகா பரிசும் உண்டு!**

செப்டெம்பர் மாதக் கூப்பன்களை இணைத்து அனுப்ப

கடைசித் தேதி : **06.10.10**

ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

அனுப்பவேண்டிய முகவரி:
கல்கி பில்டிங்ஸ், 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

பெயர் : ....

முகவரி : ....

....

....

......................பின்கோடு:...................

தொலைபேசி : ....

இ-மெயில் : ....

செப்டெம்பர் - 5

'ஓட்டந்துள்ளல்' கலையை உருவாக்கியவர்

விடையை டிக் செய்யவும்

- [ ] ஊர்வசி
- [ ] கதகளி
- [ ] குஞ்சன் நம்பியார்
- [ ] பரதன்

பளிச் பரிகாரம்

பானு, சென்னை

என் மகனுக்குச் சென்ற ஆண்டு திருமணம் நடைபெற்றது. குழந்தை பாக்கியம் உண்டா குமா? வெளிநாடு செல்ல வாய்ப்புள்ளதா?

தங்கள் மகன் ஜாதகம் நல்ல யோக ஜாதகம். புத்திரப் பாக்கியம் 2011ல் செப்டம் பருக்குப் பிறகு உண்டு. அவர் வெளிநாடு களுக்குச் சென்று வேலை பார்ப்பார். ஆனால், அயல்நாடுகளில் நிரந்தரமாக செட்டில் ஆக வாய்ப்பில்லை.

கன்னி ராசிக்காரரான உங்கள் மாப் பிள்ளைக்கு உத்தியோக மாற்றம் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆனால், தொடர்ந்து ஏதேனும் வேலையில் இருப்பார். பெரிய அளவில் பிரச்னை எதுவும் இல்லை. திருவாரூர் அருகில் உள்ள திருக்கொள்ளிக்காடு சென்று பிரதோஷ வழிபாடு செய்துவிட்டு வரவும்.

கன்னி ராசிக்கு திருக்கொள்ளிக்காடு..! துலாம் ராசிக்கு ராமேஸ்வரம்!



ஆ.மணி, ஆற்காடு

என் மகள் ஜமுனாவின் ஜாதகத்தைப் பார்த்து அவளுக்கு எப்போது திருமணம் நடக்கும், நல்ல வேலை கிடைக்குமா என்று சொல்லுங்கள்?

தங்கள் மகளுக்கு முதலில் திருமணம் நடக்கும். அதன் பிறகு அரசாங்க வேலை கிடைக்கும். வள்ளிமலை சென்று முருகனை வழிபடவும்.

ஆர்.வெங்கட்ரமணி, கோயம்புத்தூர்

என் மாப்பிள்ளை எஸ்.நாராயணனின் ஜாதகம் அனுப்பியுள்ளேன். அவருக்கு வேலையில் ஏதேனும் பிரச்னை வந்து கொண்டே இருக்கிறது. உத்தியோகம் பற்றிய அவரது குழப்பம் எப்போது தீரும்?

சகுந்தலா, சிதம்பரம்

என் மகன் வைத்தியநாதனுக்கு வயது 38. இன்னும் திருமணம் நடக்கவில்லை. திருமணம் உண்டா? அப்படியானால் என்ன பரிகாரம்?

உங்கள் மகனுக்குத் திருமணம் ஒ

றரிகேசநல்லூர் வெங்கட்ராமன்



...ருடத்துக்குள் நடந்துவிடும். 2011 மே ...ாதத்திலிருந்து செப்டம்பருக்குள் திருமணம் ...டக்கும். சிதம்பரத்துக்கு அருகில் உள்ள ...மாம்புலியூர் சென்று தக்ஷிணாமூர்த்தியை ...ழிபடவும்.

லக்ஷ்மிநாராயணன் ராமஸ்வாமி, கடலூர்

என் மகள் ஷைலஜா ஜாதகம் அனுப்பி ...ள்ளேன். தற்போது பி.இ. மூன்றாம் ஆண்டு ...டித்து வருகிறாள். உயர்கல்வி, வேலை ...ாய்ப்பு, வெளிநாடு செல்லுதல், திருமணம் ...ூகியவை பற்றித் தெரிவிக்கவும். செவ்வாய் ...தோஷம் உள்ளதா?

உயர் கல்வி கற்பதற்கும் அயல்நாடுகளுக் ...ச் சென்று அங்கு படிக்கவும் வாய்ப் ...புள்ளது. தனியார் துறையில் நல்ல வேலை ...டைக்கும். செவ்வாய் தோஷம் உள்ளது. ...னினும் திருமண வாழ்க்கை மகிழ்ச்சியாக அமையும்.



ஆர்.ஸ்ரீநிவாசன், சென்னை - 4

6.3.1974 அன்று பிறந்த என் மகனுக்கு இது வரை திருமணம் ஆகவில்லை. தனியார் வங்கியில் மேலாளர் உத்தியோகம், நல்ல சம்பளம், ஆயில்யம் நட்சத்திரம் என்பதால் திருமணம் தாமதம் ஆகிறதா? என்ன பரிகாரம் செய்ய வேண்டும்?

உங்கள் மகனுக்குத் திருமணம் வெகு விரைவில் நடக்கும். மாதாமாதம் ஆயில்ய நட்சத்திர நாளில் திருவொற்றியூர் வடிவுடை அம்மன் கோயிலில் உள்ள ஆயில்ய நட்சத்திர லிங்கம் சந்நிதியில் பால் அபிஷேகம் அர்ச்சனை செய்து வழிபடவும். குறைந்த பட்சம் மூன்று மாதம் தொடர்ந்து ஆயில்ய நட்சத்திர நாளில் வழிபாடு செய்யுங்கள்.

சரணா, சென்னை

எனக்கு ரோகிணி நட்சத்திரம், ரிஷப ராசி. என் கணவருக்கு சித்திரை நட்சத்திரம், துலாம் ராசி. எங்களுக்குத் திருமணம் நடந்து பல வருடங்கள் ஆகியும் எங்களுக்குள் இன்னும் நல்ல அன்யோன்யம் ஏற்படவில்லை. என்ன பரிகாரம் செய்யலாம்?

ரிஷபமும் துலாமும் ராசி 6 - 8 ஆக வருவதால் சஷ்டாஷ்டக தோஷம் உள்ளது. மனம் ஒத்துப்போவது கடினம். ராமேஸ்வரம் சென்று இருவரும் அக்னி தீர்த்தம் முதல் கோடி தீர்த்தம் வரை 23 தீர்த்தங்களில் நீராடவும். பிரிவு ஏற்படாமல் இருக்கும்.

உங்கள் கேள்விகளை ஜாதகக் குறிப்போடு 'பளிச் பரிகாரம்'
என்று குறிப்பிட்டு அனுப்புங்க...
kalki@kalkiweekly.com க்கும் அனுப்பலாம்.

சென்னைக்கு ஹேப்பி பர்த் டே!

சென்னை நகர் 1639 ஆகஸ்ட் 22ல் பிறந்தது என கண்டுபிடிக்கப்பட்டு, 2004-ஆம் ஆண்டுலிருந்து அந்த நாளில் சென்னை டே கொண்டாடப்படுகிறது. அதையொட்டி ரோஜா முத்தையா நூலகம் சிறப்புக் கூட்டங்களை நடத்தியது. அதில், 'இருளில் கனவு உலகம் - சென்னையின் சினிமா அரங்குகள்' தலைப்பில் தமிழ் சினிமா வரலாற்று ஆய்வாளரான தியோடர் பாஸ்கரன் பேசியதிலிருந்து...


★சென்னையில் முதல் சினிமா 'பத்து நிமிட பேசா படம்'. எக்மோர் அருகே ஒரு டெண்ட்டில் வெள்ளைக்காரர்களால் திரையிடப்பட்டது. மின்சாரமில்லாமல் எரியும் மாக்னீஷ்ய நாடாக்கள் ஒளியில் காட்டப்பட்டது. தெரு ஓரங்களில் துவங்கி, பின்னர் மத்தியான நேரங்களில்



காலியாக இருக்கும் நாடக அரங்கங்களில் இப்படம் காட்டப்பட்டது.

★வெள்ளையர்களிடமிருந்து இதைக் கற்ற வின்ஸெண்ட் சாமிகண்ணு, 1905ல் இந்த முறையில் நாட்டின் பல பகுதிகளுக்கு டெண்ட்டுடன் பயணம்செய்து படங்கள் காட்டியிருக்கிறார். வட இந்தியாவில் பெஷாவர் வரை பயணித்துப் படம் காட்டி ஈட்டிய பணத்தில் தான் கோயம்புத்தூரில் 'வெரைட்டி ஹாலை'க் கட்டியிருக்கிறார்.

★தீண்டாமை மிகப் பரவலாக இருந்த அந்தக் காலகட்டத்தில் திரைப்பட அரங்குகளில் ஆங்கிலேயர்களும் எல்லா ஜாதி இந்தியர்களும் ஒன்றாகப் படம் பார்த்திருக்கின்றனர்.



★ தியோடர் பாஸ்கரன்


★சினிமா அரங்கங்கள் கம்பெனி நாடகங்களுக்கு மாற்றான ஒரு பொழுதுபோக்குச் சாதனமாக வளர்ந்ததால் அது நாடகக் கம்பெனி பழக்கங்களை அடியொற்றித் தொடக்கத்தில் மணி அடிப்பது, இடைவேளை விடுவது எல்லாம் கடைபிடிக்கப்பட்டன. இன்று உலகளவில் கடைபிடிக்கும் சினிமாவில் இடைவேளை என்பது சென்னையில்தான் தொடங்கியிருக்கிறது.

★மாக்னீஷ்ய நாடாக்கள் பயன்படுத்துவதால் அரங்கங்களில் தீ விபத்து அபாயம் கருதி பாதுகாப்பு விதிகள் மட்டும் உருவாயின. சினிமாவில் புராண சரித்திரப் பாத்திரங்கள்கூட கதர் தொப்பி அணிந்து மறைமுகமாகத் தேசிய விடுதலை விஷயங்களைப் பேச ஆரம்பித்த பின்னர், சென்சார் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. போலீஸ் கமிஷ்னர்தான் சென்சார் அதிகாரி.

★அண்ணல், தம் வாழ்நாளில் சினிமா அரங்குக்குச் சென்றது இல்லை. அவர் வந்த ஒரே சினிமா அரங்கம் சென்னையிலுள்ள மிட்லாண்ட் அரங்கம். அன்றைய சென்னைப் பல்கலைக்கழக மாணவர்கள் அவருக்கு ஒரு வரவேற்பு கொடுத்த இடம் அந்தச் சினிமா தியேட்டர். அரங்கத்திலேயே அந்த வரவேற்புப் பத்திரத்தை ஏலமிட்டபோது அதை வாங்கியவர் சுதந்திர போராட்ட வீரர் திருமதி லக்ஷ்மி சாமிநாதன்.

- ரமணன்

Fact Zone Special!



GOKULAM

September 2010 THE Magazine for Children

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57" Registered No.TN/CC (S) DN / 144 / 09 - 11" Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN / CC (S) DN / 70 / 09 /11" Registered as a Newspaper in Srilanka.

நவராத்திரி சிறப்பு சலுகை 01.09.10 முதல் 30.09.10




1.50 ct வைர நெக்லஸ்
18.00 gm தங்கத்தின் எடை
விலை ரூ. 1,08,000
சலுகை விலை
ரூ. 92,000



ஏழு கல் வைரத்தோடு
ஜிமிக்கியுடன் சேர்த்து
0.86cts
தங்கத்தின் எடை 9 கிராம்
ரூ. 64,000
தள்ளுபடி விலை
ரூ. 53,000

- வைர நகைகளுக்கு Perct 4000 தள்ளுபடி
- 7 கல் வைரத்தோடு - 23,000 முதல்
- வைர மூக்குத்தி 1700 முதல்
- பேன்சி வைரமோதிரம் 4500 முதல்
- பேன்சி வைரதோடு 4500 முதல்
- பேன்சி டாலர் கம்மலுடன் சேர்த்து 6500 முதல்
- அனைத்து வைரங்களும் V V S E F கலர்
- திருப்பி தரும்பொழுது வைரத்திற்கு மட்டும் 100% அன்றைய மார்கெட் விலை
- 500 முதல் 5000 வரை மாத சீட்டு + இரட்டிப்பு போனஸ்
- 15000 மேல் வாங்கும் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் நகை பெட்டி வழங்கப்படும்.





ஒரு ஜோடி
வைர வளையல்
1.24 ct
தங்கத்தின் எடை
25.00 gm
விலை
ரூ. 1,10,000
சலுகை விலை
ரூ. 99,000

*conditions Apply

Sri Palsani Jewels

110, Dr. Radha Krishnan Road, (Near Sri Krishna Sweets) Chennai - 4
Phone: 2811 1737, 2811 7036 | www.sripalsanijewels.net

Sunday Holiday

Shivaa